# பண்பாட்டு நோக்கில் திருமுறைகள்

முனைவர் தா. ஈசுவரப்பிள்ளை

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

# பண்பாட்டு நோக்கில் திருமுறைகள்

முனைவர் தா. ஈசுவரப்பிள்ளை

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES
இரண்டாம் முதன்மைச் சாலை
மையத் தொழில்நுட்பப் பயிலக வளாகம்
தரமணி, சென்னை - 600 113.

இராமலிங்க அபிராமி அறக்கட்டளைச் சொற்பொழிவு
(அறக்கட்டளை நிறுவியவர்: ஏ.ஆர்.ஏ. சிவக்குமார், சிங்கப்பூர்)

வரிசை எண் : 2

---


## BIBLIOGRAPHICAL DATA

| | | |
|---|---|---|
| Title of the Book | : | Paṇpāṭṭu nōkkil Tirumuṟaikaḷ |
| Author | : | Dr. T. Eswara Pillai<br>Professor of Tamil Literature<br>Tamil University<br>Thanjavur-613 010 |
| General Editor | : | Dr. T. Mahalakshmi<br>Research Assistant<br>International Institute of Tamil Studies<br>Tharamani, Chennai-600 113. |
| Publisher & © | : | International Institute of Tamil Studies<br>II Main Road, C.I.T. Campus,<br>Chennai-600 113.<br>Ph: 22542992 |
| Publication No. | : | 600 |
| Language | : | Tamil |
| Edition | : | First |
| Year of Publication | : | 2008 |
| Paper Used | : | 18.6 Kg TNPL Maplitho |
| Size of the Book | : | 1/8 Demy |
| Printing type used | : | 10 Point |
| No. of Pages | : | VIII+88 |
| No. of Copies | : | 1200 |
| Price | : | Rs. 30/- (Rupees Thirty Only) |
| Printed by | : | United Bind Graphics<br>189-D, Royapettah High Road<br>Mylapore, Chennai - 600 004. |
| Subject | : | Cultural aspects of Hymns |


---


அறக்கட்டளைச் சொற்பொழிவாளர் கருத்துகட்கு நிறுவனம் பொறுப்பன்று.

முனைவர் ம. இராசேந்திரன்
இயக்குநர் (முழுக் கூடுதல் பொறுப்பு)
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை-600 113

## முகவுரை

சங்க இலக்கியங்கள் தமிழ்ச் சமூகத்தின் தொன்மையும் வாழ்க்கை முறைகளும் வெளிப்பட ஏதுவான இலக்கியங்களாகக் காணப்படுகின்றன. இடைக்காலத் தமிழ்ச் சமூகத்தின் அரசியல் பண்பாட்டு வரலாற்றினை அறிய உதவுபவை சைவ இலக்கியங்கள் ஆகும்.

சங்ககால மக்கள் வாழ்க்கையில் வழிபாடு இருந்தது; அகப்புறப்பாடலில் கலந்து பாடப்பட்டது. ஆனாலும் சங்ககால இலக்கியப் போக்கில், சமயக் காழ்ப்புணர்வு தென்படவில்லை.

வழிபாடு, அறம், தத்துவம், மதம் ஆகியவை பக்தியாகி இலக்கியங்களாகவும் வெளிப்பட்டன. சங்ககாலத்தைவிடச் சிலப்பதிகாரத்திலும், மணிமேகலையிலும் வழிபாடுகளில் நெறிமுறைகள் காணப்படுகின்றன. வழிபாடு என்பது மனித இனங்களிடையே காணப்படும் தொன்மையான வாழ்வியல் முறைமையாக உள்ளது. தொல்காப்பியர்,

**தெய்வம் உணாவே மாமரம் புள்பறை**
**செய்தியாழின் பகுதியொடு தொகைஇ**
**. . . . .  . . . . . கருவென மொழிப**

என்று கூறுவதன்வழி தெய்வத்தைக் கருப் பொருளாக்கியுள்ளமை தெரிகின்றது.

பௌத்த, சமண சமயங்களுக்கிடையே சைவ, வைணவச் சமயங்களை வளர்த்திட நாயன்மார்களும், ஆழ்வார்களும் பாடுபட்டுள்ளனர். சமய வளர்ச்சி அவர்களின் முதன்மை நோக்கம். பக்தியை வளர்க்கத் தமிழ் பயன்பட்டது. தமிழும் பக்தியைப் பயன்படுத்திக் கொண்டது.

இங்ஙனம் தொடக்கத்தில் வழிபாட்டு நெறியாக விளங்கியது. கால ஓட்டத்தில், அதுவே மதமாகியிருக்கிறது. இதன் போக்கினைப் பிற்கால இலக்கிய வளர்ச்சியிலும் காணமுடிகின்றது.

அறம், பொருள், இன்பம், வீடு அடைதல் ஆகியவற்றின் அடித்தளத்தில் எழுந்த திருமுறைகளில் பண்பாட்டுக் கூறுகள் வெளிப்படுகின்றன. இவற்றைப் **பண்பாட்டு நோக்கில் திருமுறைகள்** என்ற இந்நூல் தெளிவுடனும், செறிவுடனும் தொகுத்துச் சுட்டுகின்றது. இந்நூல் தமிழ்ச் சமூக இலக்கிய வரலாற்றில் சைவத் திருமுறைகளின் தோற்றத்தையும், பக்தி இலக்கிய வளர்ச்சியையும் நுண்மாண் நுழைபுலத்துடன் சுட்டிக்காட்டுகின்றது. அத்துடன் திருமுறைப் பாடல்களின் வழி காலந்தோறும் பண்பாட்டின் படிநிலைகளில் ஏற்பட்டுள்ள மாற்றங்களை ஆழ்ந்து நோக்குவதாகவும் அமைந்துள்ளது.

ஆய்வு உலகத்திற்குத் தேவையான தரவுகளை வழங்கும் இந்நூலை எழுதிய தஞ்சை, தமிழ்ப் பல்கலைக்கழகப் பேராசிரியர், முனைவர் தா. ஈசுவரப்பிள்ளை அவர்களை அன்புடன் பாராட்டுகின்றேன்.

இந்நிறுவன வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து வருவதோடு தம் தனிப்பட்ட அக்கறையையும் காட்டிவரும் **நிறுவனத் தலைவரும் தமிழக அரசின் முதல்வருமான மாண்புமிகு டாக்டர் கலைஞர்** அவர்களுக்குத் தமிழுலகம் என்றும் நன்றிக் கடன்பட்டுள்ளது.

தமிழ்ப்பணிகளுக்கு ஆற்றுப்படுத்தி வரும் **மாண்புமிகு தமிழக நிதியமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன்** அவர்களுக்கும் நன்றி.

நிறுவனச் செயல்பாட்டுக்கு உறுதுணையாக இருந்துவரும் **தமிழ் வளர்ச்சி, அறநிலையம், செய்தி மற்றும் விளம்பரத் துறை அரசுச் செயலாளர் திரு கோ. சந்தானம் இ.ஆ.ப.** அவர்களுக்கும் நன்றி.

இவ்வறக்கட்டளைப் பொறுப்பாளரும் இந்நிறுவன ஆராய்ச்சி உதவியாளருமான முனைவர் தி.மகாலட்சுமி அவர்களின் உழைப்பு பாராட்டிற்குரியது.

இச்சொற்பொழிவு மற்றும் நூல் வெளியீடு தொடர்பான அனைத்து ஏற்பாடுகளையும் செய்த நிறுவனப் பணியாளர்களுக்கும், கணியச்சுச் சீரமைப்புச் செய்த திருமதி பி.கௌசல்யா மற்றும் இந்நூலை அழகுற அச்சிட்டுத் தந்த யுனைடெட் பைண்ட் அச்சகத்தாருக்கும் பாராட்டுகள்.

**இயக்குநர்**

# ஆசிரியரைப் பற்றி



57 வயது நிரம்பிய முனைவர் தா. ஈசுவரபிள்ளை 31.08.1951இல் பிறந்தவர். தஞ்சை, தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் இலக்கியத் துறையில் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றி வருகின்றார்.

இவர் முதுகலை தமிழ் மற்றும் சமூகவியலில் பட்டமும், மொழியியலில் சான்றிதழும் பெற்றவர். **தமிழில் தூது இலக்கியங்கள்** எனும் தலைப்பில் ஆய்வு செய்து முனைவர் பட்டம் பெற்றவர்.

தூது இலக்கிய ஒப்பீடு, பக்தி இலக்கியத்தில் சமுதாயப் பார்வை, சித்தர்களும் வேமனும், பத்தொன்பதாம் நூற்றாண்டில் சமுதாய மாற்றங்களும், தமிழ் இலக்கியப் போக்குகளும், வேதநாயகம் பிள்ளையின் படைப்புகளில் சமுதாயச் சிந்தனைகள், தமிழில் சிற்றிலக்கிய வரலாறு-முதற்பகுதி, மணிமேகலை-சமுதாயப் பார்வை ஆகிய நூல்களை இவர் எழுதியுள்ளார்; பிற்காலச் சோழர்காலத் தமிழ் இலக்கியம் காட்டும் சமுதாய, பண்பாட்டு வரலாறு எனும் நூல் வெளிவரவுள்ளது.

சுந்தரராமசாமியின் படைப்பிலக்கியம்-பன்முகப் பார்வை-2 தொகுதிகள், அதங்கோடு ஆய்வு மலர்கள் ஆகிய நூல்கள் இவரைப் பதிப்பாசிரியராகக் கொண்டு வெளிவந்துள்ளன.

இவரது நெறிகாட்டலில் பத்துப்பேர் முனைவர் பட்டம் பெற்றுள்ளனர்; மூவர் ஆய்வேடுகளைப் பல்கலைக் கழகத்திற்கு ஒப்படைத்துள்ளனர்.

# பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| முகவுரை | |
| ஆசிரியரைப் பற்றி | |
| நூல் - பண்பாட்டு நோக்கில் திருமுறைகள் | 1 |
| துணை நூல்கள் | 86 |

# பண்பாட்டு நோக்கில் திருமுறைகள்

ஒரு நாட்டின் சமுதாயச் சூழல், அரசியல் சூழல், பொருளாதாரச் சூழல், புலவர்களின் புலமைத் திறன், புலமை வேட்கை, மக்களின் மனப்போக்கு, மக்களின் சுவை உணர்வு முதலிய பல்வேறு காரணிகளால் காலந்தோறும் பல்வேறு இலக்கியங்கள் தோன்றி வளர்ந்து வருகின்றன. அவ்வாறு காணப்படும் இலக்கியங்களை அவற்றின் பொருண்மை, யாப்பு, அமைப்பு ஆகியவற்றின் அடிப்படையில் பல்வேறு நிலைகளில் வகைப்படுத்துவர். இவற்றை இலக்கிய வகைகள் என்பர்.

இவ்வகையில் தமிழ் மொழியிலும் பல்வேறு இலக்கிய வகைகள் காணப்படுகின்றன. அவற்றுள் ஒன்றே பக்தி இலக்கிய வகை.

## திருமுறைகளின் தோற்றம்

பக்தி இயக்கத்தின் விளைவாகத் தோன்றியதே பக்தி இலக்கியம். இறைவன் பெருமைகளையும் இறையனுபவங்களையும் கூறும் இலக்கியங்கள் அனைத்தும் பக்தி இலக்கியம் எனச் செப்பத்தகும். எனினும், தமிழ் இலக்கிய உலகில் பன்னிருதிருமுறைகளையும் நாலாயிரத் திவ்வியப்பிரபந்தங்களையும் மட்டுமே பக்தி இலக்கியம் எனக் கூறும் மரபு உள்ளது. எனவே, திருமுறைகளின் தோற்றம் பற்றி அறியப் பக்தி இயக்கம் தோன்றிய வரலாறு குறித்து அறிதல் இன்றியமையாதது ஆகும்.

தமிழ்மொழிக்கு இலக்கணம் கூறுவதோடு மட்டும் அமையாது தமிழர்தம் வாழ்க்கைக்கும் இலக்கணம் கூறும் நூலாகவும் தொல்காப்பியம் விளங்குகின்றது. தொல்காப்பியம்மூலம் தொல்காப்பியர் காலத்திலும், அதற்கு முன்பும்கூட மக்களிடையே சமய உணர்வு காணப்பட்டது எனக் கருத முடிகிறது.

தொல்காப்பியத்தில் இறைவனைக் குறிக்கத் தெய்வம், கடவுள் என்ற சொல்லாட்சிகள் இடம்பெறக் காணலாம். தொல்காப்பியர் திணை விளக்கம் கூறும்போது ஒவ்வொரு திணைக்கும் உரிய முதல், கரு, உரிப்பொருள்களைக் குறிப்பிடுகின்றார். அவ்விடங்களில் ஒவ்வொரு

திணைக்கும் உரிய கருப்பொருள்களில் தெய்வங்களையும் சுட்டுகின்றார். இதைப் பற்றிக் கூறும் தண்டபாணி தேசிகர், இன்பம், துன்பம் என்று உழல்கின்ற மக்களின் மனத்தில் அறநெறி சிறக்க முடியாதென்பதை உணர்ந்த தொல்காப்பியர் வாழ்க்கை சிறக்க மக்களின் சூழ்நிலைகள், பழக்கவழக்கங்கள் முதலியவற்றிற்கேற்பக் கடவுளர்களைப் படைத்துக் காட்டியுள்ளார் எனக் குறிப்பிடுகின்றார்.

கொடிநிலை, கந்தளி, வள்ளி என்ற வழிபாட்டு முறைகள் பண்டைத் தமிழர்களின் மெய்ப்பொருட் சிந்தனைகளையும், பண்டே உருவான பரம்பொருளின் தன்மைகளையும், அதன் ஆழ்ந்த தத்துவங்களையும் வெளிப்படுத்துவனவாகக் கொள்ளலாம் என இராமசாமிப்பிள்ளை கூறுகின்றார். தொல்காப்பியம்மூலம் அக்காலச் சமுதாயத்தில் நிலவிய பழமையான வழிபாட்டு முறையாகிய வெறியாடல் பற்றியும் அறிய முடிகின்றது.

அவரவர் செய்த நற்செயல்கள், தீச்செயல்கள் ஆகியவற்றிற்கேற்ப நன்மைதீமைகளை வரையறுக்கும் தெய்வம் ஒன்று உண்டு என நம்பிய மக்களின் நம்பிக்கை வெளிப்படுத்தப்படுகின்றது. இது பால்வரை தெய்வம் எனச் சுட்டப்படுகின்றது. எனவே, தொல்காப்பியர் காலத்தில் சமயம் மக்கள் மனத்தில் அரும்பிய நிலையில் காணப்பட்டது எனக் கருதலாம். பொதுவாக இக்காலத்தில் கொள்ளப்படும் சமயம் என்பதன் பொருளையோ, அடிப்படையையோ வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் வாழ்ந்த மக்களிடம் காணமுடியாது என்றும், அக்கால மக்களிடம் தோன்றிய எண்ணங்களே இன்று சமயம் என்று பேருரு கொள்ள அடிப்படைகளாயின என்றும் கா. சுப்பிரமணியன் கூறும் கருத்து இவண் குறிப்பிடத்தக்கதாகும்.

சங்க இலக்கியம் மூலம் போர், வீரம், காதல் ஆகியன மட்டும் அன்றிச் சமயமும் மக்கள் வாழ்க்கையில் இன்றியமையாத இடம் வகித்திருந்தது என்பதை அறிய முடிகிறது. சமய உணர்வு மக்கள் மனத்தில் படர்ந்து காணப்பெற்ற நிலையை அறிய முடிகிறது.

சங்க இலக்கியங்களுள் ஒன்றாகக் கருதப்பெறும் பரிபாடலில் திருமால் பற்றியனவாக ஆறு பாடல்கள் இடம்பெறுகின்றன. முருகன் பற்றியனவாக எட்டுப்பாடல்கள் இடம்பெறுகின்றன. திருமுருகாற்றுப்படை முழுக்க முழுக்க இறைவன் பற்றியதாகவும் இறை உணர்வை வெளிப்படுத்துகின்ற வகையிலும் அமைந்து காணப்படுகின்றது. பிற சங்க நூல்கள் இறைவனைப் பற்றியனவாக அமையவில்லையெனினும்,

வருணனைகள், உவமைகள் என ஆங்காங்கே சமயச் செய்திகளைத் தருகின்றன.

சங்க காலத்தில் இறைவனைப் பொருளாகக் கொண்டு பாடப்பெற்ற திருமுருகாற்றுப்படை, பரிபாடல் முதலிய பனுவல்களைத் தவிர ஏனைய தொகை நூல்களில் பெரும்பாலும் உவமைகளாகத்தான் தெய்வங்கள் இயம்பப்பெற்றுள்ளன என்ற சோ.ந. கந்தசாமியின் கருத்து[1] இவண் சிந்திப்பதற்குரியது.

இறைவன், கடவுள், படைத்தோன் என்ற சொல்லாட்சிகள், இறைவனைக் குறிப்பனவாகச் சங்க இலக்கியத்துள் காணப்பெறுகின்றன. அருந்தெறல் கடவுள், இரும்புகழ்த் தெய்வம் எனவரும் தொடர்களைச் சான்றுகளாகக் காட்டலாம். இறைவன் உறையும் இடங்களாக ஆலமரம், கடப்பமரம், கள்ளிமரம், மாமரம், முதுமரம், வேங்கை, ஆறு, ஆற்றிடைக் குறைகள், சந்திகள், தூண்கள், நீர்த்துறைகள் என்பன கருதப்பெற்றிருந்தன. ஒவ்வொரு பொருளிலும் ஓர் ஆவி குடியிருக்கும் என்று நம்பிய நம்பிக்கையே ஆன்மீகம் எனப்படும் என்று வாசுகி பெரியதாசன் குறிப்பிடுகின்றார். மக்கள் இல்லுறை தெய்வங்களையும் வழிபட்டுள்ளனர். குடும்பத் தெய்வமாகவோ, தனிப்பட்ட தெய்வமாகவோ கருதி இல்லில் வைத்து வழிபடும் தெய்வம் இல்லுறை தெய்வம் எனத் தேவநேயன் விளக்கம் தருகின்றார்.

ஆலமர் கடவுள், ஆலமர் செல்வன், காஅய் கடவுள், முக்கட் செல்வன், முக்கணான் என்றெல்லாம் சங்க இலக்கியத்தில் சிவபெருமான் குறிப்பிடப்படுகின்றான். ஐந்து தலைகள், முக்கண்கள், நீலமணி மிடறு, சிவந்த நிறம், விரிசடை உடையவனாகவும், சடையில் கங்கையைத் தரித்தவனாகவும், உமையவள் கணவனாகவும், பிறைத்திங்கள் அணிந்தவனாகவும் சிவபெருமானைச் சங்க இலக்கியங்கள் காட்டுகின்றன. சிவபெருமானின் ஆனேற்று ஊர்தி, ஆனேற்றுக் கொடி, மழு, கணிச்சி, சூலம் ஆகிய படைகள், ஆதிரை நாள் என்பனவும் குறிப்பிடப்படுகின்றன.

இதைப்போன்று கோவலன், நெடியோன், நெமியோன், மாயவன், மாயோன், மால் என்ற சொற்களால் திருமால் சங்க இலக்கியத்தில் காட்டப்பெறுகின்றான். திருமாலின் நிறம், கண்கள், மாலை, படை, ஊர்தி, கொடி என்பனவும் வருணிக்கப்படுகின்றன. திருமால் திருமகளை மார்பில் கொண்டவனாகவும் திருவோண நாளனாகவும் காட்டப்பெறுகின்றான். முருகன் சங்க இலக்கியத்தில் செவ்வேள், சேஎய், முருகன், முருகு, வேள் என்ற

பெயர்களால் குறிப்பிடப்படுகின்றான். சிவன், உமையின் புதல்வன், கொற்றவைச் சிறுவன், காடுகிழாள் குழவி என முருகன் காட்டப் பெறுகின்றான். ஆறு முகங்கள், பன்னிரு கைகள் உடையவனாகவும் சிவபெருமானின் நெற்றிக் கண்களினின்றும் தோன்றியவனாகவும் சுட்டப் பெறுகிறான். முருகன் பற்றிய குறிப்புகள் சங்க காலத்தில் தமிழ்ப் பண்பாட்டுடன் ஆரியப் பண்பாடு கலந்துவிட்ட போக்கைக் காட்டுவனவாகக் கொள்ளலாம். இதற்குச் சான்றுகளாகத் திருமுருகாற்றுப்படைக் குறிப்புகளையும் காட்டுவர்.

மேலும், தீக்கடவுள், இந்திரன், கொற்றவை, சாத்தான், செய்யோன், நான்முகன், பலராமன் முதலிய கடவுள்கள் பற்றிய குறிப்புகளும், அணங்கு, சூர் பற்றிய குறிப்புகளும், சங்க இலக்கியத்தில் காணப்படுகின்றன.

இறைவனுக்குக் கோவில்கள் எழுப்பியும் சங்க கால மக்கள் வழிபட்டுள்ளனர். அம்பலம், இறைப்பொதுவில், கோட்டம், நகர் முதலிய பெயர்கள் கோயில்களைச் சுட்டுவனவாகக் கொள்ளலாம். கோயில்கள் சுட்ட செங்கல்களால் கட்டப்பட்டுள்ளன. அக்கோயில்களில் குறுக்குச் சுவர்களும் மரத்தாலான விட்டங்களும் காணப்பட்டன. கோயில்களின் மேல்மாடங்களிலும் தூண்களிலும் கடவுட் படிமங்கள் காணப்பட்டன. கோயில்களின் உள்ளே யானைகள் செல்லுமளவுக்கு அவை உயரமுடையன வாகத் திகழ்ந்தன. மக்கள் சாணத்தால் கோயில்களை மெழுகினர் என்பன போன்ற செய்திகளையும் சங்க இலக்கியம்மூலம் அறிய முடிகின்றது. விழவு, சாறு, தெய்வவிழா என்ற சொற்கள்மூலம் அக்கால மக்கள் இறைவனுக்கு விழாக்கள் எடுத்து வழிபட்டமையையும் உணரலாம். ஒலி வருணனைகளில் விழாக்களின் ஒலி வருணனையும் இடம்பெறக் காணலாம்.

இயற்கையிறந்த சக்திகளை வழிபடுவதாலும் அச்சக்திகளை வேண்டுவதாலும் அவற்றிற்குப் பலி இடுவதாலும் தாம் வேண்டியவற்றை அடையலாம் என்ற நம்பிக்கை தொன்மைக்காலச் சமுதாயத்தில் நிலவியது என்று கா. சுப்பிரமணியம் கூறும் கருத்திற்கிணங்க, உலகைக் காத்தும் படைத்தும் அருள்பவன் இறைவன். இறைவழிபாடுகளால் மறுமை உலகம் கிட்டும். விளைச்சலின் முதற்பகுதியை இறைவனுக்கு அளித்தால் நல்ல பலன்கள் கிடைக்கும். எச்செயலையும் இறைவனை எண்ணிச் செய்ய வேண்டும் முதலான நம்பிக்கைகள் அக்காலச் சமுதாயத்தில் இடம் பெற்றமையைச் சங்க இலக்கியம் காட்டுகின்றது.

சங்ககாலம் இனக்குழுச் சமுதாய அமைப்பு மாறி நாகரிகச் சமுதாய அமைப்பு மலரும் காலகட்டத்தில் காணப்பட்டது என்ற சமுதாய வரலாற்று அறிஞர்களின் கருத்திற்கிணங்கச் சங்க காலத்தில் இனக்குழுச் சமுதாயச் சமயத்தின் எச்சக் கூறுகளையும் காண முடிகின்றது. சான்றுகளாக மழைச் சடங்குகள், வேட்டைச் சடங்குகள், இயற்கை வழிபாடுகள் ஆகியனவற்றைக் கூறலாம்.

வேதம் ஓதுதல், வேதச் சடங்குகள் செய்தல், வேள்விகள் செய்தல் முதலான வைதீக நெறிமுறைகள் காணப்படுவதால் வைதீக சமயத்தைப் பற்றியும் அறிய முடிகிறது.

இவற்றால் சங்க காலத்தில் சைவம், வைணவம், வைதீக சமயங்கள் காணப்பட்டன என்பதையும், இனக்குழுச் சமயத்தின் எச்சக்கூறுகள் காணப்பட்டன என்பதையும், சமயம் மக்கள் வாழ்க்கையில் பின்னிப்பிணைந்து காணப்பட்டது என்பதையும் அறியலாம்.

சங்க காலத்தை அடுத்து நிலவிய அரசியல், சமுதாயச் சூழல்களால் பிற இனத்தவர் தமிழ் மண்ணில் ஆட்சி செய்யும் நிலை ஏற்பட்டது. களப்பிரர்கள் தமிழகத்தின்மீது படையெடுத்து வந்து தமிழகத்தைக் கைப்பற்றினர். கானப்பேரெயில் கடந்த உக்கிரப்பெருவழுதியின் ஆட்சிக் காலத்துக்குப் பின்னால் சங்கத் தமிழரின் சுதந்திர வாழ்வு தற்காலிகமாக முற்றுப்பெற்றது என ந.சுப்பிரமணியன் குறிப்பிடுகின்றார். இவ்வாறு தமிழகம் வந்த களப்பிரர்கள் கி.பி. ஆறாம் நூற்றாண்டின் இறுதியில் சிம்மவிஷ்ணு பல்லவனும் பாண்டியன் கடுங்கோனும் தம்மை எதிர்த்துப் போரிட்டு வெற்றி பெறுவது வரையிலும் காவிரிப் படுகையில் அரசிருக்கையை வைத்துத் தமிழகத்தின் மத்தியிலிருந்து ஆண்டனர் என வி.டி. செல்வம் கூறுகிறார்.

களப்பிரர்களைப் போலவே பல்லவர்களும் தமிழகம் வந்தனர். கி.பி. ஆறாம் நூற்றாண்டின் இறுதிவரையிலும் தமிழகத்தின் வடபகுதி முற்காலப் பல்லவர்களாலும் நடுப்பகுதி களப்பிரர்களாலும் தென்பகுதி பாண்டியர்களாலும் ஆளப்பட்டு வந்தமையை வரலாற்றறிஞர்கள் குறிப்பிடுகின்றனர்.

இக்காலச் சூழலில் தமிழகம் மனித மைய ஈர்ப்புச் சூழலிலிருந்து சமய மைய ஈர்ப்புச் சூழலுக்கு மாறத்தொடங்கியதாகக் கருதுவர். சங்கம் மருவிய காலப்பகுதியில் தமிழகத்தில் சமணமும் பௌத்தமும் செல்வாக்குப்

பெறத் தொடங்கின. இச்சமயங்களை ஏற்றுக்கொள்வதற்குரிய சூழல்களும் சங்கம் மருவிய காலத்தில் காணப்பட்டன.

இனக்குழுச் சமுதாய அமைப்பின் சிதைவுக்குப்பின் அம்முறையில் காணப்பெற்ற கூட்டு வாழ்க்கை முறைக்குப் பதில் தங்களை இணைத்துக் கொள்ள ஏற்றதொரு புதிய பிடிப்பினை மக்கள் எதிர்பார்த்தனர். இச்சூழலில் சமண, பௌத்த சமயக் கருத்துகள் அம்மக்களின் வாழ்க்கை முறைக்கு வழிகாட்டுவனவாய் அமைந்தன.

போர்கள், மது அருந்துதல், ஊன் உண்ணல் போன்றவற்றால் மனம் சலிப்படைந்திருந்த மக்களுக்குச் சமண சமயங்கள் அறிவுறுத்திய ஊன் உண்ணாமை, மது அருந்தாமை, அமைதி, ஒற்றுமை, ஒழுக்கம் போன்ற கொள்கைகள் மகிழ்வளிப்பனவாய் அமைந்தன.

சமணர்கள் அளித்த இலவசக் கல்வி, இலவச மருத்துவம், மக்களிடையே வேற்றுமை பாராட்டாமை, தமிழ்மொழிப் பற்று, மன்னர்களின் ஆதரவு ஆகியவற்றால் மக்கள் சமண சமயத்தை ஆதரித்தனர். சமண சமய வளர்ச்சி நிலையைச் சிலப்பதிகாரம் தெளிவாகக் காட்டுகின்றது.

சமண சமயத்தைப் போன்று பௌத்த சமயமும் மக்களின் பேராதரவைப் பெற்றது. பௌத்தத்தின் சமயக் கொள்கைகள், மருத்துவத் தொண்டு, கல்வித்தொண்டு, காணார், கேளார், கால்முடப்பட்டோர் போன்றவர்களுக்கு ஆதரவு அளித்தல், அறச்சாலைகள் அமைத்தல், அனைவரையும் வேறுபாடு கருதாது சமமாக மதித்தல் போன்றவற்றால் ஈர்க்கப்பட்ட மக்கள் அச்சமயத்திற்கும் பேராதரவு அளித்தனர். பௌத்த சமய வளர்ச்சி நிலையை மணிமேகலை தெளிவாகக் காட்டுகிறது.

இவற்றால், சங்கம் மருவிய காலத்தில் சைவம், வைணவம், வைதீகம், சமணம், பௌத்தம் ஆகிய சமயங்கள் காணப்பெற்றன என்பதை அறியலாம்.

இச்சமயங்கள் மக்களிடையே செல்வாக்குப் பெறப் போட்டியிட்டன. பக்தி இலக்கியம் மூலம் இத்தகைய சமயப் பூசல்களை அறிய முடிகிறது.

திருமுறைகள் சமணர்களை இகழும் உருவினர், முடைநாற்றம் உடையவர்கள், மாசுமெய்யர், கொசுக்கள் நீங்காத கண்களை உடையவர்கள், ஊத்தை வாயர், பாசி படிந்த பற்களை உடையவர்கள், நின்றுண்பவர், அறம் அறியாதவர், அறிவில் சிந்தையர், அவம் ஒன்றும் நெறியினர்,

உண்மையில்லாதவர், உணராத வேடம் உடையவர், செதுமதியார், நேசமிலார், மருளும் மனத்தவர், மாசர், மூக்கினால் முரன்று ஓதுபவர், மூர்க்கர், வன்கணர், வீறிலாக் குண்டர் என்றெல்லாம் இகழ்ந்துரைக்கப்படுதல் சைவ, சமணப் பூசல்களை வெளிப்படுத்தும் நிலையில் அமைதலைக் காணலாம்.

இதைப்போன்றே திருமுறைகளில் அழுக்கேறிய உடம்பினை உடையவர்கள், உணராத வேடம் உடையவர்கள், குறியறியாதவர், நன்றி உணராதவர், நிறை ஒன்றில்லாதவர், புல்லறிவாளர், புறங்கூறுவோர், பேதையர், போர்வை உடையவர்கள், மண்டைப் போதியர், மதியற்றவர் எனவரும் பௌத்தர்கள் பற்றிய குறிப்புகள் சைவ, பௌத்த சமயப் பூசல்களைக் காட்டுவனவாய் அமைகின்றன எனலாம்.

இத்தகைய சமயச் சூழலில் சைவமும், வைணவமும் இணைந்து பக்தி இயக்கத்தை உருவாக்கின. வைதீகம், சைவம், வைணவம், சமணம், பௌத்தம் ஆகிய சமயங்கள் தத்தம் செல்வாக்கைப் பெருக்க முயன்ற போட்டியில் வைதீக, சமண, பௌத்த சமயங்கள் செல்வாக்குக் குன்றின.

வைதீக சமயம் அந்தணர்கள் நலம் ஒன்றை மட்டுமே கருத்தில் கொண்டமை,

வேதங்கள், சாத்திரங்கள் அடிப்படையிலான சடங்கு நெறிகளைக் கொண்டிருந்தமை,

மேல்தட்டு மக்களின் சமயமாகத் திகழ்ந்தமை,

பிறர் வேதங்களைக் கற்பதைத் தடை செய்தமை,

தானம் பெறுவது ஒன்றை மட்டுமே கண்ணும் கருத்துமாகக் கொண்டிருந்தமை,

வேள்விகள் செய்வதையே நோக்கமாகக் கொண்டிருந்தமை,

சாதி வேறுபாடுகளைப் பாராட்டியமை,

மன்னர்களின் ஆதரவு குறைந்தமை

போன்ற பல காரணங்களால் சமயப் போட்டியில் வைதீக சமயம் வீழ்ச்சி அடைந்தது. வேள்விக்குடிப் பட்டயம் வைதீக சமயம் ஒடுக்கப்பட்டுப் பிரம்மதேயங்கள் அழிக்கப்பெற்றமையைக் காட்டுவதாக கே. கே. பிள்ளை குறிப்பிடுகிறார்.

சமண சமயம் அறிவுறுத்தும் யாக்கை நிலையாமை, இளமை நிலையாமை முதலான நிலையாமைக் கொள்கைகள் மக்கள் மனத்தில் சஞ்சல உணர்வை ஊட்டின. இதனால் மக்கள் மனம் சலிப்படைந்தது.

சமண சமயம் வலியுறுத்தும் கடுமையான துறவற நெறிகளை மக்களால் பின்பற்ற இயலவில்லை.

மன்னர்கள் சமண சமயத்திற்கு ஆதரவு அளித்தமையுடன் பெருமளவு நிலங்களையும் பொருட்களையும் தானங்களாக அளித்தனர். இவற்றால் சமண சமயத் துறவிகள் பொருளாதார நிலையில் மேம்பட்டுக் காணப்பட்டனர். இதனால் நாளடைவில் தம் முற்போக்குச் சிந்தனைகளை இழக்கத் தொடங்கினர். இதனால் மக்களின் நன்மதிப்பைச் சமண சமயம் இழந்தது. கடும் துறவறத்தை வலியுறுத்தச் சமண சமயம் பெண் வெறுப்பை வலியுறுத்தியது. பெண்கள் இப்பிறப்பில் துறவறத்தை மேற்கொண்டு வீடுபேற்றை அடைய முடியாது. அடுத்த பிறப்பில் ஆணாகப் பிறந்து, துறவறத்தை மேற்கொண்டு அதன் பிறகே வீடுபேற்றை அடைய முடியும் என்றனர். இதனால் சமண சமயம் பெண்களின் ஆதரவை இழந்தது; மன்னர்களின் ஆதரவும் குன்றியது.

இக்காரணங்களால் சமயப் போட்டியில் சமண சமயமும் செல்வாக்கை இழந்தது. பௌத்த சமயத்தில் ஈனயானம், மகாயானம், சிராவக யானம், மந்திர யானம் என்ற பிரிவுகள் ஏற்பட்டன.

மன்னர்களும் மக்களும் அளித்த தானங்களால் பௌத்தத் துறவிகள் பொருளாதார நிலையில் மேம்பட்டுக் காணப்பட்டனர். இதனால் இவர்கள் தம் கடமைகளை மறந்து இன்பம் துய்க்கத் தலைப்பட்டனர்.

இக்காரணங்களால் பௌத்த சமயமும் செல்வாக்கு இழக்கத் தொடங்கியது.

சமண, பௌத்த சமயங்கள் கடுமையான கட்டுப்பாடுகளை விதித்தமையால் தடுமாறிக் கொண்டிருந்த மக்கள் மத்தியில் நாயன்மார்களும் ஆழ்வார்களும் வழிபாட்டு முறையை எளிமையாக்கினர்.

இல்லற வாழ்க்கை வாழ்ந்து கொண்டே இறைவனிடம் உண்மையான அன்பு செலுத்தி இறைவனை வழிபட்டுப் பேரின்பப் பெருநிலையை அடையலாம் என்றனர். உலகம் இன்பமயமானது. மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்

இன்பம் பாலிக்கும் இப்பிறவி என்பன போன்ற கருத்துக்கள் நிலையாமை எண்ணத்தில் சஞ்சலம் கொண்டிருந்த மக்களுக்கு மகிழ்வை அளித்தன.

மக்கள் அஞ்சி நடுங்கிக் கொண்டிருந்த ஈமப்புறக் காட்டைக் காரைக்கால் அம்மையார் இறைவன் திருநடனமிடும் நடன அரங்காக்கிக் காட்டியதால் மக்கள் மனத்தில் வாழ்க்கை பற்றிய பிடிப்பு ஏற்பட்டது.

பக்தி இயக்கத்துக்கு நாடாளும் மன்னர்களின் பேராதரவு கிட்டியது. மன்னன் எவ்வழி மக்கள் அவ்வழி என்பதற்கேற்ப மக்களின் ஆதரவும் கிட்டியது. மெய்ப்பொருள் நாயனார், கோச்செங்கட்சோழன், காடவர் கோன், அநபாய சோழன், இடங்கழியார், புகழ்ச்சோழர் போன்றோரின் இறைப் பணிகளையும் அறிய முடிகிறது.

நாயன்மார்களின் வாழ்க்கை நிகழ்ச்சிகளைக் கண்ட மக்கள் சைவ சமயத்தில் தம்மைப் பெரிதும் ஈடுபடுத்திக் கொண்டனர். திருநாவுக்கரசரின் சூலை நோய் நீங்கப் பெற்றமை, திருநாவுக்கரசரைக் கல்லைக்கட்டிக் கடலில் போட்டபோது மிதந்தமை, சுண்ணாம்புக் காளவாய் குளிர்ச்சியாய் அமைந்தமை, கொல்ல வந்த யானை வணங்கியமை, பொய் விமானத்தை அகற்றியமை, சம்பந்தர் பாண்டியனின் வெப்பு நோயை அகற்றியமை, அனல்வாதம், புனல்வாதம் செய்து வென்றமை, சமணர்களைக் கழுவேற்றியமை போன்ற அடியார்களின் செயல்கள் மக்களைக் கவர்ந்தன.

இறை அடியார்கள் மக்களுக்கு அறிவுரைகள் கூறியதுடன் அமையாது தம் வாழ்க்கையில் வாழ்ந்தும் காட்டினர்.

சமுதாயத்தில் சாதி, பொருளாதாரம் ஆகியவற்றின் அடிப்படையில் காணப்பெற்ற ஏற்றத்தாழ்வுகள் இறைவனை அடையத் தடைகளல்ல என்பதுடன், இறையடியார்களிடையே இத்தகைய ஏற்றத்தாழ்வுகள் கிடையா என்றும் அறிவுறுத்தினர்.

இறைவன் சாதி வேறுபாடுகளும் பொருளாதார வேறுபாடுகளும் கருதாதவன். உண்மை அன்புடன் தம்மை வணங்குவோர் எவரேனும் அவர்களுக்கு அருளும் அருட்பண்பினன் என்றெல்லாம் வலியுறுத்தினர்.

பக்தி இயக்க அருளாளர்கள் தமிழ்ப்பற்றுடன் திகழ்ந்ததுடன் தமிழ்ப்பற்றையும் ஊட்டினர். தமிழ்மொழி இறைவனுடன் தொடர்புறுத்தப்பட்டுப் போற்றப்பெற்றது. திருஞானசம்பந்தர் நற்றமிழ் ஞானசம்பந்தன், தமிழ் ஞானசம்பந்தன் எனத் தம்முடன் தமிழைத் தொடர்புறுத்திக் கூறக் காணலாம்.

பெண்கள் இல்லறத்தில் ஈடுபட்டுக்கொண்டே வழிபாடுகளியற்றி இறைவனை வழிபட்டுப் பேரின்பப் பெருநிலையை அடையலாம் எனப் பக்தி இயக்க அருளாளர்கள் கூறினர். திலகவதியார், காரைக்கால் அம்மையார், மங்கையர்க்கரசியார் போன்றோரும் இறைநெறியில் ஈடுபட்டனர். இதனால் பெண்களின் பேராதரவு கிடைத்தது.

சமூக மதிப்புகளை வலியுறுத்த மக்களிடையே வழக்கத்திலிருந்த புராணக் கதைகளைப் பயன்படுத்தினர்.

பக்தி இயக்கச் சான்றோர்கள் ஒவ்வொரு தலம்தோறும் சென்று அங்குள்ள இறைவனைப் போற்றிப் புகழும்போது அந்தந்தத் தலங்களையும் வருணித்துப் புகழ்ந்தனர். இதனால் மக்களிடையே வட்டாரப் பற்றூட்டப்பட்டது.

இவ்வாறு பல காரணங்களால் பக்தி இயக்கம் மக்களின் பேராதரவைப் பெற்றுப் பெருவளர்ச்சியுற்றது. இப்பக்தி இயக்கத்தின் விளைவாகத் தோன்றியதே பக்தி இலக்கியம். இப்பக்தி இலக்கியத்தில் அடங்குவனவே திருமுறைகள்.

திருமுறைகள்

திருஞானசம்பந்தர் பாடிய பதிகங்கள் முதல், இரண்டாம், மூன்றாம் திருமுறைகள் ஆகும். திருநாவுக்கரசர் பாடிய பதிகங்கள் நான்காம், ஐந்தாம், ஆறாம் திருமுறைகள் ஆகும். சுந்தரர் பாடியவை ஏழாம் திருமுறையாக வைக்கப்பெற்றுள்ளன. மாணிக்கவாசகர் இயற்றிய திருவாசகமும், திருக்கோவையாரும் எட்டாம் திருமுறையாகும். கருவூர்த்தேவர், பூந்துருத்தி நம்பிகாட நம்பி, கண்டராதித்தர், வேணாட்டடிகள், திருவாலியமுதனார், புருடோத்தம நம்பி, சேதிராயர் ஆகியோர் பாடிய பாடல்கள் ஒன்பதாம் திருமுறை எனப்படுகின்றன. திருமூலரின் திருமந்திரம் பத்தாம் திருமுறையாகக் கருதப்பெறுகிறது. திருவாலவுடையார், காரைக்காலம்மையார், ஐயடிகள் காடவர்கோன், சேரமான் பெருமாள், நக்கீரதேவ நாயனார், கல்லாடதேவ நாயனர், கபிலதேவ நாயனார், பரணதேவ நாயனார், இளம்பெருமாள் அடிகள், அதிராவடிகள், பட்டினத்துப்பிள்ளையார், நம்பியாண்டார் ஆகியோரின் பாடல்கள் பதினொன்றாம் திருமுறையாகவும், சேக்கிழாரின் பெரியபுராணம் பன்னிரண்டாம் திருமுறையாகவும் வைக்கப்பெற்றுள்ளன.

திருமுறை என்ற பெயர் ஏற்பட்டமைக்குரிய காரணங்களாகப் பின்வருவன அறிஞர்களால் கூறப்படுகின்றன.

தெய்வத்தன்மையும் அழகும் அருட்செல்வமும் நிறைந்த பனுவல்.

முறை என்றால் தோத்திரம் என்று பொருள்.

தோத்திரப் பாடல்களைக் கொண்ட பனுவல்.

முறை என்றால் ஒழுங்கு, நீதி, அறம் என்று பொருள்கள். வாழ்வியலுக்குப் பயன்படும் அறங்களை, ஒழுங்குகளை, நீதிகளைக் கூறும் பனுவல் என்றெல்லாம் விளக்கங்கள் அளிக்கப்படுகின்றன.

இத்திருமுறைகள்,

சங்க இலக்கியங்களைப்போன்று மூல இலக்கியங்களாகத் திகழ்கின்றமை,

அக்காலச் சமுதாய வரலாற்றை அறியத் துணை நிற்கின்றமை,

பல்வேறு ஊர்களை, இனங்களைச் சார்ந்தவர்களால் பாடப்பெற்றமை,

இசை, ஓவியம், சிற்பம் போன்ற கலைகளின் வளர்ச்சிக்கு உறுதுணையாகின்றமை,

இலக்கியத்தரத்தில் உயர்ந்து நிற்கின்றமை,

பல புதிய இலக்கிய வகைகளைத் தமிழ் இலக்கிய உலகிற்கு அறிமுகப்படுத்தியுள்ளமை,

தமிழ்ப் பண்பாட்டைப் பறை சாற்றுகின்றமை,

சமத்துவச் சிந்தனைகளை வலியுறுத்துகின்றமை,

பல புதிய பா, யாப்பு வகைகளை அறிமுகம் செய்கின்றமை,

சிறந்த வாழ்வியல் நூலாக அமைகின்றமை,

பல வரலாற்றுச் சான்றுகளைக் கொண்டுள்ளமை முதலான பல்வேறு சிறப்புகளைக் கொண்டு திகழக் காணலாம்.

## சமுதாயமும் சமயமும்

தனி மனிதர்களை உறுப்பினர்களாகக் கொண்ட ஓர் அமைப்பே சமுதாயம் எனப்படும். குறிப்பிட்ட எல்லைக்குள் வாழ்கின்ற மக்களால் மேற்கொள்ளப்பெறும் செயலெதிர் செயல்களின் அனைத்து முறைகளையும் சமுதாயம் எனலாம் என்ற விளக்கமும் உள்ளது. தனிப்பட்டவர்களின்

கூட்டமைப்பு, உரிமை மற்றும் ஒற்றுமை உணர்வு, ஏகதேசம் நிரந்தர இயல்பு முதலான சிறப்புக் கூறுகளைக் கொண்டது சமுதாயம் என்று பி.சி. டெப் என்ற சமூகவியலறிஞர் விளக்கம் தருகின்றார்.[2]

இச்சமுதாயம் செயல்படச் சமுதாயத்தில் பல்வேறு நிறுவனங்கள் காணப்பெறும். ஒழுக்க பூர்வமானதாகவும், சமூகப் பூர்வமானதாகவும் நிர்ணயிக்கப்பெற்றவை எனக் கருதத்தக்க சமூக நடவடிக்கைகளின் சாதாரண முறை நிறுவனம் ஆகும் என்று ஜேம்ஸ் பி. மெக்கி குறிப்பிடுகின்றார்.[3] நிலைத்து நிற்பதும், அமைக்கப்பெற்றதும், நிறுவப்பெற்றதும், சமுதாயத்தில் ஒன்று அல்லது பல சிக்கல்களைத் தீர்க்கும் ஒழுங்கு முறைகளைக் கொண்டதுமாகிய ஒன்றே நிறுவனம் என்று ரொனால்ட். டபிள்யூ. ஸ்மித் போன்றோர் கருதுகின்றனர்.[4] இந்நிறுவனங்கள் சமுதாயத்தின் கட்டப்பட்ட கட்டடங்கள் எனக் கருதப்பெறுகின்றன. இவ்வாறு சமுதாயத்தில் காணப்பெறும் நிறுவனங்களில் ஒன்றாகச் சமயமும் திகழ்கின்றது.

சமயம் என்ற சமுதாய நிறுவனம் பெரும்பாலான சமுதாய மக்களின் வாழ்க்கையின் மிக உன்னதச் சக்தியாகவும் இன்றியமையாத சக்தியாகவும் திகழ்கின்றது எனலாம். குளுக் மற்றும் ஸ்டார்க் என்போர் அடையாளங்கள் அல்லது குறியீடுகள், நம்பிக்கைகள், மதிப்புகள், சடங்குகள், இயற்கையிறந்த சக்திகள் போன்றனவற்றால் நிறுவனமாக்கப் பெற்ற முறையே சமயம் என்கின்றனர்.[5] இயற்கையின் போக்கையும் மனித வாழ்க்கையையும் கட்டுப்படுத்துவதாகவோ அல்லது இயக்கப் பெறுவதாகவோ நம்பப்பெறும் மனித சக்திக்கும் மேலான ஒரு சக்தியுடன் நல்லிணக்கம் செய்து கொள்வதையே சமயம் என்ற நிறுவனம் குறிக்கின்றது என்பது ரெனாச் எஸ். ஆர்பன் என்பார் கருத்தாகும்.[6]

சில வாழ்நாள் பல்பிணிச் சிற்றறிவினராகிய மக்கட் குலத்தார் தமது குறைவுடைய அறிவினை மட்டும் துணையாகக் கொண்டு அமைத்துக் கொள்ளும் உலகியல் வாழ்க்கை முறைகளை விட நாடு, மொழி, இனம் என்ற வேற்றுமைகளுக்கு இடம் தராது எல்லா உயிர்களுக்கும் உரிய தனி முதற்பொருளாயும் எல்லா உயிர்களுக்கும் உயிராக நின்று உலகை இயக்கியருளும் தெய்வம் ஒன்று உண்டு என்ற தெளிவுடையவராய்த் தெய்வத்தின் திருவருள் வழி அடங்கி நின்று எல்லா உயிர்களும் வையத்துள் வாழ்வாங்கு வாழும்வண்ணம் அமைத்துக் கொள்ளும் வாய்மையான ஒழுக்க நெறியே சமயம் என்று மேற்கொள்ளத்தகும் சிறப்புடையது...... உயர்திணை

எனச் சிறப்பிக்கப்பெறும் மக்கட்குலத்தார் அறத்தின் வழி நிலைபெற்றுப் பொருள் ஈட்டித் தாமும் பிறரும் இன்பமுடன் இனிது வாழ்தல் வேண்டித் தமது வாழ்க்கையில் தவறாது கடைப்பிடித்தற்கு அமைத்துக் கொண்ட ஒழுக்க நெறியே சமயம் என்ற பெயரால் அழைக்கப்பெறுகின்றது என வெள்ளைவாரணனார் விளக்கம் தருகிறார்.[7] சராசரி மனித வாழ்க்கையை உயிர்ப்புள்ளதாக்கி முழுமையாக்கும் உணர்வின் தேவையில் தோன்றியதே சமயம் என்பது வை. இரத்தினசபாபதியின் கருத்தாகும்.[8]

சமயம் என்பது வாழ்க்கை முறை; அதாவது மனிதனை நெறிப் படுத்தி, அவன் உள்ளத்தைப் பக்குவப்படுத்தும் கருவியாகத் திகழ்கின்றது. குறை நீக்கத்துக்கும் நிறை நலம் பெறுவதற்கும் சமயம் இன்றியமையாதது ஆகும் என்று குன்றக்குடி அடிகளார் விளக்குவார்.[9]

இத்தகைய சமுதாய நிறுவனமாகிய சமயம் பற்றிய ஆய்வுகளை மேற்கொண்ட சமூகவியலாளர்களிடையே இரு வேறுபட்ட கருத்துகள் நிலவக் காணலாம்.

டர்க்கியாம் என்பவர் சமயம் ஒரு வகையான சமூகவியல் அது மனித வாழ்க்கையையும், மனித இனங்களுக்கு இடையேயுள்ள உறவுகளையும் சுற்றுப்புற உலகை அடிப்படையாகக் கொண்டு இயக்குகிறது என்கிறார்.[10] இவ்வடிப்படையில் சமூகவியலாளர்களில் ஒரு சாரார் சமயத்தின் சமுதாயச் செயல்பாடுகளை விளக்குகின்றனர்.[11] சமயம் சமுதாயத்தை ஒருங்கிணைக்கும் கருவி, தனிமனிதர்களிடையே ஒற்றுமை உணர்வை ஊட்டுகின்றது. சமூக ஒட்டும் தன்மையைப் பலப்படுத்துகின்றது. சமுதாய நியதிகளையும் சமுதாய மதிப்புகளையும் புனிதமாக்குகிறது. சமுதாயக் கட்டுப்பாட்டுக் கருவியாகச் செயல்படுகிறது. தனிமனிதர்களுக்கு உணர்ச்சிபூர்வமான விடுதலை அளிக்கிறது. சமுதாயத்தின் பொருளாதார அமைப்பைத் தீர்மானிக்கும் சக்தியாகச் செயல்படுகின்றது. குறிப்பிட்ட பண்பாட்டுப் பொதுமைகளையும் வேறுபாடுகளையும் புலப்படுத்துவதுடன் தனிமனிதர்களின் உறவுகளிடையே உள்ள செயல்பாடுகளையும் வெளிப்படுத்துகிறது என்றெல்லாம் சமயத்தின் சமுதாயச் செயல்பாடுகளை விளக்குகின்றனர்.

சமூகவியலாளர்களில் ஒரு பிரிவினர், சமயம் சமுதாய வகுப்புகள் உருவாகத் துணை நிற்கின்றது. சமுதாயச் சமத்துவமின்மையை வளர்க்கத் துணை நிற்கின்றது. உயர்நிலையினர் தம் மேல்நிலைக்கு நியாயம் கற்பிக்கச் சமயம் துணை புரிகின்றது. சமுதாய மாற்றங்களைத் தடை செய்கின்றது

என்று சமயம் சமுதாயத்திற்கு ஊறு விளைவிக்கும் நிலைகளைக் காட்டுகின்றனர்.[12]

இவ்விரு வேறு கருத்துகளையும் ஒருங்குவைத்துப் பார்க்கும் போது சமயம் பல்வேறு சமுதாயச் செயல்பாடுகளைக் கொண்டுள்ளமையை அறியலாம். இவ்வகையில் சமயத்தின் அடிப்படையில் எழுந்த திருமுறை களிலும் பல்வேறு பண்பாட்டுக் கூறுகள் இடம்பெறுமாற்றை உணரமுடிகின்றது.

பண்பாடு

மனிதர்களுக்கும் பிற உயிரினங்களுக்கும் இடையே உள்ள வேறுபாடு மனிதர்கள் பகுத்தறியும் திறனைப் பெற்றுள்ளமை ஆகும். இத்திறனால் குறியீடுகளை உருவாக்கவும், பயன்படுத்தவும் இயல்வதுடன், பண்பாட்டையும் உருவாக்குகின்றனர்.

பண்பாட்டை உருவாக்கும் குறியீடுகளில் மொழியும் ஒன்றாகும். மொழி பண்பாட்டின் வளர்ச்சிக்குரிய அடிப்படைத் தேவையானது ஆகும். சமுதாயத்தில் வாழ்கின்ற மக்கள் தம் பண்பாட்டை ஒருவரிடமிருந்து மற்றொருவர் கற்றுக் கொள்கின்றனர். எனவே, பண்பாடு சமூக மரபுரிமை எனச் சமூகவியலாளர்களால் கூறப்படுகின்றது. சமுதாய மக்கள் தம் பண்பாட்டைத் தம் குழந்தைகளுக்குக் கடத்துவதுடன், பரந்த பண்பாட்டு மரபுகளை விட்டுச் செல்லவும் செய்கின்றனர். இக்காரணம் பற்றியே சமுதாயம் என்பதற்குப் பொதுவான பண்பாட்டுக் கூறுகளைக் கொண்ட மக்கட் கூட்டம்[13] பண்பாட்டை வளர்க்கும் களம்[14] என்றெல்லாம் விளக்கங்கள் அளிக்கப்பெறுவதைக் காணலாம். கா. சிவத்தம்பி, பண்பாடு என்ற வாழ்க்கைக் கோலத்தின் இரண்டு முகிழ்ப்புகளே மதமும் இலக்கியமும் ஆகும். பண்பாடு என்ற வட்டத்திற்குள்ளேயே இவை இரண்டும் இயங்குகின்றன என்கிறார்.[15]

இத்தகைய பண்பாடு என்பது குறித்துச் சமூகவியலாளர்களும் அறிஞர்களும் அளித்துள்ள விளக்கங்களுள் சிலவற்றைக் குறிப்பிடுதல் தகும்.

மக்களின் வரலாற்றில் அவர்கள் படைத்துக் கொண்ட கருவிகள், சமூகப் பழக்கங்கள், வழக்கங்கள், நம்பிக்கைகள், ஒழுக்கங்கள், கொள்கைகள் முதலியவற்றின் சாராம்சங்களைப் பண்பாடு எனப் பொதுவாகக் கூறலாம் என்பது அ. தட்சிணாமூர்த்தி தரும் விளக்கம் ஆகும்.[16]

சமுதாயத்திலிருந்து பெறப்படுவதும், அடையாளங்கள், மதிப்புகள், செயல்பாடுகள் ஆகியவற்றைக் கடத்தக் கூடியதும் பண்பாடு எனப்படும் என்று தியோடார் கேப்லோ கூறுகின்றார்.[17]

மக்கள் தம் வாழ்க்கை அனுபவங்களால் தம் சமுதாயத் தேவைகளை நிறைவேற்றச் சில சட்டங்களையும் நடைமுறைகளையும் வகுத்துக் கொள்கின்றனர். இந்த நம்பிக்கைகளும் வழக்கங்களும் சட்டங்களும் நடைமுறைகளும் பண்பாடு என வழங்கப்பெறுகின்றன என்பது பால்.பி. ஹார்டன் தரும் விளக்கம் ஆகும்.[18]

நம் வாழ்க்கைச் சூழல்களுக்கேற்ப நாம் மேற்கொள்ளும் வழிகள் அனைத்தையும் மொத்தமாகப் பண்பாடு என்று கூறலாம்.[19]

எதிர்பார்ப்புகள், நம்பிக்கைகள், கருத்துகள், புரிந்து கொள்ளல்கள், யூகங்கள், இலக்குகள், விருப்பங்கள், நோக்கங்கள், தேர்வுகள் போன்ற அனைத்தையும் பரவலாகப் பங்கிட்டுக் கொள்வதையே பண்பாடு என்ற சொல் வெளிப்படுத்துகின்றது.

காலம் முழுவதும் உறுதியாக நிற்க ஏதுவானதும் சில குறிப்பிட்ட மதிப்புகளைச் சுற்றி அமைக்கப்பெற்றதுமாகிய சமூக அமைப்பு நிறுவனமே பண்பாடு எனப்படும் என்று பெர்னார்டு பிலிப்ஸ் என்பார் குறிப்பிடு கின்றார்.[20]

மொழி, கருவிகளைச் செய்தல், தொழில்கள், கலைகள், அறிவியல், சட்டங்கள், அரசு, ஒழுங்கு, சமயம் ஆகியன மட்டுமன்றி உருவக் கருவிகள், கைவினைப் பொருள்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய அனைத்தும் பண்பாட்டுள் அடங்கும்.[21]

இவ்வாறு, பண்பாடு என்பது குறித்துப் பல்வேறு விளக்கங்கள் அளிக்கப்பெறுகின்றன.

பண்பாட்டின் வகைகள்

சமூகவியலாளர்கள் பண்பாட்டைப் பல்வேறு நிலைகளில் பாகுபாடு செய்து ஆராய்ந்துள்ளனர்.

பண்பாட்டை உருவப் பண்பாடு, அருவப் பண்பாடு என்று பாகுபடுத்தும் நிலை உள்ளது.[22]

கருவிகள், மரப்பொருள்கள், மோட்டார் வாகனங்கள், கட்டடங்கள், சாலைகள், பாலங்கள், மக்களால் பயன்படுத்தப்படும் பிற பௌதீகப்

பொருட்கள், கைவினைப்பொருட்கள் முதலியவற்றை உருவப் பண்பாடு என்ற பாகுபாட்டினுள்ளும், கருத்துகள், வழக்கங்கள், நம்பிக்கைகள், மக்களால் பின்பற்றப்படும் சமூகத் தடைகள், மதிப்புகள், தொடர்பு வகைகள் முதலியவற்றை அருவப் பண்பாடு என்ற பாகுபாட்டுள்ளும் அடக்கிக் காட்டுவர்.

பண்பாட்டைப் பண்பாட்டுக் கலவை (Cultural Complex) என்றும் பண்பாட்டு இனம் (Cultural Trait) என்றும் பாகுபடுத்தும் நிலையும் உள்ளது.[23]

பண்பாட்டின் மொத்தக் கூறுகளைப் பண்பாட்டுக் கலவை என்றும் பண்பாட்டின் மிகச் சிறிய கூறுகளைப் பண்பாட்டு இனம் என்றும் விளக்குவர். எடுத்துக்காட்டாகத் திருமணத்தைப் பண்பாட்டுக் கலவை எனக் கொண்டால் மணம் பேசி வரல், மண நாள் குறித்தல், மண ஓலை அனுப்புதல் முதலியவற்றைப் பண்பாட்டு இனம் எனக் கொள்ளலாம்.

எந்த ஒரு பண்பாட்டிலும் பல பண்பாட்டு இனங்கள் காணப்படும். அப்பண்பாட்டு இனங்களை உருவப் பண்பாட்டு இனங்கள், சட்டதிட்டங்களுக்கு உட்பட்ட பண்பாட்டு இனங்கள், மதிப்புகள் என வகைப்படுத்துவர்.[24]

பண்பாட்டைப் பண்பாட்டுப் பொதுமைகள் என்றும் துணைப் பண்பாடு என்றும் வகைப்படுத்துவர்.

பரந்ததாகவும் பெரிய அளவிலும் காணப்படும் பண்பாட்டின் சில குறிப்பிட்ட மதிப்புகளையும், வழக்கங்களையும் கொண்ட மக்கள் சமுதாயத்தில் வாழ்கின்றனர்.

சமுதாய மக்களில் சிலர் தமக்குள் பகிர்ந்து கொள்ளும் சில பண்பாட்டுக் கூறுகளும் காணப்படுகின்றன. இவற்றைத் துணைப் பண்பாடுகள் என்பர்.

எடுத்துக்காட்டாகச் சமையல் செய்தலைப் பொதுப் பண்பாடு எனக் கொண்டால், சமையல் செய்யும் முறைகளைத் துணைப் பண்பாடு எனக் கொள்ளலாம்.

இவ்வகையில் பண்பாட்டு நோக்கில் திருமுறைகளைக் காண்போம்.

## சமுதாய மதிப்புகள்

பண்பாட்டின் வகைகளில் ஒன்றாகிய அருவப் பண்பாட்டின் கூறுகளில் ஒன்று சமுதாய மதிப்புகள் ஆகும். சமுதாய மதிப்புகளின்

அடிப்படையில் பண்பாட்டை இரு நிலைகளில் வகைப்படுத்திக் காண்பர். ஒரு சமுதாயத்தில் வாழும் மக்கள் எவ்வெவற்றைப் பின்பற்றி வாழ்கின்றனர் என்பதை உண்மைப் பண்பாடும் (True Culture), எவ்வெவற்றைப் பின்பற்றி நடக்க வேண்டும் என்பதைக் கருத்துப் பண்பாடும் (Ideal Culture) காட்டுவனவாகக் கருதுவர். சமூகவியலாளர்கள் எந்தப் பண்பாட்டையும் மதிப்புகள் மூலம் விளக்கிக் காட்ட முடியும் எனக் கூறுகின்றனர்.[25] எனவே, சமுதாய மதிப்புகள் பண்பாட்டின் இன்றியமையாத பகுதியாக உள்ளன எனலாம்.

## சமுதாய மதிப்புகள் - விளக்கம்

சமுதாய மதிப்புகள் குறித்துச் சமூகவியலாளர்கள் அளிக்கும் விளக்கங்களில் சிலவற்றைக் காணுதல் தகும்.

உயர்நோக்கங்களுக்கும், கொள்கைகளுக்கும் எவை உயர்வானவை, எவை இழிந்தவை, எவை புனிதமானவை, எவை நகைப்பிற்குரியவை என்பதை மக்கள் கற்பித்துக் கொள்கின்றனரோ அத்தகைய அடிப்படையான உணர்வுகளைச் சமுதாய மதிப்புகள் எனலாம்.[26]

எவை விரும்பத்தக்கவை, எவை விரும்பத்தகாதவை, எவை உயர்வானவை, எவை மதிப்பற்றவை, எவை பொருத்தமானவை, எவை பொருத்தமற்றவை, எவற்றைச் செய்ய வேண்டும், எவற்றைச் செய்யக் கூடாது என அறிவுறுத்துவனவே சமுதாய மதிப்புகள் எனலாம்.

பெரும்பாலான சமுதாய மதிப்புகள் பண்பாட்டுப் பூர்வமாகவே உருவாக்கப்படுகின்றன எனக் கருதப்படுகிறது.[27]

சமுதாயம் முழுமையிலும் உள்ள மக்கள் எவற்றுக்கு முதன்மை கொடுக்கின்றனரோ, எவற்றை விரும்புகின்றனரோ அவற்றைச் சமுதாய மதிப்புகள் குறிக்கும் எனலாம்.

## சமயமும் சமுதாய மதிப்புகளும்

சமயம் பற்றிக் கூறும் சமூகவியலாளர்கள் சமயம் வாழ்க்கையின் பொருளையும் விளக்கத்தையும் அளிப்பதன்மூலம் சமய முறைகள் நியமங்களையும் சமுதாய மதிப்புகளையும் புனிதமுடையனவாய் மாற்றுகின்றன என்கின்றனர். சமுதாயம் சில சூழல்களில் சில நிலைகளிலிருந்து வழுவும்போது காக்கப்பட வேண்டியது இன்றியமையாதது ஆகும். இச்சூழலில்

சமயம் சடங்குகள், விழாக்கள், நம்பிக்கைகள் ஆகியன மூலம் சமூக நியதிகளும் மதிப்புகளும் வழுவாமல் காக்கின்றது.

சமுதாய உறுப்பினர்கள் சமுதாயத்தில் நிலவும் உயர்ந்த மதிப்புகளையும் நியமங்களையும் ஏற்கச் செய்யவும் அங்கீகரிக்கச் செய்யவும் ஏற்ற சமூகக் கட்டுப்பாட்டுச் செயலியாகவும் செயல்படுகின்றது.[28]

சமய அமைப்புகள் ஒரு சமுதாயத்தின் சமுதாய மதிப்புகளைப் பிரதிபலிக்கின்றன. எனவே, சமயம் சமுதாய மதிப்புகளைப் பேணிக் காப்பதில் பெரும் பங்காற்றுகின்றது.

இவ்வகையில், இறைவன் பெருமைகளைப் போற்றிப் புகழுமிடங்களிலும், அடியார்களின் பண்புகளை எடுத்துரைக்குமிடங்களிலும், உலகியல் நிலைகளைக் கூறுமிடங்களிலும், இறை அனுபவங்களை விளக்குமிடங்களிலும் பல்வேறு சமுதாய மதிப்புகள் திருமுறைகளில் இடம்பெறக் காணலாம். அவை பற்றிக் காண்போம்.

## ஆணவம் கொள்ளாமை

மக்கள் தம் வாழ்க்கையில் இன்றியமையாது கடைபிடிக்க வேண்டிய சமுதாய மதிப்புகளில் ஒன்று ஆணவம் கொள்ளாமை. ஆணவம் கொள்ளுதல் மூலம் சமுதாய உறவுகள் சிதைவடைகின்றன. தனி மனிதர்களுக்கிடையே பூசல்கள் ஏற்படுகின்றன. எனவே, தனிமனித ஒற்றுமைக்கும், சமுதாய ஒற்றுமைக்கும் ஆணவம் கொள்ளாமை ஆகிய பண்பு மிகவும் உறுதுணையாக அமையக் காணலாம்.

திருமுறைகள் ஆணவம் கொள்ளாமை என்ற சமுதாய மதிப்பைப் பல நிலைகளில் வலியுறுத்தக் காணலாம்.

தினைத்தனையோர் பொறையிலா உயிர்போம் கூட்டைப்
பொருளென்று மிகவுன்னி மதியாலிந்த
அனைத்துலகும் ஆளலாமென்று பேசும்
ஆங்கா ரம்தவிர் நெஞ்சே

என அப்பர்பெருமான் ஆணவம் கொள்ளாமையை வலியுறுத்துகின்றார்.

சிவபெருமானின் பெருமைகளைப் போற்றிப் புகழுமிடத்து ஆணவம் கொண்ட அரக்கனை அடக்கிய திறம் கூறப்படுகின்றது. திருஞானசம்பந்தர் தம் ஒவ்வொரு பதிகத்திலும் எட்டாம் பாடலில் இச்செய்தியைக் கூறி ஆணவம் கொள்ளாமையை வலியுறுத்துகின்றார். சான்றாக,

ஒருவரையும் மேல்வலி கொடேனென எழுந்த விறலோன்இப்
பெருவரையின் மேலோர் பெருமானும் உளனோ எனவெகுண்ட
கருவரையும் ஆழ்கடலும் அன்னதிறல் கைகள் உடையோனை
அருவரையில் ஊன்றி அடர்த்தான் உறைவது அவளிவணல்லூரே

என்ற சம்பந்தர் பாடலைக் காட்டலாம்.

இதைப் போன்று திருமாலும் பிரம்மனும் கொண்ட ஆணவத்தைச் சிவபெருமான் அடக்கினார் என்பதன் மூலமும் ஆணவம் கொள்ளாமை வலியுறுத்தப்படக் காணலாம்.

மாலறியா நான்முகனும் காணா மலையினைநாம்
போலறிவோம் என்று உள்ள பொக்கங்களே பேசும்
பாலூறு தேன்வாய் படிறீ கடைதிறவாய்

என மாணிக்கவாசகர் இந்நிகழ்ச்சியைக் குறிப்பிடக் காணலாம்.

ஆணவத்தில் உச்சியில் நின்ற தக்கன் செய்த வேள்வியைச் சிவபெருமான் சிதைத்து அவன் ஆணவத்தை அடக்கியமையும் திருமுறைகளில் காட்டப்படுகின்றது. இதை,

தக்கனது பெருவேள்வி தகர்த்தார் போலும்

என நாவுக்கரசரும்,

தக்கனார் அன்றே தலைஇழந்தார் தக்கன்
மக்களைச் சூழநின்று உந்தீபற
மடிந்தது வேள்வி என்று உந்தீபற

என மாணிக்கவாசகரும் பாடியுள்ளனர்.

அதிசூரன் என்பவன் வாட்படைப் பயிற்சியில் தன்னிலும் மேம்பட்டவர் எவரும் இல்லை என ஆணவம் கொண்டமையால் தோல்வியுற்றமையை ஏனாதி நாயனார் வரலாறு காட்டுகின்றது.

இவ்வாறு, திருமுறைகள் புராண நிகழ்ச்சிகளைக் காட்டி ஆணவம் கொள்ளாமை என்ற சமுதாய மதிப்பை வலியுறுத்தக் காணலாம்.

மது அருந்தாமை

மது அருந்துவதால் தனிமனிதர்களின் உள்ளமும் உடலும் பாதிப்புக்குள்ளாகும். உடல் நலமும் உள்ள நலமும் உடைய மனிதர்கள் வாழும் சமுதாயமே சிறப்பாகச் செயல்பட முடியும்.

சமுதாயத்தைச் சீர்குலைக்கும் கள் உண்ணலாகிய செயல் மனிதர்களுக்கு மாறா மயக்கத்தைக் கொடுக்கும். கள் உண்போர் அறமுறையையும் அருள் முறையையும் விட்டுப் பாவநெறியில் செல்வர். எனவே கள்ளுண்ணல் ஆகிய செயல் கீழ்நிலை ஆகும். கள்ளுண்ணல் ஆகிய செயல் தீக்குணம் உடைய கலதிகளாகிய கீழ்மக்களுக்கே உரிய செயல் ஆகும். மெய்ம்மை, மெய்ப்பொருள் ஆகியவற்றைப் பகுத்தறியும் அறிவை அழித்தொழிக்கும் கள்ளை உண்பவர்கள் பிறப்பு, இறப்பு ஆகிய பெருந்துன்பத்தில் வீழ்ந்து பெண்ணியலாரை நாடுவர். எனவே, கள்ளுண்ணுதல் கூடாது எனத் திருமூலர் கள்ளுண்ணலின் இழிவுகளையும் அதன் விளைவுகளையும் காட்டுகின்றார். இக்கருத்துகள்,

முழுநீர்க் கள்ளுண்போர் முறைமை அகன்றோர்
காமமும் கள்ளும் கலதிகளுக்கே யாகும்
காமத்தோர் காமக் கள்ளுண்டே மயங்குவர்
கள்ளுண்ணும் மாந்தர் கருத்தறி யாரே
மயக்கு மதுவுண்ணு மாமூடர் தேரார்
மோகியர் கள்ளுண்டு மூடராய் மோகமுற்று
ஆகும் மதத்தால் அறிவழிந்தாரே

எனக் கள்ளுண்ணாமை என்ற தலைப்பின்கீழ் வெளிப்படுவதைக் காணலாம்.

காமம் கொள்ளாமை

மக்களை மாக்கள் நிலைக்கு உள்ளாக்குவது காமம் கொள்ளுதல் என்ற செயல் ஆகும். காமம் கொள்ளுதல் காரணமாகப் பிற பெண்டிரை நயக்கும் இழிநிலை உருவாகும். இதனால் சமுதாய ஒழுங்கு சிதைவதுடன் உடல் நலமும் பாதிப்புக்கு உள்ளாகும். இக்காலத்தில் ஆட்கொல்லி நோய் போன்ற பால்வினை நோய்கள் ஏற்பட முறை தவறிய பால்வினைகளும் காரணமாகும். எனவே காமம் கொள்ளுதல் ஆகிய செயல் திருமுறைகளில் பலவாறு கண்டிக்கப்படக் காணலாம்.

காமத்துள் அழுந்திநின்று கண்டாரால் ஒறுப்புண்ணாதே
மனமெனும் தோணி பற்றி மதியெனும் கோலை ஊன்றிச்
சினமெனும் சரக்கை ஏற்றிச் செறிகடல் ஓடும் போது

மதனெனும் பாறை தாக்கி மறியும்போது அறிய ஒண்ணாது
உனையுனும் உணர்வை நல்காய் ஒற்றியூர் உடைய கோவே

எனத் திருநாவுக்கரசரும்,

தனியனேன் பெரும்பிறவிப் பௌவத்து எவ்வம்
தடம்திரைரால் எற்றுண்டு பற்றுஒன்று இன்றிக்
கனியைநேர் துவர்வாயார் என்னும் காலால்
கலக்குண்டு காமவான்சுற வின்வாய்ப் பட்டு
இனிஎன்னே உய்யும்ஆறு என்றுஎன்று எண்ணி
அஞ்சஎழுத்தின் புணைபிடித்துக் கிடக்கின் றேனை
முனைவனே முதல்அந்தம் இல்லா மல்லல்
கரைகாட்டி ஆட்கொண்டாய் மூர்க்க னேற்கே

செழிகின்ற தீப்புகு விட்டிலின்
சிலமொழியாரில் பல்நாள்
விழுகின்ற என்னை விடுதி கண்டாய்

என மாணிக்கவாசகரும் கூறுதல் இவண் சுட்டுதற்குரியனவாகும். இறை வழிபாட்டுக்கும், இறைவனை அடைவதற்கும் காமம் கொள்ளுதலாகிய செயல் தடையாக உள்ளது என்பதன் மூலம் சமுதாய உறுப்பினர்கள் காமம் கொள்ளாமையைக் கடைபிடிக்க வலியுறுத்தப்படுகின்றனர் எனலாம்.

கடமை தவறாமை

சமுதாயத்தில் வாழ்கின்ற மக்கள் எத்தகைய இடையூறுகள் வரினும், பொருளாதாரத் தடைகள் வரினும் தம் கடமையினின்றும் தவறக் கூடாது என்ற சமுதாய மதிப்பு வலியுறுத்தப்படுகின்றது.

கணம்புல்லர் வறுமையுற்ற நிலையிலும் தம் உடல் உழைப்பால் கிடைத்த பொருளால் விளக்கெரிக்கும் பணியை மேற்கொள்கிறார்.

புகழ்த்துணைநாயனார் பசி வந்து மயங்கிய நிலையிலும், இறைத் தொண்டைக் கைவிடாது மேற்கொள்கிறார்.

பூசலார் நாயனார் இறைவனுக்குக் கோயில் எடுக்க முயன்று, கையில் பொருள் இல்லாமையால் தன் முயற்சியைக் கைவிடாது மனத்துட் கோயில் எடுத்து வழிபடுகிறார்.

அப்பர் பெருமான் "என்கடன் பணி செய்து கிடப்பதே" என வாழ்கிறார்.

இவை இறைவன்மீது கொண்ட எல்லையில்லாத பற்றைக் காட்டுவனவாக அமையினும், இவைமூலம் கடமை தவறாமை என்ற சீரிய பண்பு வலியுறுத்தப்படுவதாகக் கொள்ளலாம்.

கொடை கொடுத்தல்

மனிதநேயப் பண்பாட்டின் வெளிப்பாடுகளில் ஒன்று கொடை கொடுத்தல். பொருளாதார நிலையில் மேம்பட்டோர் பொருளாதார நிலையில் நலிவுற்று வருந்துவோரைத் தம்மைப் போன்ற மனிதர்களே அவர்களும் என்ற மனிதநேய உணர்வுடன் கொடை கொடுத்து வாழ்ந்தால் பொருளாதார நிலையில் நலிவுற்றோரின் துன்பங்கள் ஓரளவு அகலும்.

அப்பர்பெருமான்,

இரப்பவர்க்கு ஈய வைத்தார் ஈபவர்க்கு அருளும் வைத்தார்
கரப்பவர் தங்கட் கெல்லாம் கடுநர கங்கள் வைத்தார்

எனக் கொடை கொடுப்பதன் பயனையும், கொடாமையின் கேட்டினையும் கூறிக் கொடைப் பண்பை வலியுறுத்துகின்றார்.

யாவர்க்கு மாம்இறை வற்கொரு பச்சிலை
யாவர்க்கு மாம்பசு வுக்கொரு வாயுறை
யாவர்க்கு மாம்உண் ணும் போதொரு கைப்பிடி
யாவர்க்கு மாம்பிறக் கின்னுரை தானே

எனத் திருமூலர் பசிப்பிணியை அகற்றும் உணவைக் கொடையாகக் கொடுக்க வலியுறுத்துகின்றார்.

மெய்ப்பொருள் நாயனாரின் வரலாற்றைக் கூறும் சேக்கிழார் பெருமான்,

தேடிய மாடு நீடு செல்வமும் தில்லை மன்றுள்
ஆடிய பெருமான் அன்பர்க் காவன ஆகும் என்று
நாடிய மனத்தி னோடு நாயன்மார் அணைந்த போது
கூடிய மகிழ்ச்சி பொங்கக் குறைவறக் கொடுத்து வந்தார்

என அவர் கொடைப் பண்பை எடுத்து மொழிகின்றார்.

இயற்பகை நாயனார்,

மிக்க சீரடியார்கள் யாரேனும் வேண்டும் யாவையும் இல்லை
என்னாதே
இக்கடற்படி நிகழுமுன் கொடுக்கும் இயல்பின் நின்றவர்
உலகியற் பகையார்

எனக் காட்டப்படுகின்றார்.

தொண்டர் பலரும் வந்தீண்டி உண்ணத் தொலையா அமுதூட்டிக்
கொண்டு செல்ல வருநிதியம் முகந்து கொடுத்துக்
குறைந்தடைவார்

எனப் பெருமிழலைக் குறும்ப நாயனார் காட்டப்படுகின்றார்.

இன்ன செயலின் ஒழுகுநாள் அடியார் மிகவும் எழுந்தருள
முன்னம் உடைமை யானபொருள் முழுதும் மாண அடிமையுடன்
மன்னும் காணி யானநிலம் மற்றும் உள்ள திறம்விற்றே
அன்னம் அளித்தே மென்மேலும் ஆறா மனத்தா ராயினார்

என மூர்க்க நாயனாரின் கொடைப் பண்பு குறிப்பிடப்படுகிறது. இவை அடியார்களுக்குக் கொடை அளித்த சிறப்பினைக் கூறுவதாயினும் இல்லாதார்க்குக் கொடை கொடுக்க வேண்டும் என்ற சமுதாய மதிப்பையும் அறிவுறுத்துகின்றன எனலாம்.

அன்புடைமை

மனிதனை மனிதனாக வாழச் செய்வது அன்புடைமை என்ற அரிய பண்பாகும். சமுதாய ஒற்றுமை, தனிமனித ஒற்றுமை ஆகியவற்றிற்கு அன்புடைமை அடித்தளமாக அமைகின்றது. அன்பு நெறியே பக்தி நெறி ஆகும். மக்கள் இறைவனிடம் அன்பு செலுத்தப் பழகுவதன் மூலம் மனிதர்களிடம் அன்பு செலுத்தப் பழகுகின்றனர்.

விட்டு வெள்ளம் விரிந்தெழு காவிரி
இட்டநீர் வயல் எங்கும் பரந்திடக்
கொட்ட மாமுழ வோங்கு குரக்குக்கா
இட்ட மாயிருப் பார்க்கிட ரில்லையே

என இறைவனிடம் அன்பு செலுத்துவோர்க்கு இடரில்லை என அப்பர் பெருமான் கூறுகின்றார்.

மன்னும்மலை மகள்கையால் வருடின மாமறைகள்
சொன்னதுறை தொறுந்தூப் பொருளாயின தூக்கமலத்
தன்னவடி வினஅன்புடைத் தொண்டர்க்கு அமுதரும்பி
இன்னல்க ளைவனஇன் னம்பரான்றன் இணையடியே

என இறைவனிடம் அன்பு செய்யும் அடியவர்க்கு, அவன் அடியார்களின் இன்னல்களைப் போக்குவான் என்றும் அப்பர்பெருமான் கூறுகின்றார்.

இறையடியார்கள் தம்மையொத்த இறையடியார்பால் கொண்ட அன்பின் காரணமாகத் தம்மையே இழக்கத் தயாரானமையை,

அங்கணர் அடியார் தம்மைச் செய்தஇவ் அபரா தத்துக்கு
இங்கிது தன்னாற் போதாது என்னையும் கொல்ல வேண்டும்
மங்கல மழுவால் கொல்கை வழக்குமன்று இதுவாம் என்று
செங்கையில் உடைவாள் வாங்கிக் கொடுத்தனர் தீர்வு நேர்வார்

என்ற எறிபத்த நாயனாரின் செயல் காட்டுகின்றது.

நடமே புரியுஞ் சேவடியார் நம்மை உடையார் எனும் மெய்ம்மை
உடனே தோன்றும் உணர்வின்கண் ஒழியா தூறும் வழியன்பின்
கடனே இயல்பாய் முற்றிவரும் காதல் மேன்மேல் எழுங்கருத்தின்
திடம்நேர் நிற்கும் செம்மலார் திகழு நாளில் ஆங்கொருநாள்

என அடியார்களின் அன்பின் திறத்தைச் சண்டேசுர நாயனார் புராணமும் காட்டுகிறது. இவ்வாறு அன்புடைமை என்ற சமுதாய மதிப்பு பல்வேறு நிலைகளில் காட்டப்படுகின்றது.

## இனியன கூறல்

சமுதாய நல்லுறவும் சமுதாய நல்லிணக்கமும் ஏற்பட வேண்டு மானால் தம்மையொத்த மனிதர்களிடமும் தம்மை நாடி வருவோர்களிடமும் முகமலர்ந்து இனியன கூறி மகிழ்விக்க வேண்டும். இனியன கூறல் என்ற சமுதாய மதிப்பை வலியுறுத்தும் பொருட்டு அப்பர் பெருமான்,

வாக்கினால் இன்புரைத்து வாழ்கிலார் தம்மையெல்லாம்
போக்கினாற் புடைத்தவர்கள் உயிர்தனை யுண்டுமால்தான்
தேக்குநீர் செய்தகோயில் திருஇரா மேச்சுரத்தை
நோக்கினால் வணங்குவார்க்கு நோய்வினை நுணுகுமன்றே

எனப் பாடுவதாகக் கொள்ளலாம்.

### சொன்னசொல் காத்தல்

எத்தகைய கேடுகள் வரினும் சொன்ன சொல்லைக் காக்க வேண்டும். இது சமுதாய மக்கள் அனைவராலும் பின்பற்றப்பட வேண்டிய சமுதாய மதிப்பு ஆகும். பழையனூர் வேளாளர் தம்மேல் குற்றம் வந்தபோது தம் உயிரையும் தாம் ஒரு வணிகருக்குச் சொல்லிய சொல்லின் வாய்மையையும் சீர்தூக்கிப் பார்த்து இறுதியில் தம் உயிரினும் தாம் கூறிய சொல்லே உயர்வானது எனக் கருதிச் சொன்ன சொல்லைக் காத்தனர் என்பதைச் சேக்கிழார் பெருமான் காட்டுகின்றார். தொண்டை நாட்டின் சிறப்புகளைக் கூறவந்த சேக்கிழார்,

நற்றிறம் புரிபழையனூர்ச் சிறுத்தொண்டர் நவைவந்
துற்றபோது தம்உயிரையும் வணிகனுக் கொருகால்
சொற்ற மெய்ம்மையுந் தூக்கி அச்சொல்லையே காக்கப்
பெற்றமேன்மை யில்நிகழ்ந்தது பெருந்தொண் டைநாடு

எனப் பாடுகிறார்.

### பகைவருக்கும் அருளுதல்

சமுதாயத்தில் வாழ்கின்ற மக்களிடையே சில காரணங்களால் பகையுணர்வு ஏற்பட வாய்ப்பு உள்ளது. இப்பகையுணர்வு மிகுந்தாலோ, தொடர்ந்தாலோ பூசல்கள் நிகழும். இதனால் சமுதாய ஒற்றுமை குலையும். எனவே, பகை உணர்வை விடுத்துப் பகைவரிடமும் அன்பு காட்டி அவர்களுக்கு உதவினால் சமுதாய ஒற்றுமை மேம்படும்.

பகைவருக்கும் அருள வேண்டும் என்ற சமுதாய மதிப்பைச் சேக்கிழார் பெருமான் மெய்ப்பொருள் நாயனார் வரலாற்றில் புலப்படுத்துகின்றார். சிவ வேடத்தில் வந்து வஞ்சனையால் மெய்ப்பொருள் நாயனாரை வெட்டியவனைக் காவலர்கள் கடியச் சென்றபோது குற்றுயிரும் குலையுயிருமாய்க் கிடந்த மெய்ப்பொருள் நாயனார் "தத்தா நமர்" எனக் கூறி அக்காவலர்களைத் தடுத்து நிறுத்துகிறார். மேலும், தம்மைக் கொல்ல வந்தவன் திரும்பிச் செல்லும் வழியில் அவனுக்கு இன்னல்கள் ஏற்படாதவாறு காவல் புரிந்து கொண்டுபோய் விடுமாறும் கட்டளை இடுகின்றார். கொன்றன்ன துன்பம் செய்யினும் அவனிடம் பகைமை பாராட்டாது அவனை மன்னித்து அருளும் பண்பு இவண் வலியுறுத்தப்படுகிறது. இங்நிகழ்ச்சி,

மறைத்தவன் புகுந்த போதே மனம்அங்கு வைத்த தத்தன்
இறைப்பொழு தின்கண் கூடி வாளினால் எறிய லுற்றான்
நிறைந்த செங்குருதி சோர வீழ்கின்றார் நீண்ட கையால்
தறைப்படும் அளவில் "தத்தா நமர்"எனத் தடுத்து வீழ்ந்தார்

வேதனை எய்தி வீழ்ந்த வேந்தரால் விலக்கப்பட்ட
தாதனாம் தத்தன்தானும் தலையினால் வணங்கித் தாங்கி
"யாதுநான் செய்கேன்" என்ன "எம்பிரான் அடியார் போக
மீதிடை விலக்கா வண்ணம் கொண்டுபோய் விடுநீ" என்றார்.

"அத்திறம் அறிந்தார் எல்லாம்" அரசனைத் தீங்கு செய்த
பொய்த்தவன் தன்னைக் கொல்வோம் எனப்புடை சூழ்ந்த போது
தத்தனும்
அவரை எல்லாம் தடுத்து உடன் கொண்டு போவான்
"இத்தவன் போகப் பெற்ற திறைவ னதாணை" என்றான்

எனக் காட்டப்படுகிறது.

மனமாசு அகற்றல்

மக்களின் செயல்கள் அனைத்திற்கும் அடிப்படையாய் அமைவது மனம். மனம் மாசின்றித் தூய்மையுடன் திகழ்ந்தால் செயல்களும் தூய்மை உடையனவாக, நல்லனவாக அமையும். இறைவன் அடியார்களின் மனமாகிய கோயிலில் உறைபவன். ஆகையால் மனம் தூய்மையுடன் திகழ வேண்டும் எனத் திருமுறைகள் அறிவுறுத்துகின்றன. இறைவனை அடைவதற்கு மட்டுமின்றித் தனிமனித மேம்பாட்டுக்கும் சமுதாய மேம்பாட்டுக்கும் மனத் தூய்மை இன்றியமையாது வேண்டப்படுகிறது.

திருஞானசம்பந்தர்,

சித்தந் தெளிவீர்காள், அத்தன் ஆரூரரை
பக்தி மலர்தூவ, முத்தி யாகுமே

எனத் தெளிந்த மனம் பெற வலியுறுத்துகின்றார்.

அப்பர் பெருமான்,

சிந்தையைத் திகைப்பியாதே செறிவுடை அடிமைசெய்ய
எந்தை நீ அருளிச் செய்யாய்......

நெஞ்சினைத் தூய்மை செய்து நினைக்குமா நினைப்பியாதே"

............... கள்ளாத அடியார் நெஞ்சில்

சேர்ந்தானை.......................................

வஞ்ச மனத்தவர்கள் காணவொண்ணா மணிகண்டன்

திருகு சிந்தையைத் தீர்த்துச் செம்மை செய்து
பருகி யூறலைப் பற்றிப் பதமறிந்து
உருகி நைபவர்க்கு ஊனம் ஒன்றின்றியே
அருகு நின்றிடும் ஆனைக்கா அண்ணலே

என மனத்தூய்மையை வலியுறுத்துகிறார்.

திருமுறைகள் கரவுடை மனத்தவரால் காண இயலாதவன், மனமாசு நீக்குபவன், கரவாடும் வன்னெஞ்சற்கு அரியவன், கரவிலா மனத்தவர்க்கு இன்னருள் செய்பவன், வஞ்சகர்பால் அணுகாதவன், மாசுடையார் சிந்தை புகாதவன், மக்களை அழுக்கடையாமல் ஆள்பவன், புரையற்ற பாலுள் நெய்போன்று நிறையற்ற சிந்தையுள் வீற்றிருப்பவன், மாசற்ற மனத்துள் அமர்ந்திருப்பவன் என இறைவனைக் காட்டுவதன் மூலம் மனத்தூய்மை வலியுறுத்தப்படக் காணலாம்.

மனமாசுடையவர்களைத் திருமூலர் கலதிகள், பாதகர், பொய்ப் பாதகர் எனக் கடிந்துரைப்பதுடன் மனமாசுடையவர்களைக் கண்டு எமனின் தூதுவரும் கூட அஞ்சுவதாக இழித்துரைக்கின்றார்.

பணிவுடைமை

"எல்லார்க்கும் நன்றாம் பணிதல்" என்ற வள்ளுவர் வாக்கிற் கிணங்கச் சமுதாய உறுப்பினர்கள் அனைவரும் பணிவுடையவர்களாகத் திகழ்ந்தால் சமுதாய ஒற்றுமை மேலோங்கும். அன்புடைமை உருவாகும். ஆணவம் அகலும். பெரியபுராணம் அடியார்களின் வரலாறுகள் மூலம் இப் பணிவுடைமை என்ற பண்பை வலியுறுத்தக் காணலாம்.

மானக்கஞ்சாற நாயனார், "பணிவுடைய வடிவுடையார்" எனப் போற்றப்படுகிறார். உயர்ந்த தவநெறியால் மேலோங்கி நின்ற திருஞான சம்பந்தரின் வருகையை அறிந்த இறை அன்பர்கள் அனைவரும் ஒன்று கூடி அவரை வரவேற்கின்றனர். இதைக் கண்ட சம்பந்தர் சிவிகையை விட்டுக் கீழிறங்கி அவர்களுடன் நடந்து வருகின்றார். இந்நிகழ்ச்சி,

சண்பைவரும் பிள்ளையால் சடாமகுடர் வலஞ்சுழியை
எண்பெருகத் தொழுதேத்திப் பழையாறை எய்துதற்கு
நண்புடைய அடியார்க ளுடன்போத நடந்தருளி
விண்பொரு நீள்மதிளாறை மேற்றளி சென்றெய்தினார்

எனக் காட்டப்படுகிறது.

இந்நிகழ்ச்சி திருஞானசம்பந்தரின் இறைப்பற்றுடன் பணிவுடைமைப் பண்பையும் வெளிப்படுத்துகின்றது எனலாம்.

இதைப்போன்று திருஞானசம்பந்தரின் வருகையை அறிந்த நின்றசீர்ப் பாண்டிய மன்னனும், குலச்சிறையாரும் மங்கையர்க்கரசியாரும் தம் பெருமைகளை மனத்தில் கொள்ளாது பணிவுடைமையின் காரணமாகச் சம்பந்தரை வணங்கி வரவேற்கின்றனர்.

வயதால், உலக அனுபவத்தால் மேம்பட்ட திருநாவுக்கரசர், சம்பந்தர் இறை அன்பர் என்ற உணர்வால் எழுந்த பணிவுடைமையின் காரணமாக வயதில் சிறியவர் என்றும் எண்ணாது அவர் கால்களில் வீழ்ந்து வணங்குகின்றார். இந்நிகழ்ச்சி,

தொழுது அணைவுற்று ஆண்ட அரசு
அன்புருகத் தொண்டர்குழாத் திடையே சென்று
பழுதில் பெருங்காத லுடன்அடி பணியப்
பணிந்தவர்தம் கரங்கள் பற்றி
எழுதரிய மலர்க்கையால் எடுத்திறைஞ்சி
விடையின் மேல் வருவார்தம்மை
அழுதழைத்துக் கொண்டவர்தாம் 'அப்பரே'என
அவரும் 'அடியேன்' என்றார்

எனக் காட்டப்படுகிறது. இதன் மூலம் பணிவுடைமை என்ற சமுதாய மதிப்பு காட்டப்படுகிறது.

பிழை பொறுத்தல்

பிழை செய்தல் என்பது மனித இயல்புகளில் ஒன்றாகும். அறியாமையின் காரணமாக ஒருவர் பிழை புரிந்தால் அதைப் பெரிதுபடுத்துவதன் மூலம் பகை உணர்வு மேலோங்கும். மாறாக அப்பிழையைப்

பொறுத்துக் கொண்டால் சமுதாய நல்லிணக்கம் ஏற்படும். எனவே, பிழை பொறுத்தல் என்பது இன்றியமையாது வேண்டப்படும் சமுதாய மதிப்பு எனலாம்.

மாணிக்கவாசகர் இறைவனிடம் பிரபஞ்சத்துக்கு உரியவனாக என்னைச் செய்து கொண்டதனால் நான் வஞ்சகன். புலால் உடம்மை நான் என்று பாவிப்பதால் நான் புலையன். உலகத்தவர் வளர்த்த நச்சு மரம் பயனற்றதாயினும் அதனை வெட்டிக் களைவதில்லை. அதுபோன்று நான் செய்த தவறுகளால் என்னைப் புறக்கணிக்காது என் பிழைகளைப் பொறுத்தருள வேண்டும் என்கிறார்.

................ தாம் வளர்த்தது ஓர்
நச்சு மாமரம் ஆயினும் கொலார்
நானும் அங் னனே உடைய நாதனே

என வேண்டுவதன் மூலம் இதை அறிய முடிகிறது.

### பெரியோரைத் துணைக்கோடல்

நாம் அறிவாலும் பண்பாலும் நம்மைவிட மேம்பட்ட பெரியோர்களைத் துணையாகக் கொண்டு வாழ்ந்தால் நம் வாழ்க்கை மேம்பாடடையும். எனவே, சிற்றினம் சேராது பெரியாரைத் துணைக்கொண்டு வாழ வேண்டும். இந்தச் சமுதாய மதிப்பானது,

அறிவார் அமரர் தலைவனை நாடிச்
செறிவார் பெறுவர் சிவதத்து வத்தை
நெறிதான் மிகமிக நின்றருள் செய்யும்
பெரியாரு டன்கூடல் பேரின்ப மாமே

எனத் திருமூலராலும்,

மாதர்ப்பிறைக் கண்ணியானை மலையான் மகளொடும் பாடிப்
போதொடுநீர் சுமந்தேத்திப் புகுவார் அவர்பின் புகுவேன்

என அப்பர் பெருமானாலும் வலியுறுத்தப்படக் காணலாம்.

### பொறையுடைமை

பொறையுடைமை மூலம் பல்வேறு சமுதாயப் பிரச்சினைகளையும் தனிமனிதப் பிரச்சினைகளையும் நீக்கிவிடலாம். பொறையுடைமை உள்ளாரிடத்தில் பலரும் நட்பாகப் பழகுவர். எனவே பொறையுடைமை

அனைவராலும் கடைபிடிக்க வேண்டிய சமுதாய மதிப்பு என்பது புலனாகிறது. திருமூலர் பற்றுள்ளம் கொண்டாரிடத்துப் பொறாமை என்ற பல்லி பற்றிக் கிடந்தது. பொறாமை நம்மைப் பற்றாமலிருக்கப் பொறுமையை மேற்கொள்ள வேண்டும் எனத் திருமூலர் அறிவுரை கூறுகின்றமையை,

பற்றி நின்றார் நெஞ்சில் பல்லிதான் ஒன் றுண் டு
முற்றிக் கிடந்தது மூக்கையும் நாவையும்
தெற்றிக் கிடந் து சிதைக்கின்ற சிந்தையுள்
வற்றா தொழிவது மாகமை யாமே

என்ற பாடலால் அறியலாம்.

## மனத்திட்பம்

நம் செயல்கள் அனைத்திற்கும் அடிப்படையாக அமையும் மனம், தூய்மையுடன் மட்டுமின்றித் திட்பமுடனும் அமைய வேண்டும். அப்போதுதான் எடுத்த செயல்களையும் சமுதாய நலம் பயக்கும் செயல்களையும் செம்மையுடன் செய்து முடிக்க முடியும்.

பக்தி இலக்கியச் சான்றோர்கள் இறைவனைத் தவிர வேறு எவரையும் எண்ண மாட்டோம். வேறு எவரையும் புகழ மாட்டோம் எனக் கூறுமிடத்தில் அவர்களுடைய மனத்திட்பம் வெளிப்படுவதுடன், இத்தகைய மனத்திட்பம் மக்களுக்கும் வேண்டும் என அறிவுறுத்தப்படுவதையும் அறியலாம். சான்றாக,

நாமார்க்குங் குடியல்லோம் நமனை யஞ்சோம்
நரகத்தி லிடர்படோம் நடலை யில்லோம்
ஏமாப்போம் பிணியறியோம் பணிவோ மல்லோம்
இன்பமே எந்நாளும் துன்ப மில்லை
தாமார்க்குங் குடியல்லாத் தன்மை யான
சங்கரன்நற் சங்கவெண் குழையோர் காதிற்
கோமாற்கே நாமென்றும் மீளா ஆளாய்க்
கொய்ம்மலர்ச் சேவடியிணையே குறுகி னோமே

எனவரும் பாடலைக் காட்டலாம்.

இதைப்போன்று திருநாவுக்கரசர் உடல் தளர்ந்து வாடியபோதும் இறைவனை வணங்கியேயாக வேண்டும் என்ற மனத்திட்பத்துடன் மனம் தளராது இறைவன் உறையும் கயிலாய மலையைக் கண்டாலல்லாது இந்தப்

பாழும் உடலைக் கொண்டு திரும்பேன் என மனத்திட்பத்துடன் கூறியதைச் சேக்கிழார் பெருமான்,

மார்பமுந்தசை நைந்து சிந்தி வரிந்த என்பு முறிந்திட
நேர்வருக் குறிநின்ற சிந்தையின் நேசம் ஈசனை நேருநீ
டார்வம் அங்குயிர் கொண்டு கைக்கும் உடம்படங்கவும் ஊன்கெடச்
சேர்வரும் பழுவம் புரண்டு புரண்டு சென்றனர் செம்மையோர்

அப்புறம் புரள்கின்ற நீளிடை அங்கம் எங்கும் அரைந்திடச்
செப்பருங் கயிலைச் சிலம்படி சிந்தை சென்றுறும் ஆதலால்
மெய்ப்புறத் தில்உறுப் பழிந்தபின் மெல்ல உந்து முயற்சியும்
தப்புறச் செயலின்றி அந்நெறி தங்கி னார்தமி ழாளியார்

அன்ன தன்மை யர்கயிலையை அணைவதற் கருளார்
மன்னுதீந்தமிழ் புவியின்மேற் பின்னையும் வழுத்த
நன்னெடும் புனல்தடமும் ஒன்றுடன் கொடுநடந்தார்
பன்னாகம் புனைபரமரோர் முனிவராம் படியால்

வந்துமற்ற வர்மருங்குற அணைந்து நேர்நின்று
நொந்துநோக்கி மற்றவர்எதிர் நோக்கிட நுவல்வார்
"சிந்திஇவ் வுறுப்பழிந்திட வருந்திய திறத்தால்
இந்தவெங் கடத்தெய்தியதென்" எனஇசைந்தார்

மாசில்வற் கலைஆடையும் மார்பின் முந்நூலும்
தேசுடைச் சடைமவுலி யும்நீறும் மெய்திகழ
ஆசின்மெய்த் தவத்தராகி நின்றவர் தமைநோக்கிப்
பேச உற்றதோர் உணர்வுற விளம்புவார் பெரியோர்

வண்டுலாங் குழல்மலை மகளுடன் வடகயிலை
அண்டர்நா யகர்இருக்கும் அப்பரிசவர் அடியேன்
கண்டுகும்பிட விருப்பொருங் காதலின் அடைந்தேன்
கொண்ட குறிப்பிது முனியே" எனக்கூறி

கயிலைமால் வரையாவது காசினி மருங்கு
பயிலும்மா னுடப்பான்மை யோர்அடைவ தற்கெளிதோ
அயில்கொள் வேற்படை அமரரும் அணுகுதற்கரிதால்
வெயில்கொள்வெஞ் சுரத்தென்செய் தீர்வந்தென விளம்பி

மீளும் அத்தனை உமக்கினிக்கடன்" எனவிளங்கும்
தோளும் ஆகமும் துவளு முள்நூல் முனிசொல்ல

"ஆளும் நாயகன் கயிலையில் இருக்கை கண்டல்லால்
மாறும்இவ் வுடல்கொண்டு மீளேன்" எனமறுத்தார்

எனக் காட்டுகிறார். இதில் நாவுக்கரசரின் மனத்திட்பம் வெளிப்படுகின்றது. இதன்மூலம் எத்தகைய துன்பங்கள் வந்தாலும் கொண்ட கொள்கையிலிருந்து பின்வாங்காது மனத்திட்பத்துடன் செயல்பட வேண்டும் என்ற சமுதாய மதிப்பு வலியுறுத்தப்படக் காணலாம்.

ஆடவர் கற்பு

சமுதாயத்தில் பால் அடிப்படையில் ஏற்றத் தாழ்வுகள் நிலவுகின்றன. ஆடவர்கள் ஆதிக்கமிக்க வாழ்க்கை வாழ்கின்றனர். பெண்கள் கற்புடன் வாழ வேண்டும் எனச் சமுதாயம் எதிர்பார்க்கின்றது. அதே சமுதாயம் ஆடவர் கற்புக்கு அழுத்தம் கொடுப்பதில்லை. ஆடவர்கள் கற்புடன் வாழ்ந்தால்தான் பெண்களும் கற்புடன் வாழ முடியும். எனவேதான் பாரதியார் கற்புநிலை என்று சொல்ல வந்தால் அதை இரு கட்சிக்கும் பொதுவில் வைப்போம் என்றார். இரு பாலாரும் கற்புடன் வாழ்ந்தால்தான் சமுதாயம் செம்மையுறும். பால் அடிப்படையில் சமத்துவம் ஏற்படும். எனவே, ஆடவர் கற்பு இன்றியமையாத சமுதாய மதிப்புகளில் ஒன்றாக அறிவுறுத்தப் பெறுகிறது.

சிறுத்தொண்ட நாயனாரின் இல்லத்திற்கு இறைவன் மறையவர் வடிவில் வருகின்றார். அப்போது சிறுத்தொண்டர் வீட்டில் இல்லை என்பதை அறிகின்றார். அவர் மனைவி மட்டுமே தனியாக உள்ளார். எனவே பெண்கள் தனித்திருக்கும் வீட்டில் புகக் கூடாது என்று எண்ணி அம்மறையவர் புறப்படுகிறார். சிறுத்தொண்டரின் மனைவி போக வேண்டாம் எனக் கூறியும் கூட மறையவர் கணபதீச்சுரத்திலுள்ள ஆத்தியின்கீழ் அமர்ந்திருந்து அவர் வந்ததும் வருவதாகக் கூறிச் செல்கிறார். இதனைச் சேக்கிழார்பெருமான்,

தண்டாத தொருவேட்கைப் பசியுடையார் தமைப்போலக்
கண்டாரைச் சிறுத்தொண்டர் மனைவினவிக் கடிதணைந்து
"தொண்டனார்க் கெந்நாளுஞ் சோறளிக்குந் திருத்தொண்டர்
வண்டார்பூந் தாரர்இம் மனைக்குள் ளாரோ"என்ன

வந்தணைந்து வினாவார் மாதவரே யாம்"என்று
சந்தனமாந் தையலார் முன்வந்து தாள்வணங்கி
அந்தமில் சீர்அடியாரைத் தேடிஅவர் புறத்தணைந்தார்
எந்தமை ஆளுடையவரே அகத்தெழுந் தருளும்"என

மடவரலை முகம்நோக்கி "மாதரார் தாமிருந்த
இடவகையிற் தனிப்புகுதோம்" என்றருள அதுகேட்டு
விடஅகல்வார் போலிருந்தார் எனவெருவி விரைந்துமனைக்
கடனுடைய திருவெண்காட் டம்மைகடைத் தலையெய்தி

அம்பலவர் அடியாரை அமுது செய்விப் பார்இற்றைக்
கெம்பெருமான் யாவரையு' கண்டிலர் தேடிப்போனார்
வம்பெனநீர் எழுந்தருளி வருந்திரு வேடங்கண்டால்
தம்பெரிய பேறென்றே மிகமகிழ்வார் இனித்தாழார்

இப்பொழுதே வந்தணைவார் எழுந்தருளி இரும்''என்ன
ஒப்பில்மனை யறம்பரப் பீர்!உத்தரா பதியுள்ளோம்
செப்பருஞ்சீர்ச் சிறுத்தொண்டர் தமைக்காணச் சேர்ந்தனம்யாம்
எப்பரிசும் அவரொழிய இங்கிரோம் என்றருளி

கண்ணுதலிற் காட்டாதார் கணபதிச் சுரத்தின்கண்
வண்ணமார் ஆத்தியின்கீழ் இருக்கின்றோம் மற்றவர்தாம்
நண்ணினால் நாமிருந்த பரிசுரைப்பீர் என்றருளி
அண்ணலார் திருவாத்தி அணைந்தருளி அமர்ந்திருந்தார்

எனக் காட்டுகிறார். இதனால் அயலவர் மனைவி தனித்திருக்கும் இல்லில் பிற ஆடவர் புகுதல் கூடாது என்ற சமுதாய மதிப்பு வலியுறுத்தப்படுகிறது.

கணவனிடம் உண்மையை மறைக்காமை

தாம் கொண்ட கணவனிடம் பெண்கள் எச்சூழலிலும் உண்மையை மறைத்தல் கூடாது என்ற சமுதாய மதிப்பு காரைக்கால் அம்மையார் வரலாற்றில் வெளிப்படுத்தப்படுகின்றது.

காரைக்கால் அம்மையார் தன் கணவன் கொடுத்தனுப்பிய மாங்கனிகளில் ஒன்றைத் தன் இல்லத்திற்கு வந்த அடியார்க்கு உணவு படைக்கும்போது கொடுத்து மகிழ்கின்றார். உணவுண்ண வந்த கணவனுக்கு எஞ்சிய ஒரு மாங்கனியை அளிக்கிறார். அதை உண்ட கணவன் இன்னொரு மாங்கனியையும் கொண்டுவருமாறு கூறுகிறான். செய்வதறியாத காரைக்கால் அம்மையார் இறைவனிடம் இறைஞ்சுகிறார். இறைவன் அருளால் ஒரு மாங்கனி கிடைக்கிறது. அதைத் தன் கணவனுக்கு அளிக்கிறார். அதை உண்ட அவர் கணவன் இந்த மாங்கனி முந்தைய மாங்கனியை விடவும் சுவைமிக்கதாக உள்ளதே, இதை எங்கிருந்து பெற்றாய் என வினவுகிறான். அப்போது காரைக்கால் அம்மையார் கற்புடைய பெண்கள் தம் கணவனிடம்

உண்மையை மறைக்கக் கூடாது என்ற சமுதாய மதிப்பை உள்ளத்தில் கொண்டு உண்மையைக் கூறுகிறார். இது,

மற்றதனைக் கொடுவந்து மகிழ்ந்திடலும் அயின்றதனில்
உற்றசுவை அமுதினுமேற் படவுளதாயிட இதுதான்
முற்றருமாங் கனியன்று மூவுலகில் பெறற்கரிதால்
பெற்றதுவே றெங்கென்று பெண்வளையார் தமைக்கேட்டான்

அவ்வுரை கேட்டலும் மடவார் அருளுடை யார்அளித் தருளுஞ்
செவ்விய பேர்அருள் விளம்புந் திறமன் றென்றுரை செய்யார்
கைவரு கற்புடைய நெறியால் கணவன் உரைகா வாமை
மெய்வழி யன்றென விளம்பல் விடமாட் டார்விதிர்ப் புறுவார்

எனக் காட்டப்படுகிறது.

## குழந்தைகள் கடன்

பெற்றோர்கள் ஏவிய தொழில்களைக் கேட்டு நடத்தலே குழந்தைகள் கடன் என்பது அப்பூதி அடிகள் வரலாற்றில் காட்டப்படுகிறது. அப்பர் பெருமானுக்குத் திருவமுது படைப்பதற்காக அப்பூதியடிகள் தன் மகனிடம் வாழை இலை அரிந்துவருமாறு கூறுகிறார்.

தூயநற் கறிகளான அறுவகைச் சுவையாய் ஆக்கி
ஆயஇன் அமுதும் ஆக்கி அமுது செய்தருளத் தங்கள்
சேயவர் தம்மில் மூத்த திருநாவுக் கரசை வாழை
மேயபொற் குருத்துக் கொண்டு வாஎன விரைந்து விட்டார்
நல்லதாய் தந்தை ஏவநான் இதுசெயப் பெற்றேன்

என அவர் மகன் செல்வதாகக் காட்டப்படுகிறது.

## இல்லற வாழ்க்கை

குடும்பம் என்ற நிறுவனத்தில் இன்றியமையாத பங்கு வகிப்போர் கணவனும் மனைவியும் ஆவர். இல்லற வாழ்க்கையில் கணவன் மனைவி இடையே சிறுசிறு பூசல்கள் எழுதல் இயல்பே. அப்பூசல்களைப் பெரிது படுத்தினால் கணவன் மனைவி உறவு சிதைந்துவிடும். எனவே இத்தகைய பூசல்கள் ஏற்படும்போது அவற்றை அயலார் அறியாவண்ணம் மறைத்துக் குடும்ப மானத்தைக் காக்க வேண்டும் என்ற சமுதாய மதிப்பு திருநீலகண்ட நாயனார் வரலாறு மூலம் காட்டப்படுகிறது.

திருநீலகண்ட நாயனார் பரத்தை உறவில் ஈடுபட்டமையைக் கண்ட அவர் மனைவி,

ஆனதங் கேள்வர் அங்கோர் பரத்தைபால் அணைந்து நண்ண
மானம் பொறாது வந்த ஊடலால் மனையின் வாழ்க்கை
ஏனைய எல்லாஞ் செய்தே உடனுறை(வு)இசையார் ஆனார்
தேனலர் கமலப் போதில் திருவினும் உருவினும் மிக்கார்

மூண்ட அப்புலவி தீர்க்க அன்பனார் முன்பு சென்று
பூண்தயங் கினமென் சாயல் பொற்கொடி அனையார் தம்மை
வேண்டுவ இரந்து கூறி மெய்யுற அணையும் போதில்
தீண்டு வீராயின் எம்மைத் திருநீல கண்டம் என்றார்

ஆதியார் நீலகண்டத் தளவுதாம் கொண்ட ஆர்வம்
பேதியா ஆணை கேட்ட பெரியவர் பெயர்ந்து நீங்கி
ஏதிலார் போல நோக்கி, "எம்மை என்றதனால் மற்றை
மாதரார் தமையும் என்தன் மனத்தினும் தீண்டேன் என்றார்

கற்புறு மனைவி யாரும் கணவனார்க் கான எல்லாம்
பொற்புறு மெய்யு றாமல் பொருந்துவ போற்றிச் செய்தே
இப்புறம்(பு) ஒழியா தங்கண் இருவரும் வேறு வைகி
அற்புறு புணர்ச்சி இன்மை அயலறி யாமை வாழ்ந்தார்

எனக் காட்டப்படுகிறது.

அரசன் கடமைகள்

சமுதாயத்தில் காணப்படும் நிறுவனங்களில் ஒன்று அரசியல். அரசியலில் தலைமைப் பொறுப்பினை வகிக்கும் அரசன் தொடர்பான மதிப்புகளும் கூறப்படுகின்றன.

சமுதாய மக்களில் சிலர் பொய் வேடம் பூண்டு மக்களை ஏமாற்றி வருகின்றனர். இவர்களால் சமுதாயம் சீர்கெடும் நிலை உருவாகின்றது. எனவே நாடாளும் மன்னர்கள் அவர்களுடைய பொய் வேடங்களை அகற்ற வேண்டும் என்பதைத் திருமூலர்,

ஞானமில்லார் வேடம் பூண்டிருந்த நாட்டிடை
ஈனமதே செய்திரந் துண்டி ருப்பினும்
மான நலங்கெடும் அப்புவி யாதலால்
ஈனவர் வேடங் கழிப்பித்தல் இன்பமே

என்கிறார். ஒரு நாட்டின் இன்பமும் துன்பமும் அந்நாட்டில் வாழ்கின்ற மக்களிடத்தே உள்ளன. மக்கள் செய்கின்ற நற்செயல்களும் புன்செயல்களும் அந்நாட்டைப் பாதிக்கும். எனவே மன்னன் நாட்டிலுள்ள மக்களைச் செம்மைப்படுத்திச் சிறந்த சமுதாய உறுப்பினராக மாற்றுவானாயின் உலகம் வாழும் என்றும் திருமூலர் கூறுவதை,

> இன்பமும் துன்பமும் நாட்டா ரிடத்துள்ள
> நன்செயல் புன்செய லாலந்த நாட்டிற்காம்
> என்ப இறைநாடி நாடொறும் நாட்டினின்
> மன்பதை செப்பஞ் செயின்வை யம்வாழுமே

என்ற பாடலால் அறியலாம்.

மன்னர்கள் தம் நாட்டில் வாழும் மக்களுக்கெல்லாம் கண்ணும் உயிருமாய் நின்று அவர்களைக் காத்தல் வேண்டும் என்பதைச் சேக்கிழார் திருநகரச் சிறப்பில்,

> மண்ணில் வாழ்தரு மன்னுயிர்கட் கெல்லாம்
> கண்ணும் ஆவியும் ஆம்பெருங் காவலான்

எனக் காட்டுகின்றார்.

இதைப்போன்று மன்னர்கள் சிறப்புற ஆட்சி நடத்துவதற்கு அவர்கள் நாட்டில் வாழும் குடிமக்களும் நல்லொழுக்கத்தில் தலைசிறந்து நிற்க வேண்டும் என்பதைச் சேக்கிழார் பெருமான்,

> தொன்மைமுறை வருமண்ணின் துகளகற்றித் துகளில்லா
> நன்மைநிலை ஒழுக்கத்து நலஞ்சிறந்த குடிமல்கிச்
> சென்னிமதி புனையவளர் மணிமாடச் செழும்பதிகள்
> மன்னி நிறைந்துளது திருமுனைப்பாடி வளநாடு

எனத் திருமுனைப்பாடி நாட்டின் வருணனையுள் குறிப்பிடுகின்றார்.

முற்கூறியன தவிர, இரவாமை, பிற உயிர்களுக்குத் துன்பம் செய்யாமை, உருவுகண்டு எள்ளாமை, கள்ள உள்ளம் இல்லாமை, பேராசை கொள்ளாமை, பொச்சாவாமை, பொய்ம்மை கூறாமை, கடும் வட்டி வாங்காமை, ஐம்புலனடக்கம், செய்ந்நன்றியறிதல், தன்னலமின்மை போன்ற சமுதாய மதிப்புகளும் திருமுறைகளில் வலியுறுத்தப்படுகின்றமையை அறிய முடிகிறது.

## வழக்கங்கள்

அருவப் பண்பாட்டுக் கூறுகளில் ஒன்றாக வழக்கங்கள் திகழ்கின்றன.

மரபாகக் கடைபிடிக்கப்பட்டு வரும் சமூகமயமாக்கப் பெற்ற நடவடிக்கைகளின் குறிக்கோள்கள் வழக்கங்கள் எனப்படும் என்று சமூகவியல் அகராதி குறிப்பிடுகின்றது.[29] வழக்கங்களுக்கெதிரான செயல் களுக்குச் சமூகம் ஒப்புதல் அளிப்பதில்லை என்பதால் இவ்வழக்கங்கள் சமூகத்தில் வலியுறுத்தப்படுகின்றன. திருமுறைகளில் இடம்பெறும் வழக்கங்கள் சிலவற்றை இவண் காணலாம்.

### விருந்தோம்பல்

வந்த விருந்தினர்களைப் போற்றி வரவேற்றல் என்பது பண்டைக்காலந் தொட்டே தமிழகத்தில் வழங்கி வரும் வழக்கமாகும்.

திருமுனைப்பாடி நாட்டை வருணிக்கும் சேக்கிழார்,

காலெல்லாம் தகட்டுவரால் கரும்பெல்லாம் கண்பொழிதேன்
பாலெல்லாம் கதிர்சாலி பரப்பெல்லாங் குலைக்கமுகு
சாலெல்லாம் தரளநிரை தடமெல்லாஞ் செங்கழுநீர்
மேலெல்லாம் அகிற்றூபம் விருந்தெல்லாம் திருந்துமனை

என அங்குள்ள வீடுகளில் விருந்தினர்களை உபசரிக்கும் வழக்கம் உள்ளமை காட்டப்படுகிறது.

### உணவு உண்ணும் வழக்கம்

மக்களின் வாழ்க்கையில் நிகழும் ஒவ்வொரு செயலும் அவர்களுடைய பண்பாட்டை வெளிப்படுத்துவதாக அமையும். இவ்வகையில் உணவு உண்ணும் வழக்கமும் அமைகின்றது.

அடியார்கள் உணவு உண்ணும் முன்பு கால்களைக் கழுவி, திருநீறு இட்டு, பிறருக்கும் திருநீறு கொடுத்து உண்ணும் வழக்கம் உள்ளமையை அப்பூதியடிகள் திருநாவுக்கரசரை உணவு உண்ண அழைத்ததும்,

அருந்தவர் எழுந்து செய்ய அடியினை விளக்கி வேறோர்
திருந்தும் ஆசனத்தில் ஏறிப் பரிகலந் திருத்து முன்னர்
இருந்து வெண்ணீறு சாத்தி இயல்புடைய இருவ ருக்கும்
பொருந்திய நீறு நல்கிப் புதல்வர்க்கும் அளிக்கும் போழ்தில்

என்று திருநாவுக்கரசரின் செயல் காட்டுகின்றது.

வணிகர் குலத்தினர் உணவு உண்ணும் முன்பு நீராடும் வழக்கத்தை மேற்கொண்டிருந்ததை,

மற்றவர்தான் போயினபின் மனைப்பதியாகிய வணிகன்
உற்றபெரும் பகலின்கண் ஓங்கியபே ரில்லெய்திப்
பொற்புறமுன் நீராடிப் புகுந்தடிசில் புரிந்தயிலக்
கற்புடைய மடவாரும் கடப்பாட்டில் ஊட்டுவார்

என்ற காரைக்காலம்மையார் புராணப் பாடல் காட்டும்.

அக்கால மக்கள் நிலத்தின் இயல்பிற்கேற்பவும் உடலின் இயல்பிற் கேற்பவும் உணவு உண்ணும் வழக்கத்தைக் கைக்கொண்டிருந்தனர் என்பதைக் கண்ணப்பநாயனார் புராணத்தில் வரும்,

அயல்வரைப் புலத்தின் வந்தார் அருங்குடி இருப்பின் உள்ளார்
கயல்வகை உணவில் ஆர்ந்த எயிற்றியர் எயினர் எல்லாம்
உயர்கதிர் உச்சி நீங்க ஒழிவில் பல்நறவு மாந்தி
மயலுறு களிப்பின் நீடி வரிசிலை விழவு கொள்வார்

என்ற பாடல் காட்டுகின்றது.

வரவேற்கும் வழக்கம்

தன்னிடத்து வருவாரை வரவேற்கும் பண்பாடு குறிப்பிடத்தக்க ஒரு பண்பாடு ஆகும். இவ்வாறு வரவேற்பதில் பல வழக்கங்கள் உள்ளமையை அறிய முடிகிறது.

தம் வீட்டிற்கு வரும் இறையடியார்களை அவர்களுடைய கால்களில் வீழ்ந்து வணங்கி வரவேற்கும் வழக்கத்தைச் சிறுதொண்டரின் மனைவியின் செயல் மூலம் அறியலாம். சிறுதொண்டர் இல்லத்திற்கு அடியவர் உருவில் வந்த இறைவனைக் கண்டு அவர் மனைவி அடிகளில் வீழ்ந்து வணங்கியமையை,

வந்தணைந்து வினவுவார் மாதரே யாம்"என்று
சந்தனமாந் தையலார் முன்வந்து தாள்வணங்கி
அந்தமில்சீர் அடியாரைத் தேடிஅவர் புறத்தணைந்தார்
எந்தமை ஆளுடையவரே அகத்தெழுந் தருளும்என

என்ற பாடல் காட்டுகிறது.

தம் வீட்டிற்கு வரும் அடியார்களை வரவேற்கும் வழக்கத்தில் அவர் பாதம் விளக்க நீர் கொடுக்கும் தன்மையைக் காரைக்காலம்மையார் புராணத்தில் இடம்பெறும்,

வேதங்கள் மொழிந்தபிரான் மெய்த்தொண்டர் நிலைகண்டு
நாதன்தன் அடியாரைப் பசிதீர்ப்பேன் எனநண்ணிப்
பாதங்கள் விளக்க நீர்முன்னளித்துப் பரிகலம்வைத்
தேதந்தீர் நல்விருந்தா இன்னடிசில் ஊட்டுவார்

என்ற பாடல் உணர்த்துகிறது.

அப்பூதியடிகள் தம்மகன் இறந்த செய்தியைக் கூடக் கூறாது, தன் மனக் கவலையை மறைத்து நாவுக்கரசருக்கு உணவு படைத்தமையை,

பெறவரும் புதல்வன் தன்னைப் பாயி னுட்பெய்து மூடிப்
புறமனை முன்றிற் பாங்கோர் புடையினில் மறைத்து வைத்தே
அறஇது தெரியா வண்ணம் அமுது செய்விப்போம் என்று
விறலுடைத் தொண்ட னார்பால் விருப்போடு விரைந்து வந்தார்

என்று சேக்கிழார் பெருமான் கூறுகின்றார். மேலும், திருஞானசம்பந்தரை வரவேற்று உணவளித்து மகிழ்ந்தமையை,

போற்றிசைக்கும் பாடலி னாற்பொங் கிஎழும்
ஆதரவு பொழிந்து விம்ம
ஏற்றின்மிசை இருப்பவர் தம்எதிர் நின்று
துதித்துப் போந்தெல்லை நீங்கா
நீற்றுநெறி மறையவனார் நீல நக்கர்
மனையில் எழுந்தருளி அன்பால்
ஆற்றும் விருந்தவர் அமைப்ப அன்பருடன்
இன்புற்று அங்கமுது செய்தார்

காதலொடுந் தொழுதெடுத்துக் கொண்டுநின்று கைகுவித்துப்
பெருமகிழ்ச்சி கலந்து பொங்க
நாதர்விரும் படியார்கள் நாளும் நாளும்நல்
விருந்தாயுண் பதற்குவருக என்று
தீதில்பறை நிகழ்வித்துச் சென்றதொண்டர் திருவமுது
கறிநெய்பால் தயிரென் றின்ன

ஏதமுறா தினிதுண்ண ஊட்டி அங்கண் இருதிறத்துப்
பெருந்தவரும் இருந்த நாளில்

என்ற பாடல்கள் புலப்படுத்துகின்றன.

வீட்டிற்கு வந்த விருந்தினரை வாசல்வரை சென்று வழியனுப்பி விடைபெற்று வரும் வழக்கம் உள்ளமையை,

வைத்தபின் மறையவ ராகி வந்தருள்
நீத்தனார் நீங்கிட நின்ற தொண்டரும்
உய்த்துடன் போய்விடை கொண்டு மீண்டனர்
அத்தர்தாம் அம்பலம் அணைய மேவினார்

என்ற திருநீலகண்ட நாயனார் புராணப் பாடல் உணர்த்துகின்றது.

## பெரியோர்களின் வழக்கம்

பெரியோர்கள் ஒருவருக்கொருவர் சந்திக்கும்போது முதன்முதலில் மங்கலமாகத் தீதின்மையைக் கேட்டறிந்த பின்னரே பிற நிகழ்ச்சிகளைக் கூறுவது வழக்கம் என்பதை அறிய முடிகின்றது. திருநாவுக்கரசரும், திருஞானசம்பந்தரும் சந்திக்கின்றனர். அப்போது தாம் சந்திக்காத இடைப்பட்ட நாள்களில் நடந்தவற்றைக் கேட்டறிகின்றனர். திருமறைக்காட்டில் ஆளுடைய பிள்ளையாரைக் காணவந்த பாண்டிமாதேவியாராலும் குலச்சிறையாராலும் செல்ல விடுத்த சிலரிடம் அவர் முதன்முதலில் தீதின்மையை வினவி அறிகின்றார். அதற்கு அவர்கள் இவ்வுலகம் உய்ய வந்த உமது இருதாள் நினைவார்க்குத் தீமைகள் உளவாமோ என்று கூறிவிட்டுப் பின்னரே சமணர்களின் செயல்களைக் கூறுகின்றனர். இது,

வந்து சிவனார் திருமறைக் காடெய்தி மன்னு வேணுபுரி
அந்த ணாளர் தமக்கறிவித் தவர்பால் எய்தி அடிவணங்கச்
சிந்தை மகிழ்ந்து தீதின்மை வினவத் தீங்கும் உளவாமோ
இந்த உலகம் உயவந்தீர் இருதாள் நினைவார்க் கென்றுரைப்பார்

என்ற பாடல் மூலம் தெரியவருகிறது.

## பெரியோர்களை வரவேற்கும் முறை

சமயச் சான்றோர்கள், பெரியோர்கள் ஆகியோரை வரவேற்கும் முறை பற்றியும் அறிய முடிகிறது.

மாடநிரை மணிவீதித் திருவை யாற்றினில் வாழு மல்கு தொண்டர்
நாடுய்யப் புகலிவரு னாமோ னகர்வந்து நண்ணி னார்என்
றாடலொடு பாடலறா அணிமுதூர் அடைய அலங்காரஞ் செய்து
நீடுமனக் களிப்பி னொடும் எதிர்கொள்ள ..........

மகரத் தோரணம் வண்குலைக் கமுகொடு கதலி
நிகரில் பல்கொடித் தாமங்கள் அணிபெற நிரைத்து
நகரநீள் மறுகு யாவையும் நலம்புனை அணியால்
புகரில் பொன்னுல கிழிந்ததாம் எனப்பொலி வித்தார்

மாட வீதிமருங் கெல்லாம் மணிவாயில் களில்தோ ரணங்கள்
நீடு கதலியுடன் கமுகு நிரைத்து நிறைபொற் குடந்தீபம்
தோடு குலவு மலர்மாலை தூழ்ந்த வாசப் பந்தர்களும்
ஆடு கொடியு முடனெடுத் தங்கணிநீள் காஞ்சி அலங்கரித்தார்

ஒற்றியூர்வள நகரத்தொளி மணிவீதிகள் விளக்கி
நற்கொடி மாலை கள்பூகம் நறுங்கதலி நிரைநாட்டிப்
பொற்குடங்கள் தூபங்கள் தீபங்கள் பொலிவித்து
மற்றவரை எதிர்கொண்டு கொடுபுக்கார் வழித்தொண்டர்

கைக்கிடாக் குரங்கு கோழி சிவல்கவு தாரி பற்றிப்
பக்கமுன் போது வார்கள் மயில்மொழி பயிற்றிச் செல்ல
மிக்கபூம் பிடகை கொள்வோர் விரையடைப் பையோர் தூழ
மைத்தடங் கண்ணி னார்கள் மறுகநீள் மறுகில் வந்தார்

இப்பாடல்களால் பெரியோர்கள் வீதியில் எழுந்தருளும்போது மக்களும் இறைத் தொண்டர்களும் ஆடல், பாடல், நகரை அலங்காரம் செய்தல், தோரணம் கட்டல், கமுகுகள் நாட்டுதல், கதலி வாழைகள் நாட்டுதல், கொடிகள் கட்டுதல், மாலைகள் தொங்கவிடல், பொற்குடங்கள் வைத்தல், தீபங்கள் வைத்தல், மலர்ப் பந்தல்கள் அமைத்தல், வீதிகளைச் சுத்தம் செய்தல் ஆகியன மூலம் எதிர்கொள்ளும் வழக்கத்தை அறியலாம்.

பெண்கள் பல்லக்கில் வருதல்

சமுதாயத்தில் பொருளாதார நிலையில் மேம்பட்ட மக்கள் வெளியே வரும்போது பல்லக்கில் ஏறி வருதல் வழக்கம் என்பதை அறியமுடிகிறது.

காரைக்கால் அம்மையாரின் கணவர் வேறொரு பெண்ணுடன் இல்வாழ்க்கை வாழ்கின்றார் என்பதை அறிந்த அவர் சுற்றத்தார்கள் அவரை அவருடைய கணவனிடம் கொண்டுபோய் விடுவதென முடிவெடுத்து அவரைப் பல்லக்கில் அழைத்துச் செல்கின்றமையை,

மாமணிச் சிவிகை தன்னில் மடநடை மயில் அன்னாரைத்
தாமரைத் தவிசில் வைகுந் தனித்திரு என்ன ஏற்றிக்
காமரு கழனி வீழ்த்துக் காதல் செய்சுற் றத்தாருந்
தேமொழி யவருஞ் சூழச் சேணிடைக் கழிந்து சென்றார்

எனக் காட்டப்படுகின்றது.

குளிர் காய்தல்

மலைப் பகுதிகளிலும் அயலிடங்களிலும் வாழ்கின்ற மக்கள் வாடைக்காற்றின் குளிருக்கு ஆற்றமாட்டாது மஞ்சளையும் குங்குமத்தையும் ஒரு சேர அரைத்துப் புகைத்துள்ளனர். பக்க இடங்களிலுள்ளோர் அகிற் புகையூட்டியுள்ளனர். இடையிடங்களில் உள்ளவர்கள் தீயை உமிழும் பெரிய வாயையுடைய இரும்புச் சட்டியைத் தம் அணிமைக்கண் வைத்துக் குளிர் காய்ந்துள்ளனர். இவ்வாறு வாழிடங்களுக்கு ஏற்றவாறு வாடைக் காற்றின் கொடுமையிலிருந்து விடுபடும் வழக்கத்தை மக்கள் மேற்கொண்டமையை,

அரிசனமும் குங்குமமும் அரைத்தமைப்பார் அயலெல்லாம்
பரியஅகிற் குறைபிளந்து புகைப்பார்கள் பாங்கெல்லாம்
எரிஉமிழ்பேழ் வாய்த்தோணி இரும்பீர்ப்பார் இடையெல்லாம்
விரிவலர்மென் புறவணிந்த மீப்புலத்து வைப்பெல்லாம்

என்ற பாடல் காட்டுகின்றது.

பண்டமாற்று

தம்மிடம் உள்ள பொருள்களைக் கொடுத்து அவற்றிற்குப் பதிலாக வேறு பொருட்களைப் பெற்றுச் செல்லும் முறையாகிய பண்டமாற்று முறை அக்காலத்தில் வழக்கிலிருந்துள்ளது என்பதை அறிய முடிகிறது.

பரதவர்கள் மீன் குவியல்களை இடையர்களுக்குக் கொடுத்துவிட்டு, அவற்றிற்குப் பதிலாக அவர்களிடமிருந்து சிவல், கௌதாரி போன்றவற்றைப் பெற்றுச் சென்றமையையும், நெய்தல் நிலச் சிறுமியர் இடைச்சியர்களிடமிருந்து அவரைக்கு ஈடாகப் பவளத்தைப் பெற்றுச் சென்றமையையும்,

கவரும்மீன் குவைகழியவர் கானவர்க் களித்துச்
சிவலும்சே வலும்மாறியும் சிறுகழிச் சியர்கள்
அவரைஏ னலுக்கெயிற்றியர் பவளமுத் தளந்தும்
உவரிநெய் தலும்கானமும் கலந்துள ஒழுக்கம்

என்ற பாடல் மூலம் அறிய முடிகிறது.

அழகு செய்தல்

சமுதாயத்தில் வாழ்கின்ற பெண்களும் ஆடவர்களும் தம்மை அழகு செய்து கொள்ளும் வழக்கம் காணப்பட்டது. பெண்கள் கூந்தலில் மலர் அணிந்தும், கூந்தலை மங்கலமாகப் புனைந்தும் தங்களை அழகு செய்து கொண்டமையை,

புனை மலர்க்குழல் மனைவியார்........

என்ற அடி காட்டுகின்றது.

இதைப்போன்று ஆடவர்களும் குறிப்பிடத்தக்க நிகழ்ச்சிகளின்போது தம்மை அழகு செய்து கொண்டுள்ளனர். இவ்வாறு அழகு செய்வதற்கென்று தேர்ச்சிப் பெற்ற சிலர் வாழ்ந்துள்ளனர். இவர்கள் கைவல்லான் எனச் சுட்டப்பெறுகின்றனர்.

சுந்தரரின் திருமணத்திற்குமுன் அகிற்புகை கமழும் அழகிய பட்டாடையைச் சார்த்திக் கைவல்லான் ஒருவன்முன் கையிற் கொண்ட வெள்ளைத் துகிலை அவர் நீண்ட குடுமியின் உள்ளே முகிலுக்குள் நுழைந்த வெண்மதியைப்போன்று செலுத்தி, ஈரம் போக்கி, கையின் நக நுனியால் குஞ்சியின் சிக்கறுத்துச் சிகையைக் கட்டி அழகூட்டியமை,

அகில்விரைத் தூப மேய்ந்த அணிகொள் பட்டாடை சாத்தி
முகில்நுழை மதியம் போலக் கைவலான் முன்கை சூழ்ந்த
துகில்கொடு குஞ்சி ஈரம் புலர்த்தித் தன்தூய செங்கை
உகிர்நுதி முறையில் போக்கி ஒளிர்நறுஞ் சிகழி ஆர்த்தான்

எனக் காட்டப்படுகின்றது.

மாடுகளை வளர்க்கும் முறை

ஆநிரைகளை மேய்ப்பவர்கள் கொடுங்காற்றாலும் தீய நீராலும் விளையும் நோய்கள் ஆநிரைகளைத் தாக்காவாறும் ஆநிரைகளை

நோய்களிலிருந்து தடுக்கும் வண்ணமும் தூய, புதுமையான, சுவையான நீரையும், புல்லையும் நாடி ஊட்டி வளர்த்தனர். இதை,

பதவுகா லங்களில் மேய்த்துப் பறித்தும் அளித்தும் பரிவகற்றி
இதமுண் துறையுள் நற்றண்ணீர் ஊட்டி அச்சம் எதிர்நீக்கி
அதர்நல் லனமுன் செலநீழல் அமர்வித் ததிமது ரப்பால்
உதவும் பொழுது பிழையாமல் உடையோர் இல்லந்தோறும்
உய்த்தார்

என்ற பாடல் மூலம் உணரலாம்.

கைம்மாறு கொடுத்தல்

ஒருவர் உதவி செய்தபோதும், நல்ல செய்தியைக் கொண்டு வந்தபோதும் மனம் மகிழ்ந்து அவர்களுக்குக் கைம்மாறு கொடுக்கும் வழக்கம் காணப்பட்டது. விடம் ஏறி இறந்த பூம்பாவையின் சாம்பலைத் திருஞானசம்பந்தர் வருமளவும் பாதுகாத்து வைத்திருந்த சிவநேசரிடம் சம்பந்தர் வருகை புரிந்துள்ளார் என்ற செய்தியைக் கூறியவர்களுக்குச் சிவநேசர் பல பரிசுகளைக் கொடுக்கின்றார்.

இன்னவாறெ லாம்அறிந்து ளார்எய்தி அங்கிசைப்பச்
சொன்னவர்க்கெ லாம்இருநிதி தூசுடன் அளித்து
சொன்னவர்க் கெலாந்தூசொடு காசுபொன் னளித்தே

என்ற அடிகள் இதைக் காட்டுகின்றன.

இதைப்போன்று மங்கையர்க்கரசியாரும் சம்பந்தரின் வருகையை அறிவித்தவர்களுக்குப் பரிசுகள் கொடுத்தமையை,

அளவிலா மகிழ்ச்சி காட்டும் அரும்பெரு நிமித்தம் எய்த
உளம்மகிழ் வுணருங் காலை உலகெலாம் உய்ய வந்த
வளரொளி னாம் உண்டார் வந்தணைந் தருளும் வார்த்தை
கிளர்வுறும் ஓகை கூறி வந்தவர் மொழியக் கேட்டார்

அம்மொழி விளம்பி னோர்க்கு வேண்டூர் அடைய நல்கி
மெய்ம்மையில் விளங்கு காதல் விருப்புறு வெள்ளம் ஓங்க

என்ற அடிகள் காட்டுகின்றன.

### மேற்பார்வையாளர்கள் அமர்த்துதல்

தொழிலாளர்கள் தம்மால் கொடுக்கப்பட்ட பணிகளைக் குறைவறச் செம்மையாகப் புரிகின்றார்களா என மேற்பார்வை செய்வதற்காக மேற்பார்வையாளர்களை அமர்த்தும் வழக்கம் காணப்பட்டது. இவர்கள் கண்காணிகள் எனப்பட்டனர். இதனைத் திருமூலரின்,

கண்காணி யில்லென்று கள்ளம்பல செய்வார்
கண்காணி யில்லா விடமில்லை காணுங்கால்
கண்காணி யாகக் கலந்தெங்கு நின்றானைக்
கண்காணி கண்டார் களவொழிந் தாரே

என்ற பாடல் மூலம் அறியலாம்.

### கையூட்டுப் பெறல்

சமுதாயத்தில் வாழ்கின்ற மக்களிடையே சிலரிடம் கையூட்டுப் பெறும் வழக்கம் காணப்பட்டது என்பதைத் திருநாவுக்கரசர் வரலாறு மூலம் அறிய முடிகின்றது.

திருநாவுக்கரசர் சமண சமயத்தை விட்டுச் சைவ சமயம் சார்கின்றார். இதனால் சமணர்கள் மன்னனிடம் தகாத பொய்களைக் கூறி அவரைத் தண்டிக்குமாறு வேண்டுகின்றனர். மன்னன் ஏவலாளிகளை அழைத்துக் கையூட்டுப் பெற்றுக் கடமை தவறி விடாது திருநாவுக்கரசரை அழைத்து வருமாறு ஆணையிடுகின்றான். இதனால் கையூட்டுப் பெறும் வழக்கம் சிலரிடம் காணப்பட்டது என்பதும், அவ்வாறு கையூட்டுப் பெறுவதைத் தடுப்பதில் மன்னர்கள் கண்ணும் கருத்துமாக இருந்துள்ளனர் என்பதும் புலனாகின்றன. இக்கருத்தை,

அருள்கொண்ட உணர்வின்றி நெறிகோடி அறிவென்று
மருள்கொண்ட மன்னவனும் மந்திரிகள் தமைநோக்கித்
தெருள்கொண்டோர் இவர்சொன்ன தீயோனைச் செறுவதற்குப்
பொருள்கொண்டு விடாதென்பால் கொண்டுவாரும்
எனப்புகன்றான்

எனச் சேக்கிழார் காட்டுகின்றார்.

### பெண் விலை கொடுத்தல்

பெண்ணைத் திருமணம் செய்து கொடுக்கும்போது மணமகன் வீட்டார்க்கு மணமகள் வீட்டார் பொருள் கொடுக்கும் வழக்கம் காணப்பட்டது என்பதைக் காரைக்காலம்மையார் வரலாறு மூலம் அறிய முடிகிறது.

மகட்கொடையின் மகிழ்சிறக்கும் வரம்பில்தனம் கொடுத்ததற்பின்

என்ற அடியால் இதனை அறியலாம்

## தருமங்கள் செய்தல்

தருமங்கள் செய்வதால் நற்பலன்கள் கிட்டும் என்ற நோக்கில் மக்கள் பல்வேறு தருமங்களைச் செய்யும் வழக்கத்தை மேற்கொண்டிருந்தனர்.

ஆடுதோகைபுடை நாசிகள் தோறும்
அரணிதந்த சுடர்ஆ குதிதோறும்
மாடுதாமமணி வாயில்கள் தோறும்
மங்கலக் கலசம்வே திகைதோறும்

சேடுகொண்ட ஒளிதேர்நிலை தோறும்
செந்நெல்அன் னமலைசாலை கள்தோறும்
நீடுதண் புனல்கள்பந் தர்கள்தோறும்
நிறைந்ததே வர்கணம்நீ ளிடைதோறும்

என்ற பாடல் மூலம் அன்னசாலைகள், தண்ணீர்ப் பந்தல் பற்றிய குறிப்புகளைக் காண முடிகிறது. வழிப்போக்கர்கள் தங்கி இளைப்பாறக் கோயில்களின் பக்கங்களிலும் ஊர்களின் புறங்களிலும் மடங்கள் அமைந்துள்ளமையை,

அந்நாளில் ஒருவணிகன் பதிகளாகி
அணைவானோர் கன்னியையும் உடனே கொண்டு
பொன்னார் மேருச்சிலையார் கோயில்டாடு
புறத்திலொரு மடத்திரவு துயிலும்போது

என்ற அடிகளால் அறியலாம்.

இவ்வாறு நிறுவப்படும் அறங்களை உயர்ந்தோர் பெயரில் நிறுவும் வழக்கமும் காணப்பட்டது என்பதை அப்பர் பெருமான் பெயரில் அப்பூதியடிகள் நிறுவியமை மூலம் அறியலாம். இதனை,

வடிவுதாங் காணா ராயும் மன்னுசீர் வாக்கின் வேந்தர்
அடிமையுந் தம்பி ரானார் அருளுங் கேட்டவர் நாமத்தால்
படிநிகழ் மடங்கள் தண்ணீர்ப் பந்தர்கள் முதலா யுள்ள
முடிவிலா அறங்கள் செய்து முறைமையால் வாழும் நாளில்

என்ற பாடல் மூலம் அறியலாம்.

### சிறுகுறிப்பு எழுதும் வழக்கம்

சிறுசிறு வரிகளாகக் குறிப்பு எழுதும் வழக்கம் இருந்துள்ளது என்பதை அறிய முடிகிறது. இது கீழ்க்கணக்கு எனச் சுட்டப்பெற்றது என்பதைத் திருநாவுக்கரசர் தேவாரக் குறிப்பு மூலம் அறியலாம்.

தொழுது தூமலர்த் தூவித் துதித்துநின்
றழுது காமுற் றரற்றுகின் றாரையும்
பொழுது போக்கிப் புறக்கணிப் பாரையும்
எழுதுங் கீழ்க்கணக் கின்னம்பர் ஈசனே

என்பது அப்பாடல் ஆகும்.

### அந்தணர் வழக்கங்கள்

திருமணத்திற்கு முன்னர் அகமருடம் செய்யும் வழக்கம் அந்தணர்களிடம் காணப்பெற்றது என்பதை,

நீராடித் தருப்பித்து நியமங்கள் பலசெய்வார்
சீராடுந் திருமகனார் காண்பதன்முன் செய்ததற்பின்
ஆராத விருப்பினால் அகமருடம் படியாநீர்
பேராது மூழ்கினார் பெருங்காதல் பெற்றாராய்

என்ற பாடலால் அறியலாம்.

நீரில் கழுத்தளவு ஆழத்தில் நின்று அன்பொடு மனத்தையும் ஒருமைப்பட நிறுத்தி உருத்திரம் பயிலும் வழக்கத்தை,

தெள்ளு தண்புனல் கழுத்தள வாயிடைச் செறிய
உள்ளுறப் புக்கு நின்றுகை உச்சிமேற் குவித்துத்
தள்ளு வெண்திரைக் கங்கைநீர் ததும்பிய சடையார்
கொள்ளும் அன்பினில் உருத்திரம் குறிப்பொடு பயின்றார்

என்பதால் அறியலாம்.

குறிப்பிட்ட பருவம் வந்துற்றதும் வேள்விகள் செய்யும் வழக்கம் நிலவியதை,

மேவி அங்குனற் நாளில் வேள்வி செய்வதனுக்
காவதாகிய காலம் வந்தணைவுற...........

என்ற சேக்கிழார் வாக்கால் அறியலாம்.

வேடர்களின் வழக்கங்கள்

வேடர்குல மக்களின் வழக்கங்களைக் கண்ணப்பநாயனார் வரலாறு மூலம் அறிய முடிகின்றது.

திண்ணன் விற்பிடிக்கின்றான் என்ற செய்தி உடுக்கையை அடித்து அறிவிக்கப்படுகின்றது.

> வேடர்தன் கோமான் நாகன் வென்றிவேள் அருளால் பெற்ற
> சேடரின் மிகச்செய்கைத் திண்ணன்வில் பிடிக்கின் றான்என்
> றாடியல் துடியும் சாற்றி அறைந்த பேர்களைக் கேட்டு

வில்வித்தைகளைக் கற்பிக்கப்போகும் செய்தியை உறவினர்களுக்கு அழைப்பு விடுவித்து அறிவிக்கின்றனர். இதனை அறிந்த உறவினர்கள் தத்தம் மலைகளில் கிடைக்கும் பொருட்களைக் கொண்டு வருகின்றனர்.

> மலைபடு மணியும் பொன்னும் தரளமும் வரியின் தோலும்
> கொலைபுரி களிற்றுக் கோடும் பீலியின் குவையும் தேனும்
> தொலைவில் பல்நறவும் ஊனும் பழங்களும் கிழங்கும் துன்றச்
> சிலைபயில் வேடர்கொண்டு திசைதொறும் நெருங்க வந்தார்

விற்பயிற்சி தொடங்குவதற்கு முன்னால் நாட்டு மக்கள் அனைவருக்கும் உணவு அளிக்கின்றனர்.

> ஐவன அடிசில் வெவ்வேற மைந்தன புற்பாற் சொன்றி
> மொய்வரைத் தினைமென் சோறு மூங்கில் வன்பதங்கள் மற்றும்
> கைவினை எயினராக்கிக் கலந்த ஊன்கிழங்கு துன்றச்
> செய்வரை உயர்ப்ப எங்கும் கலந்தனர் சினவில் வேடர்

விற்பயிற்சி தொடங்கும்முன் தேவராட்டி நெற்றியில் அர்ச்சதை சார்த்தி வாழ்த்துகின்றாள்.

> நின்றெங்கு மொய்க்குஞ்சின வேடர்கள் நீங்கப்புக்குச்
> சென்றங்கு வள்ளல் திருநெற்றியில் சேடைசாத்தி
> "உன்தந்தை தந்தைக்கும் இந்நன்மைகள் உள்ளவல்ல
> நன்றும்பெரி துன்விறல் நம்மளவன் று இதென்றாள்"

வேடர்கள் புலித் தோலாகிய இருக்கையைப் பயன்படுத்தியுள்ளனர்.

செவ்வரைபோற் புயமிரண்டும் செறியப் புல்லிச்
செழும்புலித்தோல் இருக்கையினில் சேரவைத்தான்

வேடர்கள் வைகறைப் பொழுதிலே வேட்டையாடச் செல்லும் வழக்கத்தை மேற்கொண்டிருந்தனர்.

செங்கண்வயக் கோளரியேறு அன்ன திண்மைத்
திண்ணனார் செய்தவத்தின் பெருமை பெற்ற
வெங்கண்விறல் தாதைகழல் வணங்கி நின்றுவிடை
கொண்டு புறம்போந்து வேட ரோடும்
மங்கலநீர்ச் சுனைபடிந்து மனையின் வைகி
வைகிருளின் புலர்காலை விரிவிற் சாலைப்
பொங்குசிலை அடல்வேட்டைக் கோலங் கொள்ளப்
புனைதொழிற்கை வினைஞரொடும் பொலிந்து புக்கார்

வேட்டைக்குச் செல்லும் வேடர்கள் தம்முடன் நாய்களையும் அழைத்துச் செல்லுவது வழக்கம் ஆகும்.

குன்றவர்அதனில் வாழ்வார் கொடுஞ்செவி மலியார்த்த
வன்திரள் விளவின்கோட்டு வார்வலை மருங்குதூங்கப்
பன்றியும்புலி யும்எங்கும் கடமையும்மா னின்பார்வை
அன்றியும் பாறைமுன்றில் ஐவனம்உணங் கும்எங்கும்

மேகங்கள் சூழ்ந்த மலைகளிலும் மலைக்குகைகளிலும் விலங்குகளை வேட்டையாட நீண்ட வார்களையும் வலைகளையும் கொண்டு செல்வர்.

போர்வலைச் சிலைத்தொழிற் புறத்திலே விளைப்பவச்
சார்வலைத் தொடக்கறுக்க ஏகும் ஐயர் தம்முனே
கார்வலைப் படுத்தகுன்று கானமா வளைக்கநீள்
வார்வலைத் திறஞ்சுமந்து வந்தவெற்பர் முந்தினார்

வேட்டையாடுவதற்கு உறுதுணையாகப் பார்வை விலங்குகளைப் பயன்படுத்துதல் வேடர்களின் வழக்கங்களில் ஒன்றாகும். சில விலங்குகளைப் பிடிக்க வேறு சில விலங்குகளைப் பழக்கப்படுத்தி வைத்திருப்பர். அவை பார்வை விலங்குகள் எனப்படும்.

யானையின் கன்றுகள், விலங்குகளின் குட்டிகள் கருப்பமுற்ற பெண் விலங்குகள் போன்றவற்றை வேட்டையறம் கருதி வேடர்கள் கொல்வதில்லை.

துடியடியன மடிசெவியன துறுகயமுனி தொடரார்
வெடிபடவிரி சிறுகுருளை கள்மிசைபடு கொலைவிரவார்
அடிதளர்வுறு கருவுடையன அணைவுறுபிணை அலையார்
கொடியனஎதிர் முடுகியும்உறு கொலைபுரி சிலைமறவோர்

இவ்வாறு வேடர்களின் வழக்கங்கள் கண்ணப்பநாயனார் புராணத்தில் காட்டப்பெறுகின்றன.

வழக்குகள் தொடர்பான வழக்கங்கள்

வழக்குகள் தொடர்பான வழக்கங்களைத் தடுத்தாட் கொண்ட புராணம் மூலம் அறிய முடிகின்றது.

வழக்கு வகைகள்

அக்காலத்தில் வழக்குகள் தருமநூல், தாய நூல், உலக நூல் என்பனவற்றின் வழி வந்தன. எனவே வழக்குகளைப் பொது உரிமைகளின்பேரில் வழக்கின்படி வரும் வழக்குகள் (Causes based on Common Laws. rights etc.). ஒப்பந்தப்படி வரும் வழக்குகள் (Causes based upon Agreements) என இருவகைகளில் மேற்கொள்ளும் வழக்கம் காணப்பட்டது என்பது தெரிகின்றது.

மறையவர் வடிவில் வந்த இறைவன் சுந்தரர் தமக்கு அடிமை எனக் கூறுகின்றார். அப்போது திருமண மன்றத்தில் கூடியிருந்தவர்கள், அந்தணர்கள் பிறருக்கு அடிமை ஆதல் இல்லை என்கின்றனர். உடனே மறையவர் வடிவில் வந்த இறைவன் இது இசைவின்வழி வந்த வழக்கு என்கிறார்.

அந்தணர் அவையில் மிக்கார் "மறையவர் அடிமை ஆதல்
இந்த மாநிலத்தில் இல்லை என்சொன்னாய் ஐயா" என்றார்
வந்தவாறு இசைவே அன்றோ வழக்கிவன் கிழித்த ஓலை
தந்தைதன் தந்தை நேர்ந்தது என்றனன் தனியாய் நின்றான்

முறையிடுதல்

வழக்குத் தொடுப்பவர் சபையில் சென்று தம் முறையீடு (Complaint) என்ன என்று முறையிடுவது வழக்கம் எனலாம். மறையவர் வடிவில் வந்த இறைவன் சுந்தரர் தமக்கு அடிமை என எழுதிய ஓலையைக் காட்டியதும் சுந்தரர் அதைக் கிழித்துவிட்டார். எனவே, இறைவன்

அந்தணர்கள் நிறைந்த சபைக்குச் சென்று சுந்தரர் தமக்கு அடிமை என எழுதிய ஓலையை அவர் கிழித்துவிட்டதாக முறையீடு செய்கின்றார்.

வேதபரா கரில்மிக்கார் விளங்குபேர் அவைமுன் சென்று
நாதனாம் மறையோன் சொல்லும்" நாவலூர் ஆரு ரன்தான்
காதலென் அடியான் என்னன் காட்டிய ஓலை கீறி
மூதறிவீர் முன்போந்தான் இதுஎன்றன் முறைப்பா டென்றான்

இவ்வழக்கும் திருநீலகண்ட நாயனார் புராணத்திலும் காட்டப்படுகின்றது.

இறைவன் அடியார் வடிவில் வந்து பாதுகாப்பாக வைத்திருக்குமாறு கொடுத்த ஓட்டைக் களைந்தமைக்காகத் திருநீலகண்டர்மீது வழக்கு முறையிட அந்த அடியார் மன்றத்திற்குச் செல்கின்றமை,

"அந்தணனாம் எந்தைபிரான் அருமறையோர்பின் பகர்வான்

"இந்தவேட் கோவன்பால் யான்வைத்த பாத்திரத்தைத்
தந்தொழியான் கெடுத்தானேல் தன்மனைவி கைபற்றி
வந்துமூழ் கியுந்தாரான் வலிசெய்கின்றான்" என்றார்"

எனக் காட்டப்படுகின்றது.

விசாரிக்கும் முறை

நீதி வழங்கும் சபையிலுள்ளவர்களை அவர்களுடைய அறிவு மேம்பாடு, சான்றாண்மை, நடுநிலைமை என்பன வெளிப்படும் வண்ணம் அழைக்கும் வழக்கம் உண்டு என்பதை,

அனைத்து நூல் உணர்ந்தீர்

என்ற தடுத்தாட்கொண்ட புராணப்பாடல் அடியாலும்,

நிறையும் பெருமை அந்தணர்காள்

என்ற சண்டேசுரநாயனார் புராணப்பாடல் அடியாலும் அறியலாம்.

சுந்தரர் தமக்கு அடிமை என்று முறையிட்ட மறையவரிடம் அதைத் தக்க சான்றுகளுடன் உறுதிப்படுத்துமாறு சபையோர் கூறுகின்றார். இதனால், நீதிச் சபையில் முறையிடுவோர் தம் முறையீட்டை உறுதி செய்ய வேண்டிய பொறுப்புடையவர்கள் (Burden of Proof) என்பது தெரிகிறது.

வழக்குத் தொடுப்பவர் தம் முறையீட்டை உறுதி செய்ய ஆட்சி, ஆவணம், அயலார் சாட்சி என்ற மூன்று வழிகளில் ஒன்றைப் பயன்படுத்துவர்.

ஆட்சியில் ஆவ ணத்தில் அன்றி மற்றயலார் தங்கள்
காட்சியில் மூன்றில் ஒன்று காட்டுவாய்" என்ன முன்னே
மூட்சியில் கிழித்த ஓலை படியோலை மூல ஓலை
மாட்சியில் காட்ட வைத்தேன்" என்றனன் மாயை வல்லான்

ஆட்சி என்பது சான்றோரிடத்துத் தொன்றுதொட்டு வழங்கி வருவதும், யாவராலும் ஒப்புக் கொள்ளப்பெறுவதுமாகிய உலக வழக்காகும். ஆணவம் என்பது வழக்கின் பகுதிகளைக் காட்டக்கூடிய செய்திகளை உள்ளடக்கிய ஓலை ஆவணம் ஆகும். வழக்கின் பகுதிகளைப் பிறர் தாம் கண்ணுற்றதாகக் கூறுவது காட்சி ஆகும் என்றும் விளக்குவர். காட்சியை வாய்மொழிச் சாட்சி (Oral Evidence) எனக் கொள்வர்.

நீதி கூறும் அவையில் சபையோரின் கட்டளைப்படி செயல்பட்டுச் சபை நடவடிக்கைகளுக்குத் துணை நிற்பவர்கள் காரணத்தார் என அழைக்கப்பட்டனர். இவர்கள் கருணீகர் அல்லது கணக்கர் என்றும் அழைக்கப்பட்டனர். கல்வெட்டுக்கள் கரணத்தான் எனச் சுட்டுகின்றன. இதற்கேற்ப,

இருள்மறை மிடற்றோன் கையில் ஓலை கண்டவை யோர்ஏவ
அருள்பெறு கரணத் தானும் ஆணவம் தொழுது வாங்கிச்
சுருள்பெறு மடியை நீக்கி விரித்தன தொன்மை நோக்கித்
தெருள்பெறு சவையோர் கேட்ப வாசகம் செப்பு கின்றான்

என இறைவன் கொடுத்த ஓலையைக் கரணத்தான் தொழுது வாங்கிப் படிப்பதாகக் காட்டப்படுகின்றது.

மறையவர் கொடுத்த மூல ஓலையை வாங்கிச் சுந்தரரிடம் கொடுத்து அவர் பாட்டனார் எழுதிய ஓலைதானா எனச் சோதித்துப் பார்க்கச் சபையோர் வேண்டுகின்றனர். இது வழக்குத் தொடுத்தவர்களின் முறையீட்டை விசாரித்த பின்பு வழக்குக்குட்பட்டவர்களின் வாய்மொழியைக் கேட்கும் வழக்கத்தையும் கையெழுத்தைச் சோதித்துப் பார்க்கும் வழக்கத்தையும் காட்டுகின்றது.

இறைவனே சுந்தரரின் பாட்டனார் அவர் கைப்பட எழுதிய வேறு ஓலை இருக்குமானால் அதையும் ஒப்பிட்டுப் பார்க்கும்படி வேண்டுகின்றார்.

அவர் வேண்டுகோளின்படி சுந்தரரின் பாட்டனார் எழுதிய வேறு ஓலையிலுள்ள கையெழுத்தும் சோதித்துப் பார்க்கப்படுகிறது. இரண்டையும் ஒப்பிட்டுப் பார்த்த சுந்தரர் தாம் இறைவனுக்கு அடிமையே என்பதை ஒத்துக் கொள்கிறார். இவை,

அந்தணர் கூற இன்னும் ஆள்ஓலை இவனே காண்பான்
தந்தைதன் தந்தை தான்வே றெழுதுகைச் சாத்துண் டாகில்
இந்தஆ வணத்தி னோடும் எழுத்து நீர்ஒப்பு நோக்கி
வந்தது மொழிமின்" என்றான் வலிய ஆட்கொள்ளும் வள்ளல்

திரண்ட மாமறையோர் தாமும் திருநாவ லூரர் கோமுன்
மருண்டது தெளிய மற்ற மறையவன் எழுத்தால் ஓலை
அரண்தரு காப்பில் வேறொன் றழைத்துடன் ஒப்பு நோக்கி
"இரண்டும் ஒத்திருந்த தென்னே! இனிசெயல் இல்லை என்றார்"

நான்மறை முனிவ னார்க்கு நம்பி யாரூரர்! தோற்றீர்
பான்மையின் ஏவல் செய்தல் கடன்என்று பண்பில் மிக்க
மேன்மையோர் விளம்ப நம்பி விதிமுறை இதுவே ஆகில்
யான்இதற் கிசையேன் என்ன இசையுமோ என்று நின்றார்

எனவரும் பாடல்கள் மூலம் புலனாகின்றன.

சண்டேசுவர நாயனார் வரலாற்றில் சபையோர், சிறுவனாகிய விகாரசண்மன்மீது பசுக்களின் பாலைக் கறந்து கீழே ஊற்றியதாகக் குற்றம் சாட்டப்பட்டபோது சண்டேசுவரரை அழைத்து விசாரிக்கின்றனர். இதனால் சிறியவர்கள் செய்த குற்றத்திற்காக அவர்களுடைய பெற்றோர்களை அழைத்து விசாரிக்கும் வழக்கம் தெரியவருகிறது. இதை,

இறையோன் அடிக்கீழ் மறையவனார் எடுத்துத் திருமஞ்சனம் ஆட்டும்
நிறைபூச னைக்குடங் கள்பால் நிரம்பச் சொரிந்து நிரைக்குலங்கள்
குறைபா டின்றிமடி பெருகக் குவிந்த முலைப்பால் குறைவின்றி
மறையோன் மனையின் முன்புதரும் வளங்கள் பொலிய வைகுமால்

செயலிப் படியே பலநாளும் சிறந்த பூசை செய்வதற்கு
முயல்வுற் றதுவே திருவிளை யாட்டாக முந்நூல் அணிமார்பர்
இயல்பில் புரியும் மற்றிதனைக் கண்டித் திறத்தை அறியாத
அயல்மற் றொருவன் அப்பதியில் அந்தணா ளர்க்கறி வித்தான்

அச்சொற் கேட்ட அருமறையோர்" ஆயன் அறியான் என்றவற்றின்
இச்சை வழியே யான்மேய்ப்பேன் என்றுளம் பசுக்கள் தமைக்கறந்து
பொச்சம் ஒழுகு மாணவகன் பொல்லாங் குரைக்க அவன்தாதை
எச்சதத் தன்தனை அழைமின்" என்றார் அவையில்
இருந் தார் கள்"

ஆங்கு மருங்கு நின்றார்கள் அவ்வந் தணன்தன் திருமாலையின்
பாங்கு சென்று மற்றவனை அழைத்துக் கொண்டு வரப்பரந்த
ஓங்கு சபையோர் அவனைப்பார்த்து" ஊரா னிரை மேய்த்
துன் மகன் செய்
தீங்கு தனைக்கேள்" என்று புகுந்த பரிசு செப்புவார்

என்ற பாடல்களால் அறியலாம்.

தீர்ப்புக் கூறல்

வழக்குத் தொடுத்தோர் வேண்டியவண்ணம் வழக்குக்குட்பட்டோர் செய்ய வேண்டும் எனத் தீர்ப்பளிப்பது அக்கால வழக்கம் என்பதை அறிய முடிகிறது. திருநீலகண்டநாயனாரிடம் வழக்கை விசாரித்த நீதிச் சபையோர் வழக்குத் தொடுத்தவர் விரும்பிய வண்ணம் அவர் மனைவியின் கையைப் பிடித்து நீரில் மூழ்கிச் சத்தியம் செய்கின்றமையை,

திருவுடை அந்த ணாளர் செப்புவார்"திகழ்ந்த நீற்றின்
உருவுடைய இவர்தாம் வைத்த ஓட்டினைக் கெடுத்தீ ரானால்
தருமிவர் குளத்தில் மூழ்கித் தருகஎன் றுரைத்தா ராகில்
மருவிய மனைவி யோடு மூழ்குதல் வழக்கே" என்றார்.

என்ற பாடல் காட்டுகின்றது. இப்பாடல் மூலம் தம் உண்மையை நிலைநாட்ட நீரில் மூழ்கிச் சத்தியம் செய்யும் வழக்கம் இருந்துள்ளது என்பதும் தெரிய வருகின்றது.

பண்புடை அமைச்ச னாரும் பாருளோர் அறியும் ஆற்றால்
கண்புடை பட்டு நீண்ட கழுத்தறி நிரையில் ஏற்ற
நண்புடை ஞானம் உண்டார் மடத்துத் தீநாடி இட்ட
எண்பெருங் குன்றத் தெண்ணா யிரவரும் ஏறி னார்கள்

என்ற பாடல் மூலம் குற்றங்களுக்குக் கழுவேற்றல் ஆகிய தண்டனை அளிக்கும் வழக்கமும் உண்டு என்பது புலனாகின்றது.

நாள்தோறும் இறைவன் உறையும் கோடிகாவனைக் கூறவில்லை யென்றால் அவர்கள் பாடிகாவலில் பட்டு அழிவர் என அப்பர்பெருமான் எச்சரிக்குமாற்றை,

வாடி வாழ்வதென் னாவது மாதர்பால்
ஓடி வாழ்வினை உள்கிநீர் நாடொறும்
கோடி காவனைக் கூறிரேற் கூறினேன்
பாடி காவலிற் பட்டுக் கழிதிரே

என்ற பாடல் காட்டுகின்றது.

பாடிகாவல் என்பதற்கு நீதி தவறியவரை வழக்கு நாடி அரசன் நிறுத்தும் தண்டத்தொழில் என்ற விளக்கம் அளிக்கப்படுகிறது.

மானியங்கள் வழங்குதல்

அரசர்கள் தம் ஆட்சியின்கீழ் வாழும் பணியாளர்கள் வறுமையின்றி மகிழ்வுடன் வாழும்பொருட்டு மானியங்கள் வழங்கும் வழக்கம் சமுதாயத்தில் நிலவியது என்பதை அறிய முடிகிறது. தேவராட்டியிடம் கண்ணப்பரின் தந்தையாகிய நாகன் நன்றாகயிருக்கின்றாயோ என வினவியபோது அவள், நாகன் அளித்த மானியங்களால் நல்வாழ்வு வாழ்வதாகக் கூறுகிறார். இதனை,

நின்றமுது குறக்கோலப் படிமத் தாளை
நேர்நோக்கி அன்னைநீ நிரப்பு நீங்கி
நன்றினிதின் இருந்தனையோ" என்றுகூறும் நாகன்
எதிர்நலம் பெருக வாழ்த்தி" நல்ல
மென்றசையும் ஈயாலொடு நறவும்வெற் பின்விளை
வளனும் பிறவளனும் வேண்டிற் றெல்லாம்
அன்றுநீ வைத்தபடி பெற்று வாழ்வேன்
அழைத்தபணி என்"என்றாள் அணங்கு சார்ந்தாள்

என்ற பாடல் காட்டுகின்றது.

இதைப்போன்று சமுதாயத் தேவைகளை நிறைவேற்றும் தொழில்களைப் புரிவோர்களுக்கும் மானியங்கள் வழங்கும் வழக்கம் உள்ளமையைத் திருநாளைப்போவார் வரலாற்றில் இடம்பெறும்,

ஊரில்விடும் பறைத்துடவை உணவுரிமை யாக்கொண்டு
சார்பில்வருந் தொழில்செய்வார் தலைநின்றார் தொண்டினால்
கூரிலைய முக்குடுமிப் படையண்ணல் கோயில்தொறும்
பேரிகையே முதலாய முகக்கருவி பிறவினுக்கும்

என்ற பாடல் காட்டுகின்றது. இதனால் வெட்டிமைத் தொழில் மேற்கொண்ட நந்தனாருக்கு மானியம் விடப்பட்ட செய்தியை அறிய முடிகின்றது.

## உலா வரல்

நாடாளும் மன்னர்கள் உலாவரும் வழக்கம் உண்டென்பதையும், அவ்வாறு உலா வரும்போது புகழ்பாடுவோர் முன்னரும், சூதர், மாகதர் ஒரு பக்கமும் வெள்வளை சிந்தும் பெண்கள் மற்றொரு பக்கமும், சங்கம் ஒலிப்பவர்கள் இன்னொரு பக்கமும் வருவர் என்பதையும்,

பரசு வந்தியர்முன் சூதர் மாகதர் ஒருபால் பாங்கர்
விரைநறுங் குழலார் சிந்தும் வெள்வளை ஒருபால் மிக்க
முரசொடு சங்கம் ஆர்ப்ப முழங்கொலி ஒருபால் வெற்றி
அரசிளங் குமரன் போதும் அணிமணி மாட வீதி

என்ற திருநகரச் சிறப்புப் பாடலால் அறியலாம்.

பண்ணுறும் உறுப்பு நான்கில் பரந்தெழு சேனை யெல்லாம்
மண்ணடை இறுகால் மேன்மேல் வந்தெழுந் ததுபோல் தோன்றத்
தண்ணளிக் கவிகை மன்னன் தானை பின்தொடரத் தானோர்
அண்ணலம் புரவி மேற்கொண் டரச மாவீதி சென்றான்

என்ற பாடல் மூலம் மன்னர்கள் குதிரை மீதேறி உலாவரும் வழக்கத்தை அறிய முடிகின்றது.

## வாரிசைத் தேர்ந்தெடுக்கும் உரிமை

பொதுவாக ஒரு மன்னன் இறந்தாலோ அல்லது முதுமை அடைந்தாலோ அம்மன்னனின் மகன் ஆட்சிப் பொறுப்பை மேற்கொள்ளும் வழக்கம் காணப்பட்டது.

ஐயடிகள் காடவர்கோன் அரசாட்சி அல்லல் நிறைந்தது என எண்ணியும், இறைத்தொண்டு புரிய எண்ணியும் தன் மகனிடம் அரசாட்சிப் பொறுப்பை ஒப்படைக்கின்றான்.

மன்னவரும் பணிசெய்ய வடநூல்தென் தமிழ்முதலாம்
பன்னுகலைப் பணிசெய்யப் பாரளிப்பார், அரசாட்சி
இன்னல்என இகழ்ந்ததனை எழிற்குமரன் மேலிழிச்சி
நன்மைநெறித் திருத்தொண்டு நயந்தளிப்பா ராயினார்

என்ற பாடல் இதனை உணர்த்தும்.

கண்ணப்பரின் தந்தை தமக்கு முதுமைப் பருவம் வந்துற்றதால் மலையாட்சியைத் தம் மகனுக்குக் கொடுத்தமையை,

சொன்னவுரை கேட்டலுமே நாகன்தானும் சூழ்ந்து
வரும்தன் மூப்பின் தொடர்வு நோக்கி
முன்னவர்கட் குரைசெய்வான் "மூப்பி னாலேமுன்பு
முன்புபோல் வேட்டையினில் முயல கில்லேன்
என்மகனை உங்களுக்கு நாத னாக
எல்லாரும் கைக்கொள்மின்" என்ற போதின்
அனைவரும் இரங்கிப்பின் மகிழ்ந்து தங்கோன்
அடிவணங்கி இம்மாற்றம் அறைகின் றார்கள்

என்ற பாடல் காட்டுகின்றது.

என்றாளிச் செய்தருளி இதற்கிசையும்படி துணிவார்
நின்றநெறி அமைச்சருக்கு "நின்நிலங்காத் தரசளித்து
மன்றில்நடம் புரிவார்தம் வழித்தொண்டின் வழிநிற்ப
வென்றிமுடி என்குமரன் தனைப்புனைவீர்" எனவிதித்தார்

என்ற பாடலும் புகழ்ச் சோழர் தன் மகனுக்கு அரசாட்சியைக் கொடுத்தமையைக் காட்டுகின்றது.

கருநாடக மன்னன் இறந்ததும் அடுத்து ஆட்சிக்கு வர அவனுக்கு மைந்தன் இன்மையால் யானையின் கண்களைக் கட்டி நாடாளும் மன்னனைத் தேர்ந்தெடுக்க முடிவு செய்தமையை,

இவ்வகை பலவும் எண்ணி இங்கினி அரசர் இல்லை
செய்வகை இதுவே என்று தெளிபவர் சிறப்பின் மிக்க
மைவரை அணைய வேழம் கண்கட்டி விட்டால் மற்றக்
கைவரை கைக்கொண்டார் மண்காவல் கைக்கொள்வார்" என்று"

செம்மாண்வினை அர்ச்சனை நூன்முறை செய்துதோளால்
இம்மாநிலம் ஏந்தஓர் ஏந்தலை ஏந்து"கென்று
பொய்ம்மாமுகில் போல்மதம்பாய் பெருகோடை நெற்றிக்
கைம்மாவை நறுந்துகில் கொண்டுகண் கட்டிவிட்டார்

என்ற பாடல்களால் அறியலாம்.

சமய வழக்கங்கள்

சமுதாயத்திலுள்ள நிறுவனங்களில் ஒன்றாகிய சமயம் தொடர்பான வழக்கங்களைத் திருமுறைகள் மூலம் அறிய முடிகின்றது.

விழாக்கள் எடுத்தல்

மக்களிடையே இறைவனுக்கு விழாக்கள் எடுத்து வழிபட்டு மகிழும் வழக்கம் காணப்பட்டமையைத் திருமுறைகள் மூலம் அறிய முடிகின்றது. இறைவன் எழுந்தருளியுள்ள தலங்களை வருணிக்கும் திருமுறை ஆசிரியர்கள் இறைவனுக்கு விழாக்கள் எடுத்து மகிழும் நிகழ்ச்சிகளையும் குறிப்பிடுகின்றனர்.

சித்திரை அட்டமி விழா, வைகாசிப் பொன்னூசல் விழா, ஆனி, ஆடி, ஆவணி ஆகிய மாதங்களில் நிகழ்த்தப் பெறும் பெஞ்சாந்தி எனப்படும் பவித்ரோத்சவ விழா, புரட்டாசி மகா நவமி விழா, கார்த்திகை நாள்விழா அல்லது விளக்கிடு விழா, தைப்பூச விழா, பங்குனி உத்திர விழா, திருவாதிரை நாள் விழா போன்ற விழாக்கள் பற்றிய குறிப்புகள் காணக்கிடைக்கின்றன.

விழாக்களின்போது இறைவன் திருவீதியில் எழுந்தருளுவான் என்பதைப் புருடோத்தமநம்பியின்,

வாரணி நறுமலர் வண்டு கிண்டு
பஞ்சமம் செண்பக மாலை மாலை
வாரணி வனமுலை மெலியும் வண்ணம்
வந்துவந் திவைநம்மை மயக்கு மாலோ:
சீரணி மணிதிகழ் மாடம் ஓங்கு
தில்லையம் பலத்தெங்கள் செல்வன் வாரான்:
ஆரெனை அருள்புரிந்து அஞ்சல் என்பார்?
ஆவியின் பரமென் றன்ஆ தரவே

என்ற திருவிசைப்பாப் பாடலால் அறியலாம்.

## வழிபாட்டிற்குரிய பூக்களும் அவற்றைப் பறிக்கும் முறையும்

தாமரை, கருங்குவளை, செங்கழுநீர், நெய்தல், மாதவி, மந்தாரை, தும்பை, மகிழ், சுரபுன்னை, மல்லிகை, செண்பகம், பாதிரி, செவ்வந்தி முதலிய மலர்களை மக்கள் இறைவழிபாடுகளுக்காகப் பயன்படுத்தியுள்ளனர். வழிபாட்டிற்குரிய மலர்களை அதிகாலையில் எழுந்து நீராடிய பின்னர் வாயைக் கட்டிக்கொண்டு நந்தவனம் சென்று பறிப்பர் என்பதையும் அறிய முடிகின்றது. இதை எறிபத்த நாயனார் புராணத்துள் இடம்பெறும்,

> வைகறை உணர்ந்து போந்து புனல்மூழ்கி வாயுங் கட்டி
> மொய்ம்மலர் நெருங்கு வாச நந்த வனத்து முன்னிக்
> கையினில் தெரிந்து நல்ல கமழ்முகை அலரும் வேலைத்
> தெய்வ நாயகர்க்குச் சாத்தும் திருப்பள்ளித் தாமம் கொய்து

என்ற பாடல் உணர்த்துகிறது.

## இறைவனை வணங்கும் முறைகள்

மக்கள் இறைவனை வணங்குவதிலும் சில வழக்கங்களைக் கடைபிடித்துள்ளனர் என்பதையும் திருமுறைகள் மூலம் அறிய முடிகின்றது.

இறைவனை இன்னின்னவாறு வணங்க வேண்டும் என அறிவுறுத்துமிடங்களிலும், இன்னின்னவாறு வணங்கவில்லையே என மனம் வருந்திக் கூறும் இடங்களிலும் இறைவனை வணங்குதல் பற்றிய வழக்கங்களை அறிய முடிகின்றது.

அலறுதல், அழுதல், ஆடுதல், பாடுதல், இடித்த மாவினால் பலிபீடம் அமைத்து வணங்கல், உடல் நிலம் பொருந்த வணங்கல், உருகுதல், எட்டு உறுப்புகளால் வணங்கல், ஐந்து உறுப்புகளால் வணங்கல், காமுற்று அரற்றுதல், காலையிலும் மாலையிலும் தவம் செய்தல், கோயில் திருவாயிலை முதலில் வணங்கிவிட்டுப் பின் கோயிலுக்குள் செல்லல், கோயிலை அலகிடல், திருமெழுக்கிடல், தலையாரக் கும்பிடல், தீபம் காட்டித் தொழுதல், தூநீராட்டுதல், தூமலர் தூவுதல், நீர் சுமந்தேத்தல், நீர் மூழ்கிப் பணிந்தேத்தல், மூன்று சந்தி தியானித்து வணங்கல், வட்டமிட்டு ஆடுதல் போன்ற இறைவழிபாடு தொடர்பான வழக்கங்களை அறிய முடிகின்றது.

மேலும், குறிப்பிட்ட காலங்களிலேயே இறைவனை வணங்கும் வழக்கமும் காணப்பட்டது.

நம்பியாரூரார் பெருமைகளைக் கூறுமிடத்துத் திருமால், பிரம்மன் போன்றோர் காலமல்லாக் காலத்தில் சென்று தில்லை இறைவனை வணங்க உள்ளே புகமாட்டாமையால் நிற்க ஆரூரார் உள்ளே சென்று இறைவனை வணங்கியதாகக் கூறப்படுகிறது.

மாலயன் சதமகன் பெருந்தேவர் மற்றும்
உள்ளவர்கள் முற்றும் நெருங்கிச்
சீலமா முனிவர் சென்று முன்துன்னித்
திரப்பிரம்பின் அடிகொண்டு திளைத்துக்
காலம் நேர்படுதல் பார்த்து அயல்நிற்பக்
காதல் அன்பர் கணநாதர் புகும்பொன்
கோல நீடுதிரு வாயி லிறைஞ்சிக்
குவித்தசெங்கை தலைமேற்கொடு புக்கார்

என்பதால் காலமல்லாக் காலத்தில் இறைவனை வணங்குதல் வழக்கமன்று என்பது புலனாகின்றது.

## கோயிலுக்குப் பொருட்கள் அளிக்கும் வழக்கம்

இறைவன்மீது கொண்ட எல்லையற்ற அன்பின் காரணமாகவும், தாம் வேண்டியன நிறைவேறியதன் காரணமாகவும், கோயில் பணிகளுக்காக மானியம் பெற்றதன் காரணமாகவும் இறை வழிபாட்டிற்குரிய பொருட்களை அளித்தல் அக்கால மக்களிடம் காணப்பட்ட வழக்கங்களில் ஒன்று எனலாம்.

கண்ணப்பரின் பெற்றோர் குழந்தைப் பேறு வேண்டித் தெய்வத்தை வணங்கிச் சேவல், மயில் போன்றவற்றைக் காணிக்கையாக அளிக்கின்றனர். கோயிலில் மணிகள், மலர் மாலைகள் ஆகியவற்றைத் தொங்கவிடுகின்றனர். இதனை,

பொருவரும் சிறப்பின் மிக்கார் இவர்க்கினிப் புதல்வர்ப 'பேறே
அரியதென் றெவரும் கூற அதற்படு காத லாலே
முருகலர் அலங்கற் செவ்வேல் முருகவேள் முன்றிற் சென்று
பரவுதல் செய்து நாளும் பராய்க்கடன் நெறியில் நிற்பார்

வாரணச் சேவ லொடும் வரிமயிற் குலங்கள் விட்டுத்
தோரண மணிகள் துாக்கிச் சுரும்பணி கதம்பம் நாற்றிப்
போரணி நெடுவே லோற்குப் புகழ்புரி குரவை துாங்கப்
பேரணங் காடல் செய்து பெருவிழா எடுத்த பின்றை"

எனவரும் பாடல்களால் அறியலாம்.

குங்குலியக் கலயர் குங்குலியத் தூபமும், மூர்த்தி நாயனார் சந்தனமும் தவறாது அளித்துவருவதை,

பாலனாம் மறையோன் பற்றப் பயன்கெடுத் தருளும் ஆற்றால்
மாலும் நான்முக னும்காணா வடிவுகொண் டெதிரே வந்து
காலனார் உயிர்செற் றார்க்குக் கமழ்ந்த குங்குலியத் தூபம்
சாலவே நிறைந்து விம்ம இடும்பணி தலைநின் றுள்ளார்

அந்திப்பிறை செஞ்சடை மேலணி ஆலவாயில்
எந்தைக்கணி சந்தனக் காப்பிடை என்னும் முட்டா
அந்தச்செய லின்நிலை நின்றடியா ருவப்பச்
சிந்தைக்கினி தாயதிருப் பணிசெய்யும் நாளில்

என்ற பாடல்களால் அறியலாம்.

திருநாளைப்போவார் மானியம் பெற்றுக் கோயிலுக்கு வேண்டிய போர்வைத் தோல், விசி வார், தந்திரி, கோரோசனை முதலியவற்றைக் கொடுத்து வந்தமை,

ஊரில்விடும் பறைத்துடவை உணவுரிமையாக் கொண்டு
சார்பில்வருந் தொழில்செய்வார் தலைநின்றார் தொண்டினால்
கூரிலைய முக்குடுமிப் படையண்ணல் கோயில்தொறும்
பேரிகையே முதலாய முகக்கருவி பிறவினுக்கும்

போர்வைத்தோல் விசிவார்என் றினையனவும் புகலும்இசை
நேர்வைத்த வீணைக்கும் யாழுக்கும் நிலைவகையில்
சேர்வுள்ள தந்திரியும் தேவர்பிரான் அர்ச்சனைகட்கு
ஆர்வத்தி னுடன்கோரோ சனையும்இவை அளித்துள்ளார்

என்பதால் புலனாகின்றது.

## இனக்குழு வழக்கங்கள்

சமுதாய வரலாற்றை ஆராய்ந்த அறிஞர்கள் இக்காலச் சமுதாயம் இனக்குழுச் சமுதாய அமைப்பு அல்லது புராதனச் சமுதாய அமைப்பு, நாகரிகச் சமுதாய அமைப்பு, அடிமை உடைமைச் சமுதாய அமைப்பு, முதலாளித்துவச் சமுதாய அமைப்பு போன்ற பல சமுதாய அமைப்பு முறைகளைக் கடந்து வந்துள்ளது என்கின்றனர். மேலும், ஒரு சமுதாய அமைப்பு சிதைவுற்று அடுத்த சமுதாய அமைப்பு மலரும்போது

அச்சமுதாயத்தில் பழைய சமுதாய அமைப்பின் எச்சக் கூறுகள் காணப்படும் என்றும் அவர்கள் கூறுகின்றனர். இவ்வகையில் பக்தி இலக்கியக் காலத்திலும் பழைய சமுதாய அமைப்பான இனக்குழுச் சமுதாய அமைப்பன் எச்சக்கூறுகள் நிலவின என்பதை அறிய முடிகிறது. இனக்குழுச் சமுதாய அமைப்பின் வழக்கங்களும் திருமுறைகளில் இடம்பெறுமாற்றை அறிய முடிகிறது.

இறைவனுக்குத் தேன், தசை, கள், பொரி முதலியவற்றை வைத்து வழிபடும் இனக்குழு வழக்கத்தை,

மானச் சிலைவேடர் மருங்கு நெருங்கு போதில்
பானற்குல மாமலரிற் படர்சோதி யார்முன்
தேன்நல் தசைதேறல் சருப்பொரி மற்றுமுள்ள
கானப்பலி நேர்கடவுட் பொறையாட்டி வந்தாள்

என்ற கண்ணப்ப நாயனார் புராணப் பாடல் விளக்குகிறது.

கனவுகள்

பண்பாட்டின் கூறுகளுள் ஒன்றாக அம்மக்களால் பின்பற்றப்படும் பல்துறை கலைகளும் கூறப்படுகின்றன. இவ்வகையில் திருமுறைகளில் இடம்பெறும் பல்துறைக் கலைகள் பற்றிய செய்திகளைக் காணலாம்.

மருத்துவக்கலை

கண்ணப்பர் சிவபெருமானின் கண்ணில் வடிந்த குருதியைக் கண்டு மனம் துடிதுடித்து, என் செய்வது என அறியாது திகைத்து, அக்குருதியை நிறுத்தப் பொன் செய் வரையில் சென்று பச்சிலையைப் பறித்து வருவேன் என்று எண்ணி அவ்வாறே பச்சிலையைப் பறித்து வந்து சிவபெருமானின் அடையாளமாகிய இலிங்க உருவத்தின் கண்களில் அப்புகின்றார்.

அதன் பின்னரும் கண்களில் குருதி வடிவது நிற்காது போகவே தம் கண்களில் ஒன்றைப் பிடுங்கிச் சிவபெருமானின் கண்ணில் அப்ப நினைக்கின்றார். இதற்குரிய காரணம் "உற்ற நோய்த் தீர்த்தல் ஊனுக்கு ஊன்" என்று வேடர்குல மக்களிடம் காணப்பெற்ற பழமொழி ஆகும்.

இது இயற்கை மருத்துவத்திலும், இக்கால விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளின் வளர்ச்சியின் விளைவான "ஒத்ததற்கு ஒத்த முறை" (டுமைஈ கடிச டுமைஈ) என்ற மருத்துவத்திலும் அக்காலத்திலேயே மக்கள்

தேர்ச்சிப் பெற்றிருந்தனர் என்பதைக் காட்டுகின்றது. இக்கருத்துக்கள் இடம்பெறும் பாடல்கள் பின்வருமாறு :

அண்ணலார் திருக்காளத்தி அடிகளார் முனிவனார்க்குத்
திண்ணனார் பதிவுகாட்டத் திருநயனத் தில்ஒன் று
துண்ணென உதிரம்பாய இருந்தனர்தூ ரத்தேஅவ்
வண்ணவெஞ் சிலையார்கண்டு வல்விரைந் தோடி வந்தார்

நினைத்தனர் வேறு வேறு நெருங்கிய வனங்கள் எங்கும்
இனத்திடை பிரிந்த செங்கண் ஏறென வெருக்கொண் டெய்திப்
புனத்திடைப் பறித்துக் கொண்டு பூதநா கன்பால் வைத்த
மனத்தினுங் கடிது வந்தம் மருந்துகள் பிசைந்து வார்த்தார்

மற்றவர் பிசைந்து வார்த்த மருந்தினால் திருக்கா ளத்திக்
கொற்றவர் கண்ணிற் புண்ணீர் குறைபடா திழியக் கண்டும்
இற்றையின் நிலைமைக் கென்னோ"இனிச்செய லென் று
பார்ப்பார்
உற்றநோய் தீர்ப்ப தூனுக் கூனெனும் உரைமுன் கண்டார்

அடியார்களின் வரலாறுகள் கூறும் பகுதிகள் மூலம் குழந்தைகள் பிறந்த நேரத்தைக் கணித்தல், திருமணம் செய்தற்குரிய நல்ல நாளைத் தேர்ந்தெடுத்தல், பயிற்சியை மேற்கொள்வதற்குரிய நேரத்தைக் கணித்தல், கோள்களின் நிலையைக் கணித்தல் முதலான சோதிடக் கலையில் அக்கால மக்கள் தேர்ச்சியுடன் திகழ்ந்ததை அறிய முடிகின்றது. சான்றாகத் திண்ணன் குறித்த பருவம் வந்துற்றதும் விற் பிடிக்க ஏற்ற காலத்தைக் கணித்ததை,

தந்தையும் மைந்த னாரை நோக்கித் தன்தடித் தோளால்
சிந்தையுள் மகிழப் புல்லிச் சிலைத்தொழில் பயிற்ற வேண்டி
முந்தைஅத் துறையில் மிக்க முதியவரை அழைத்துக் கூட்டி
வந்தநாட் குறித்த தெல்லாம் மறவர்க்குச் சொல்லி விட்டான்

என்ற பாடல் காட்டுவதைக் கூறலாம்.

யோகக்கலை

அக்காலச் சமுதாயத்தில் வாழ்ந்த மக்கள் தாமரை இருக்கை, பத்திர இருக்கை, கோழியிருக்கை, அரிமா இருக்கை முதலான இருக்கை வகைகளையும், பல்வேறு உயிர்ப்பு முறைகளையும், மூச்சினை வல மூக்கு

வழியாகவும், இட மூக்கு வழியாகவும் விதிப்படி செலுத்தி, நாள்தோறும் இருபத்தைந்து நாழிகை பயின்று நூறு அகவை வரையிலும் வாழும் முறையையும், பிற உயிர்ப்பு முறைகளால் நீண்ட நாட்கள் வாழும் முறைகளையும், எந்தெந்த நாட்களில் எவ்வெவ்வாறு மூச்சைச் செலுத்த வேண்டும் என்பதையும், நவகுண்டத்தின் நன்மைகளையும் நன்கு அறிந்திருந்தனர் என்பதைத் திருமந்திரம் மூலம் அறியலாம்.

சான்றாக,

பங்கய மாதி பரந்தபல் ஆதனம்
அங்குள வாம்இரு நாலும் அவற்றினுள்
சொங்கில் லையாகச் சுவத்திக மெனமிகத்
தங்க இருப்பத் தலைவனு மாமே

என்ற பாடலைக் காட்டலாம்.

## விடம் நீக்கும் கலை

அக்கால மக்களிடையே விடம் நீக்கும் கலையை அறிந்த மக்கள் வாழ்ந்துள்ளனர் என்பதைத் திருஞானசம்பந்தர் வரலாறுமூலம் அறிய முடிகிறது.

பூம்பாவையின் உடம்பை அரவம் தீண்டியமையால் அவள் விடம் ஏறப்பெற்று இறந்து விடுகிறாள். இதனால் மனம் வருந்திய அவள் தந்தை விடம் நீக்கும் கலையில் தேர்ச்சியுற்றவர்களை அழைத்து அவள் உடம்பில் ஏறிய விடத்தை நீக்க வேண்டுகின்றார். இதனை,

விடந்தொ லைத்தி டும்விஞ்சை யிற்பெரியராம் மேலோர்
அடர்ந்த தீவிடம் அகற்றுதற் கணைந் துளார்அ நேகர்
திடங்கொள் மந்திரந் தியான பாவக நிலை முட்டி
தொடர்ந்த செய்வினைத் தனித்தனித் தொழிலராய்ச் சூழ்வார்

மருந்தும் எண்ணில மாறில செய்யவும் வலிந்து
பொருந்து வல்விடம் எழுவேக மும்முறை பொங்கிப்
பெருந்தடங் கண்மென் கொடியனாள் தலைமிசைப் பிறங்கித்
திருந்து செய்வினை யாவையுங் கடந்து தீர்ந்திலதால்"

என வரும் பாடல்களால் அறியலாம். இவற்றால் மந்திரம், பாவகம், மருந்து போன்ற முறைகளால் விடம் தீர்க்கும் கலையில் வல்லுநர்கள் வாழ்ந்துள்ளமை தெரிகிறது.

கூத்து, நாடகம், தோற்பாவைக் கூத்து

குன்றவர் வரிக்கொண் டாடக் கொடிச்சியர் துணங்கை ஆடத்
துன்றிய மகிழ்ச்சி யோடுஞ் சூரர மகளிர் ஆட
வென்றிவில் விழவி னோடும் விருப்புடை ஏழாம் நாளாம்
அன்றிரு மடங்கு செய்கை அழகுற அமைந்த பின்றை

எனவரும் கண்ணப்பநாயனார் புராணப் பாடல் மூலமும்,

நாடகத்தால் உன்அடியார்
போல்நடித்து நான்நடுவே
விடுஅகத்தே புகுந்திடுவான்
மிகப்பெரிதும் விரைகின்றேன்

எனவரும் திருவாசகப் பாடல் அடிகளாலும்,

சீலம் இன்றி நோன்புஇன்றிச்
செறிவே இன்றி அறிவுஇன்றித்
தோலின் பாவைக் கூத்தாட்டுஆய்ச்
சுழன்று விழுந்து கிடப்பேனை

என வரும் திருவாசகப் பாடல் அடிகளாலும் வரிக்கூத்து, துணங்கைக் கூத்து, நாடகம், தோற்பாவைக் கூத்து ஆகியன பற்றிய குறிப்புகள் காணக் கிடைக்கின்றன.

மங்கையைப் பாகமாக உடையவர் மன்னுங் கோயில்
எங்கணும் பூசை நீடி ஏழிசைப் பாடல் ஆடல்
பொங்கிய சிறப்பின் மல்கப் போற்றுதல் புரிந்து வாழ்வார்
தங்கள் நாயகருக் கன்பர் தாளலால்சார் பொன்றிலார்

எனவரும் மெய்ப்பொருள் நாயனார் பாடல்மூலம் ஏழிசை பற்றிய குறிப்பை அறியலாம்.

தொழிற் பாடல்கள்

பல்வகை மணப்பொருட்களை உரலில் இட்டுப் பொற் சுண்ணம் இடிக்கும்போதும், நெற்குற்றும்போதும், வயல்களில் வேலை செய்யும்போதும் உழைப்பின் கடுமை தெரியாமலிருக்கப் பாடல்கள் பாடியுள்ளமையையும் அறிய முடிகிறது.

அம்மானை, ஊடல், சாழல், பாவையாடுதல் முதலான விளையாட்டுக்களின்போதும் மக்கள் பாடல்கள் பாடியுள்ளனர் என்பதைத் திருவாசகத்தில் இடம்பெறும் தலைப்புகள் மூலம் அறிந்து கொள்ளலாம்.

ஆயுள் வேதக் கலையும் அலகில் வடநூற் கலையும்
தூய படைக்கலத் தொழிலும் துறைநிரம்பப் பயின்ற வற்றால்
பாயு மாதக் குஞ்சரமும் பரியும் உகைக்கும் பண்பு
மேய தொழில்விஞ் சையினும் மேதினி யில்மே லானார்

எனவரும் சிறுத்தொண்ட நாயனார் புராணப் பாடல் மூலம் ஆயுள்வேதக்கலை, வடநூற்கலை, போர்க்கலை, குதிரையேற்றக்கலை, யானையேற்றக்கலை ஆகியனவற்றில் மக்கள் பயிற்சியுற்றமை புலனாகும்.

ஆங்கதன் கரையின் பாங்கோர் அணிநிழற் கேழல் இட்டு
வாங்குவில் காடன் தன்னை மரக்கடைத் தீக்கோல் பண்ணி
"ஈங்குநீ நெருப்புக் காண்பாய் இம்மலை ஏறிக் கண்டு
நாங்கள் வந்தணைவோம்" என்று நாணனும் தாமும் போந்தார்

எனவரும் கண்ணப்ப நாயனார் புராணப் பாடல் தீக்கடைக் கோல் மூலம் நெருப்பை உண்டாக்கும் திறனை அறியலாம்.

பல்வேறு முத்துக்களை வரிசைப்படுத்திக் கோக்கும் கலையில் மக்கள் தேர்ச்சியுற்றிருந்தமையை விறன்மிண்டநாயனார் புராணத்தில் இடம்பெறும்,

வாரி சொரியும் கதிர்முத்தும் வயல்மென் கரும்பில் படுமுத்தும்
வேரல் விளையு குளிர்முத்தும் வேழமருப் பின்ஒளிர் முத்தும்
மூரல் முறுவல் வெண்முத்த நகையார் தெரிந்து முறைகோக்கும்
சேரர் திருநாட் டூர்களின்முன் சிறந்த மூதூர் செங்குன்னூர்

என்ற பாடல் காட்டும்.

காற்று, மழை, வெயில் போன்றவற்றால் பாதிக்காதவாறு முட்டைகளை அகன்ற வாயையுடைய பானைகளில் இட்டு, மர நிழலில் வைத்துக் கோழிகளை அடைகாக்கச் செய்யும் முறையை நன்கறிந்தமையை,

தன்சினை மென்பெடை யொடுங்குந் தடங்குழி சிப்புதை நீழல்

என்ற அடியால் அறியலாம்.

........ மரகதத் தூணத் திலங்கு மணிவேதி கையில்
நிலங்கொள் பொற்கால் மாறில் மலர்ச் சேக்கைமிசை
மணிநிலா முன்றில் மருங்கிருந்தாள்

என்ற தடுத்தாட்கொண்ட புராணப் பாடல் அடிகள் அக்கால மக்களின் கட்டடக்கலை அறிவைப் புலப்படுத்துகின்றன.

இவ்வாறு அக்கால மக்களின் பல்துறை அறிவை அறிய முடிகிறது.

## சடங்குகள்

பிறப்பு முதல் இறப்பு வரை மக்களின் வாழ்க்கையின் ஒவ்வொரு நிலையிலும் இடம்பெறும் சடங்குகளும் மக்களின் பண்பாட்டு நிலைகளைப் பறைசாற்றுவனவாய் அமைகின்றன. இவ்வகையில் திருமுறைகள் மூலம் அறியலாகும் சடங்குகள் பற்றிக் காண்போம்.

### குழந்தை சடங்குகள்

குழந்தைக்கும் தாய்க்கும் நோய்கள் ஏற்படாவண்ணம் கருவுற்ற நாள் முதலாகப் பல்வேறு சடங்குகள் மேற்கொள்ளப்படுகின்றன.

### தானங்கள் செய்தல்

குழந்தை பிறந்ததும் அம்மகிழ்ச்சியைக் கொண்டாடும் வகையில் பல்வேறு தானங்களைச் செய்வது வழக்கமாகக் காணப்பட்டது.

திருஞானசம்பந்தர் பிறந்ததும் அவர் பெற்றோர்கள் தானம் செய்தமையை,

செம்பொன் முதலான பலதான வினைசெய்வார்

என்ற அடியும்,

சிவனேசர் தமக்கு மகள் பிறந்ததும் அவர் தானங்கள் செய்தமையை,

தங்கள் மரபினி லுரிமைச் சடங்கு தசதி னத்திலும்
பொங்கு பெருமகிழ்ச் சியுடன் புரிந்து காப்பணி புனைந்தார்

எனவரும் சிறுதொண்டநாயனார் புராணப்பாடல்களும் குழந்தைக்குப் பத்து

நாட்கள் சடங்குகள் செய்யப்படுமாற்றைக் காட்டுகின்றன. அவற்றுள் ஒன்று திருமலி நெய்யாட்டல் சடங்கு என்பதும் புலனாகின்றது.

மாதந்தோறும் செய்யும் சடங்குகள்

திங்கள்தோறும் முன்செய்யும் அத்திரு வளர்சிறப்பின்
மங்கலம் புரிநல்வினை மாட்சியிற் பெருக
அங்கண் மாநகர் அமைத்திடஆண் டெதிர்அணைந்து
தங்குபே ரொளிச்சீ றடிதளர் நடைபயில

என்ற திருஞானசம்பந்தர் புராணப்பாடல் மாதங்கள்தோறும் சடங்குகள் நிகழ்த்தப் பெறுகின்றமையைக் காட்டுகின்றது.

காப்பணியும் இளங்குழவிப் பதம்நீங்கி

எனவரும் மானக்கஞ்சாற நாயனார் புராணப்பாடல் அடி குழந்தைக்குத் தீங்குகள் நிகழாவண்ணம் காப்பணிதலைச் சுட்டுகின்றது.

மேலும், குழந்தையின் நல்வாழ்வை மனத்துட் கொண்டு ஒவ்வொரு நிலைகளிலும் தெய்வங்கட்குப் பெருமடை கொடுக்கும் வழக்கம் உள்ளமையை,

வருமுறைப் பருவந்தோறும் வளம்மிகு சிறப்பின் தெய்வம்
பெருமடை கொடுத்து ..........................

என்ற கண்ணப்ப நாயனார் புராணப்பாடல் அடிகள் காட்டுகின்றன.

பெயர் சூட்டுதல்

கதிர்மணி பிறந்த தென்ன உருத்திரக் கணிகை மாராம்
பதியிலார் குலத்துள் தோன்றிப் பரவையார் என்றும் நாமம்
விதியுளி விளக்கத் தாலே மேதகு சான்றோர் ஆன்ற
மதியணி புனிதன் நன்நாள் மங்கல அணியால் சாத்த

நாமகரணத்தழகு நாள்பெற நிறுத்தி

என்பனவற்றால் குழந்தைக்குப் பெயர் சூட்ட நல்ல நாளைத் தேர்ந்தெடுப்பர் என்பதும், அந்நாள் இறைவனுக்குகந்த நாளாக அமையும் என்பதும், பெயர் சூட்டுதலுக்கு நாமகரணம் என்ற பெயர் உண்டு என்பதும் புலனாகின்றன.

## பெயர் சூட்டும் மரபு

இவ்வாறு குழந்தைக்குப் பெயர் சூட்டும்போது சில மரபுகள் கடைபிடிக்கப்பட்டன என்பதையும் அறிய முடிகின்றது.

இறைவனின் திருப்பெயரைக் குழந்தைக்கு இடுதல்
உடலின் தன்மைக்கேற்பப் பெயரிடல்
பண்பு அல்லது உறுப்புப் பற்றிய பெயரிடல்
பிறந்த நாளுக்குப் பொருந்தும் வகையில் பெயரிடல்
தம் தந்தையின் பெயரைக் குழந்தைக்கிடல்

என்பன போன்ற முறைகள் பின்பற்றப்பட்டுள்ளன.

காரைக்கால் அம்மையார் தம் கணவன் மற்றொரு மாங்கனியைக் கேட்டமையால் இறைவனிடம் வேண்டி, இறைவன் அருளால் ஒரு மாங்கனியைப் பெற்றுக் கணவனிடம் கொடுக்கிறாள். இதை அறிந்த அவள் கணவன் அவரைப் பிரிந்து வேறு இடம் சென்று மற்றொரு பெண்ணை மணந்து இல்லறம் நடத்துகின்றாள். அவர்களுக்கு ஒரு குழந்தை பிறக்கின்றது. அக்குழந்தைக்குக் காரைக்கால் அம்மையாரின் பெயரை இடுகிறார். இதனை,

மடமகள் தன்னைப் பெற்று மங்கலம் பேணித் தான்முன்பு
உடனுறைவு அஞ்சி நீத்த ஒருபெரு மனைவி யாரைத்
தொடர்வற நினைந்து தெய்வத் தொழுகுலம் என்றே கொண்டு
கடனமைத் தவர்தம் நாமம் காதல் செய்மக வைஇட்டான்

என்ற பாடல் காட்டும்.

கண்ணப்பர் பிறந்ததும் அக்குழந்தையை உறவினர்களும் மற்றவர்களும் கையிலெடுக்கும்போது அக்குழந்தை திண்ணென்றிருந்ததால் திண்ணன் எனப் பெயரிட்டனர் என்பது,

அண்ணலைக் கையில் ஏந்துதற்கு அருமையால்
உரிமைப்பேருந் திண்ணன் என்றியம்பும்

என்ற அடிகளால் தெரிய வருகின்றது.

யாவரும்பெரு மகிழ்ச்சியால் இன்புறப் பயந்த
பாவைநல் லுறப்பணி கிளர்பண்பெ லாம்நோக்கிப்
பூவினா ளெனவரு தலிற்பூம்பா வையென்றே
மேவும் நாமமும் விளம்பினர் புவியின்மேல் விளங்க

என்ற பாடல்மூலம் சிவநேசரின் மகளுக்கு அவள் அழகு விளங்கும் பண்பின் காரணமாகவும், பூமகளின் தன்மைகளை ஒத்து விளங்கும் காரணமாகவும் பூம்பாவை என்ற பெயர் இடப்பட்டதை உணரலாம்.

பிறந்த நாளுக்குப் பொருந்தும் வகையில் அந்நாளின் பெயரின் முற்பகுதியைப் பெயருடன் இணைத்து வழங்குதலும் உண்டு. திருவாதிரை நாளில் பிறந்த திருஞானசம்பந்தருக்குத் திரு என்பதை முதலில் இணைத்துப் பெயரிட்டுள்ளனர் என்பதை,

நாம கரணத்தழகு நாள்பெற நிறுத்தி

என்ற அடியால் காணலாம்.

சுந்தரருக்கு அவர் தந்தையின் தந்தையார் பெயர் இடப்பட்டுள்ளது.

இவ்வாறு அக்காலத்தில் பெயரிடப்படும் முறையை அறிய முடிகிறது.

## மூன்றாம் ஆண்டுச் சடங்கு

சைவச் சடங்குகள் பதினாறு என்றும் அவற்றுள் ஒன்று மயிர் நீக்கும் சடங்கு என்றும் கருதப்பெறுகிறது. அக்காலத்தில் குழந்தையின் மூன்றாம் ஆண்டில் இச்சடங்கு நடத்தப்பட்டது. இது மயிர்வினை மங்கலம் செய்தல் என்றும், மயிர் நீக்கு மணவினை என்றும் அழைக்கப்பட்டது. இச்சடங்கை,

வந்து வளர்மூ வாண்டில் மயிர்வினை மங்கலம் செய்து

என்ற சிறுத்தொண்ட நாயனார் புராணப்பாடல் அடியாலும்,

மருணீக்கியார் சென்னிமயிர் நீக்கும் மணவினையும்

என்ற திருநாவுக்கரசர் புராணப் பாடல் அடியாலும் அறிய முடிகின்றது.

## ஏழாம் ஆண்டுச் சடங்கு

அந்தணர்கள் தம் குழந்தையின் ஏழாமாண்டுப் பருவத்தில் உபநயனச் சடங்கு செய்வதை,

நிகழும் முறைமை ஆண்டேழும் நிரம்பும் பருவம் வந்தெய்தப்
புகழும் பெருமை உபநயனப் பொருவில் சடங்கு முடித்து...

என்ற சண்டேசுவர நாயனார் புராணப் பாடல் அடிகள் காட்டுகின்றன.

தக்க பருவம் வந்துற்றதும் அந்தணர்கள் தம் குழந்தைகளுக்குப் பூணூல் அணிவிப்பதைத் தடுத்தாட்கொண்ட புராணத்தில் இடம்பெறும்,

> பெருமைசால் அரசர் காதல் பிள்ளையாய்ப் பின்னும் தங்கள்
> வருமுறை மரபில் வைகி வளர்ந்து மங்கலஞ் செய்கோலத்
> தருமுறை முந்நூல் சாத்தி அளவில் தொல்கலை கள்ஆய்ந்து
> திருமலி சிறப்பின் ஓங்கிச் சீர்மணப் பருவம் சேர்ந்தார்

என்ற பாடல் காட்டுகின்றது.

இவ்வாறு குழந்தைப் பருவத்தில் பல்வேறு சடங்குகள் மேற்கொள்ளப் பெறுவதை அறியமுடிகிறது.

### திருமணம் தொடர்பான சடங்குகள்

இல்லற வாழ்க்கையைத் தொடங்குவதற்கு அடிப்படையான திருமணத்தின்போதும் பல்வேறு சடங்குகள் மேற்கொள்ளப்பட்டன.

### மணநாளைக் குறித்தல்

திருமணம் செய்விப்பதற்கு ஏற்ற நாளைக் குறிக்கும் வழக்கம் காணப்பட்டது. ஏயர்கோன் கலிக்காமருக்கும் மானக்கஞ்சாறனார் மகளுக்கும் மணம் முடிக்க ஏற்ற மங்கல நாளைச் சோதிட நூல் வல்லார் வகுத்துக் கூறியமையை,

> சென்ற வருங்கஞ் சாறர் மணம்இ சைந்தபடி செப்பக்
> குன்றா னையபுயத் தேயர் கோனா ரும்மிக விரும்பி
> நின்ற நிலைமையின் இரண்டு திறத்தார்க் கும்நேர் வாய
> மன்றல் வினைமங் கலநாள் மதிநூல் வல்லவர் வகுத்தார்

என்ற பாடல் உணர்த்துகின்றது.

### முளை சார்த்தல்

திருமணம் செய்விப்பதற்கு ஏற்ற நாளைத் தேர்ந்தெடுத்ததும், பின்னர் ஒரு நல்ல நாளில் முளைசார்த்தல் என்ற சடங்கு மேற்கொள்ளப்பட்டது. இதனை,

மங்கலமாஞ் செயல்விரும்பி மகட்பயந்த வள்ளலார்
தங்குலநீள் சுற்றமெலாம் தயங்குபெருங் களிசிறப்பப்
பொங்கியவெண் முளைப்பெய்து பொலங்கலங்க ளிடைநெருங்கக்
கொங்கலர்தண் பொழில்மூதூர் வதுவைமுகங் கோடித்தார்

என்ற மானக்கஞ்சாறநாயனார் புராணப் பாடலாலும்,

மகிழ்ச்சியால் மணம் மீக்கூறி மங்கல வினைகள் எல்லாம்
புகழ்ச்சியால் பொலிந்து தோன்றப் போற்றிய தொழிலா ஆகி
இகழ்ச்சி ஒன்றானும் இன்றி ஏந்து பூமாலைப் பந்தர்
நிகழ்ச்சியில் மைந்தர் ஈண்டி நீள்முளைச் சாத்தி னார்கள்"

என்ற தடுத்தாட்கொண்ட புராணப் பாடலாலும்,

திருமணஞ் செய்கலி யாணத் திருநா ளும்திகழ் சிறப்பின்
மருவிய ஓரையும் கணித மங்கல நூலவர் வகுப்பப்
பெருகு மணநா ளோலை பெருஞ்சிறப் பினுடன் போக்கி
அருள்புரிந்த நன்னாளில் அணிமுளைப் பாலிகை விதைத்தார்

என்ற திருஞானசம்பந்தர் புராணப் பாடலாலும் அறியலாம்.

மண ஓலை அனுப்பல்

மணநாள் முடிவு செய்யப்பெற்றதும் மண ஓலை தயாரித்து அதைப் பெரியோர்கள் மணமகள் வீட்டாருக்கு அனுப்பி வைப்பர். இதை மண ஓலை என்பர். ஆரூராரின் தந்தை சடங்கவி இசைவு தெரிவித்ததும் மணமகளின் வீட்டாருக்கு மண ஓலை அனுப்புகின்றார். மணமகன் வீட்டு ஆடவரும், மங்கலப் பெண்டிரும் மணநாள் குறித்த ஓலையை மணமகள் வீட்டிற்குக் கொண்டு சென்றனர். அப்போது அவர்களை வரவேற்று மணவோலையைப் பணிவுடன் ஏற்றுக் கொள்கின்றனர். இவற்றை,

மற்றவன் இசைந்த வார்த்தை கேட்டவர் வள்ளல் தன்னைப்
பெற்றவர் தம்பால் சென்று சொன்னபின் பெருகு சிந்தை
உற்றதோர் மகிழ்ச்சி எய்தி மணவினை உவந்து சாற்றக்
கொற்றவர் திருவுக் கேற்பக் குறித்து நாள்ஓலை விட்டார்

மங்கலம் பொலியச் செய்த மணவினை ஓலை ஏந்தி
அங்கயல் கண்ணி னாரும் ஆடவர் பலரும் ஈண்டிக்

கொங்கலர் சோலை மூதூர் குறுகினார் எதிரே வந்து
பங்கய வதனி மாரும் மைந்தரும் பணிந்து கொண்டார்

எனக் காட்டப்படுகின்றன.

திருக்காப்பு அணிவித்தல்

திருமணத்திற்கு முந்தைய நாளில் மணமக்களுக்குத் தீங்குகள் நிகழாவண்ணம் மணமக்களுக்குக் காப்புக் கட்டும் சடங்கு நிகழ்த்தப் பெற்றது. சம்பந்தரின் திருமணத்திற்கு முன்னைய நாளில் மறையவர்களும், ஆடவர்களும், பெண்டிரும் கூடி வாழ்த்திப் பொற்காப்பு அணிவித்தனர். காப்பு அணிவிக்கும் சடங்கு,

மணவினைக் கமைந்த செய்கை மாதினைப் பயந்தோர் செய்யத்

துணைமலர்க் கோதைத் தாமச் சுரும்பணைத் தோளி னானைப்
புணர்மணத் திருநாள் முன்னால் பொருந்திய விதியி னாலே
பணைமுர சியம்ப வாழ்த்திப் பைம்பொன் நாண்காப்புச் சேர்த்தார்

மாறிலாநிறை வளந்தரு புகலியின் மணமீக்
கூறுநாளின் முன்னாளி னில்வேதியர் குழாமும்
நீறுசேர்திருத் தொண்டரும் நிகரிலா தவருக்
காறுசூடி னார்அருட்டிருக் காப்புநாண் அணிவார்

எனக் காட்டப்படுகின்றது.

மணமகனுக்குக் கோலம் செய்தல்

திருமணத்திற்கு முன்னர்த் திருமஞ்சன நீராட்டுதல், வெண்பட்டாடை சார்த்தல், திருவுத்தரியம் சார்த்தல், மணப்பொருட்கள் பூசுதல், அணிகலன்கள் அணிவித்தல், மலர் மாலைகள் அணிவித்தல், பொன் அரியாசனத்தில் அமர்த்துதல், பச்சைக் கருப்பூரம், சுண்ணம், அழகிய பூக்களிலிருந்து ஆக்கிய குளிர்ந்த பனிநீர் இவற்றைக் கூட்டிச் செய்த சந்தனக் குழம்பைப் பூசுதல், விதிப்படி மார்பில் பூணூல் சார்த்துதல், தருப்பையைக் கைவிரலில் அணிவித்தல் ஆகியன நிகழ்த்தப் பெற்றன என்பதை,

வாசநெய் யூட்டி மிக்க மலர்விரை அடுத்து தூநீர்ப்
பாசனத் தமைத்த பாங்கர் படுமணிப் பைம்பொன் திண்கால்
ஆசனத் தணிநீர் ஆட்டி அரிசனஞ் சாத்தி அன்பால்
ஈசனுக் கியான் மேனி எழில்பெற விளக்கி னார்கள்

அகில்விரைத் தூப மேய்ந்த அணிகொள் பட்டாடை சாத்தி
முகில்நுழை மதியம் போலக் கைவலான் முன்கைசூழ்ந்த
துகில்கொடு குஞ்சி ஈரம் புலர்த்தித்தன் தூய செங்கை
உகிர்நுதி முறையில் போக்கி ஒளிர்நறுஞ் சிகழி ஆர்த்தான்

தூநறும் பசுங்கர்ப் பூரச் சுண்ணத்தால் வண்ணப் போதில்
ஆனதண் பனிநீர் கூட்டி அமைத்த சந்தனச் சேறாட்டி
மான்மதச் சாந்து தோய்ந்த மங்கலக் கலவை சாத்திப்
பால்மறை முந்நூல் மின்னப் பவித்திரஞ் சிறந்த கையான்

என்ற பாடல்களால் அறியலாம்.

## உறவினர்கள் பொருள் கொண்டு வருதல்

திருமணத்திற்கு வரும் உறவினர்கள் பல்வேறு பொருட்களைக் கொண்டு வருதல்,

எண்டிசை யினுள்ளோரும் ஈண்டு வளத்தொடு நெருங்கப்
பண்ட நிரைசா லைகளும் பல்வே றுவிதம் பயில
மண்டு பெருநிதிக் குவைகள் மலைப்பிறங் கல்என் மலிய

என்ற திருஞானசம்பந்தர் புராணப் பாடல் அடிகளிலும்,

மணம் முடிந்தபின் தானம் வழங்குதல்,

மனந்தள ரும்இடர் நீங்கி வானவர் நாயகர் அருளால்
புனைந்த மலர்க்குழல் பெற்ற பூங்கொடி யைமணம் புணர்ந்து
தனம்பொ ழிந்துபெரு வதுவை உலகெ லாம்தலை சிறப்ப
இனம்பெரு கத்தம் முடைய எயின்மூ தூர்சென் றணைந்தார்

என்ற மானக்கஞ்சாற நாயனார் புராணப் பாடலிலும் காட்டப்படுகின்றன.

## தாரை வார்த்தல்

சம்பந்தரின் திருமண நிகழ்ச்சியின்போது மணமகளின் தந்தை மணமகனுக்குத் தன் மகளைக் கொடுப்பதாகத் தாரை வார்த்துக் கொடுத்தல்,

பெருகொளி ஞானம் உண்ட பிள்ளையார் மலர்க்கை தன்னில்
மருவுமங் கலநீர் வாசக் கரக முன்னேந்தி வார்ப்பார்
தருமறைக் கோத்தி ரத்தின் தங்குலஞ் செப்பி" என்றன்
அருநிதிப் பாவை யாரைப் பிள்ளையார்க் களித்தேன்" என்றார்

எனக் காட்டப்படுகிறது.

மங்கல நாண் அணிவித்தல்

இசைக் கருவிகள் முழங்க மங்கல நூலில் பொன்னாலாகிய தாலியை மணமகன் மணமகள் கழுத்தில் அணிவிக்கும் வழக்கம் காணப்பட்டது. இத்தாலியை மங்கல நாண் என்றும், பொற்காப்பு என்றும் அழைத்தனர். மங்கல நாணைப் பூட்டிய பின்னர் மணமகளை இல்லறத் துணையாக ஏற்றுக் கொண்டதற்கு அடையாளமாக மணமகன் மணமகள் கையைப் பற்றுதலைப் பாணிக் கிரகணம் என்று அழைத்தனர். மங்கல நாண் அணிவித்த பின்னர் எரிவலம் வரும் வழக்கமும் காணப்பட்டது. இவை,

மறையொலி பொங்கி யோங்க மங்கல வாழ்த்து மல்க
நிறைவளைச் செங்கை பற்ற நேரிழை யவர்முன் அந்தப்
பொறையணி முந்நூல் மார்பர் புகரில் வெண்பொரிகை அட்டி
இறைவரை ஏத்தும் வேலை எரிவலம் கொள்ள வேண்டி

மந்திர முறையால் உய்த்த எரிவல மாக மாதர்
தந்திருக் கையைப் பற்றுந் தாமரைச் செங்கை யாளர்

எனக் காட்டப்படுகின்றன. திருமணமான பெண்கள் தாலி அணிந்திருப்பர் என்பது,

யாதொன்றும் இல்லை யாகி இருபகல் உணவு மாறிப்
பேதுறும் மைந்த ரோடும் பெருகு சுற்றத்தை நோக்கிக்
காதல் செய்மனைவி யார்தங் கணவனார் கலய னார்கைக்
கோதில் மங்கல நூல்தாலி கொடுத்து நெற்கொள்ளும் என்றார்

என்ற குங்கிலியக் கலயநாயனார் புராணப் பாடல் மூலம் புலனாகின்றது.

இறப்புச் சடங்குகள்

குழந்தைச் சடங்குகளைப்போன்று இறப்புச் சடங்குகளும் சமுதாயத்தில் இன்றியமையாத இடம்பெற்றுப் பண்பாட்டைப் பறைசாற்று வனவாய் அமைகின்றன. இவ்வகையில் திருமுறைகளிலும் இறப்புச் சடங்குகள் பற்றிய செய்திகள் இடம்பெறக் காணலாம்.

ஒருவர் இறந்ததும் அவருடைய உறவினர்கள் பிரிவை நினைந்து ஒப்பாரி வைத்து அழுதலையும் சுடுகாட்டிற்குக் கொண்டு சென்று எரியூட்டிவிட்டு நீரில் மூழ்கி வருவர் என்பதையும் பின்வரும் திருமந்திரப் பாடல் காட்டுகின்றது.

ஊரெலாம் கூடி ஒலிக்க அழுதிட்டுப்
பேரினை நீக்கிப் பிணமென்று பேரிட்டுச்
சூரையங் காட்டிடைக் கொண்டுபோய்ச் சுட்டிட்டு
நீரினில் மூழ்கி நினைப்பொழிந் தார்களே

சுற்றத்தினரும், உரிய பெண்டும், ஏனைய மக்களும் ஊர்ப்பொதுவாகிய வாய்க்காலில் சென்று சடங்குகள் செய்து, தூய்மையான நீரைக் கொண்டுவந்து நீராட்டுவதை,

ஆர்த்தெழு சுற்றமும் பெண்டிரும் மக்களும்
ஊர்த்துறைக் காலே ஒழிவர் ஒழிந்தபின்
வேர்த்தலை போக்கி விறகிட் டெரிமூட்டி
நீர்த்தலை மூழ்குவர் நீதியில் லோரே

என்ற திருமந்திரம் பாடலால் அறியலாம்.

இறந்தவர்களைப் பாடையில் ஏற்றி முன்னே பறைகொட்டச் சுடுகாட்டுக்கு எடுத்துச் செல்லும் வழக்கத்தை,

நாட்டுக்கு நாயகன் நம்மூர்த் தலைமகன்
காட்டுக்குச் சிவிகையொன் றேறிக் கடைமுறை
நாட்டார்கள் பின்செல்ல முன்னே பறைகொட்ட
நாட்டுக்கு நம்பி நடக்கின் றவாறே

என்ற திருமந்திரம் பாடல் காட்டுகின்றது.

## நம்பிக்கைகள்

சமுதாயத்தில் மக்களிடையே காணப்படும் நம்பிக்கைகளும் பண்பாட்டின் கூறுகளுள் ஒன்றாகக் கருதப்பெறுகின்றன. திருமுறைகள் பக்தி இலக்கிய வகையைச் சார்ந்தமையால் சமயம் தொடர்பான நம்பிக்கைகள் அதிகம் இடம்பெறுகின்றன.

எல்லாச் செயல்களும் இறைவனின் திருவருள் ஆணையாலே நடைபெறும் என நம்பினர். திருஞானசம்பந்தரிடம் சமணரை வாதில் வென்று, பாண்டியரின் வெப்பு நோயைத் தீர்க்க வேண்டும் என வேண்ட, அவர் இறைவனின் திருவருளாணையால் செய்வேன் என்கிறார். இது,

என்றவர் உரைத்த போதில் எழில்கொள் பூம்புகலி வேந்தர்
ஒன்றுநீர் அஞ்ச வேண்டா உணர்விலா அமணர் தம்மை
இன்றுநீர் உவகை யெய்த யாவரும் காண வாதில்
வென்று மீனவனை வெண்ணீ றணிவிப்பன் விதியால் என்றார்

நோக்கிட விதியி லாரை நோக்கி நான்வாது செய்யத்
தீக்கனல் மேனியானே திருவுளமே

எனவரும் பாடல் அடிகளால் புலப்படுகின்றது.

ஒரு செயல் செய்யத் தொடங்கும் முன்பு இறைவனை வேண்டி விழா எடுத்துப் பரவுக்கடன் செய்து தொடங்க வேண்டும் என நம்பினர். கண்ணப்பருக்கு விற்பயிற்சியைத் தொடங்குவதற்கு முன் தெய்வத்திற்குப் பரவுக்கடன் செலுத்தியமையை,

மல்கிய வளங்கள் எல்லாம் நிறைந்திட மாறில் சீறூர்
எல்லையில் அடங்கா வண்ணம் ஈண்டினர் கொணர்ந்தார் எங்கும்
பல்கிபெருங் கிளைஞர் போற்றப் பராய்க்கடன் பலவும் செய்து
வில்விழா எடுக்க என்று விளம்பி னான்வேடர் கோமான்

என்ற பாடல் காட்டுகின்றது. இதைப்போன்று பரமதத்தன் இறைவனை வேண்டிப் போற்றிக் கலமேறுதல்,

கலஞ்சமைத் தற்கு வேண்டும் கம்மி யருடனே செல்லும்
புலங்களில் விரும்பு பண்டம் பொருந்துவ நிரம்ப ஏற்றிச்
சலந்தரு கடவுள் போற்றித் தலைமையாம் நாய்கன் தானும்
நலந்தரு நாளில் ஏறி நளிதிரைக் கடல்மேற் போனான்

எனக் காட்டப்படுகின்றது.

இறைவனின் கடைக்கண் பார்வை நேராக விழும்போது நோய் முதலிய தீமைகள் அகலும் என நம்பினர். கொல்லிமழவன் தன் மகளுக்கு முயலகன்நோய் வந்துற்றபோது இறைவன் திருமுன்னர்க் கொண்டுபோய் இடுகின்றான். இதைப்போன்று நோன்புகளை மேற்கொண்டால் பல நன்மைகள் கிட்டும், நோன்புகளை மேற்கொண்டால் மேலுலகம் கிட்டும், பாவை நோன்பு நோற்றால் திங்கள் மும்மாரி பொழியும், உண்ணா நோன்பு மேற்கொண்டால் நன்மை கிட்டும் , புனித நீராடினால் தீயவை அகலும் என்ற நம்பிக்கைகளில் கோடித் தீர்த்தம் ஆடுதல், காலையிலும் மாலையிலும் நீராடுதல், காவிரி, கங்கை, குமரி, சந்திர, சூரிய, அக்கினிக் குளங்களில் நீராடுதல் தைப்பூச நீராடல் ஆகிய நம்பிக்கைகளை அறிய முடிகின்றது.

குழந்தைப் பேற்றிற்காக நாகனின் மனைவி செவ்வேள் ஏந்திய முருகவேளின் திருமுன்றிலில் சென்று பரவி நாடொறும் பரவுக்கடன் புணுகிறாள். இதனால் இறைவனை வேண்டினால் குழந்தைப் பேறு கிட்டும் என்ற நம்பிக்கை வெளிப்படுகின்றது.

பொருவருஞ் சிறப்பின் மிக்கார் இவர்க்கினிப் புதல்வர்ப் பேறே
அரியதென் றெவரும் கூற அதற்படு காத லாலே

முருகலர் அலங்கற் செவ்வேல் முருகவேள் முன்றிற் சென்று
பரவுதல் செய்து நாளும் பராய்க்கடன் நெறியில் நிற்பார்

என்ற பாடலால் இதனை அறியலாம்.

இறைவன் உறையும் திருக்கோயில்கள் அனைத்திலும் மறைவிதிப்படி நாள் வழிபாடுகளையும், சிறப்பு வழிபாடுகளையும் முட்டாது செய்ய வேண்டும். அவ்வாறு செய்யத் தவறினால் உலகில் எண்ணற்ற கொடிய நோய்கள் உருவாகும். வேண்டும் காலத்தில் மழை பெய்யாது பொய்க்கும். மன்னன் மானமும் மறமும் இழந்து அழிவான் என்று நம்பியமையைத் திருமூலர் தம் திருமந்திரத்தில் வெளிப்படுத்துகின்றார்.

குழந்தை வரம் வேண்டி இறைவனுக்குக் காணிக்கை செலுத்தும் வழக்கம் நிலவியமையையும் அறியமுடிகிறது. நாகனின் மனைவி இவ்வாறு குழந்தை வரம் வேண்டிக் காணிக்கை செலுத்தியமையை,

வாரணச் சேவ லோடும் வரிமயிற் குலங்கள் விட்டுத்
தோரண மணிகள் தூக்கிச் சாரும் பணிகதம் பம்நாற்றிப்
பேரணி நெடுவே லோற்குப் புகழ்புரி குரவை தூங்க
பேரணங் காடல் செய்து பெருவிழா எடுத்த பின்றை

என்ற பாடல் உணர்த்துகிறது.

இதைப்போன்று பின்வருவனவற்றைத் தீய நிமித்தங்களாகக் கருதியுள்ளனர்.

கூகை, ஆந்தை போன்ற பறவைக் கூட்டங்கள் தம்முட் போர் செய்து அரற்றுதல்

கையில் வைத்துள்ள பொருள் நழுவிக் கீழேவிழுதல்

கால் தடுமாறுதல்

இடக்கண் துடித்தல்

வழிபடு தெய்வத்திற்குரிய மரம் வேருடன் அற்று விழுதல்

கழுதை மேற்படரல், பெண்டிர் ஊழையிட்டுப் புலம்பல், மாற்றுச் சமயத்தார் உழக்குதல் போன்ற கனவுகள் காணுதல்

கடலில் மீன்கள் படிதல்

விரிசுடர் வீழ்தல் முதலியன

வார நாட்களில் திங்களும் சனியும் கீழ்த்திசையிலும், புதன் வடக்குத் திசையிலும், சனியும் வெள்ளியும் மேற்குத் திசையிலும், வியாழன் தெற்குத்

திசையிலும் பயணம் செய்யக் கூடாது என்று மக்கள் நம்பிய நம்பிக்கையைத் திருமூலர் வெளிப்படுத்துகின்றார்.

வாரத்திற் சூலம் வரும்வழி கூறுங்கால்
நேரொத்த திங்கள் சனிகிழக்கே யாகும்
பாரொத்த சேய்புதன் உத்தரம் பானுநாள்
நேரொத்த வெள்ளி குடக்காக நிற்குமே

தெக்கண மாகும் வியாழத்துச் சேர்திசை
அக்கணி சூலமுமா மிடம்பின் னாகில்
துக்கமு மில்லை வலமுன்னே தோன்றிடின்
மிக்கது மேல்வினை மேன்மேல் விளையுமே"

மேலும்,

பரணி, கார்த்திகை, சித்திரை, சுவாதி, பூரட்டாதி ஆகிய நட்சத்திரங்களில் வழி நடத்தல் கூடாது.

தெற்கும், வடக்கும் ஆகிய திசைகள் வீடுபேற்றை அளிக்கும்.

மகத்திற் புகுந்த சனி நன்மையைக் கெடுக்கும்.

குழந்தைகள் பிறக்கும் நேரம் நல்ல நேரமாக இருக்க வேண்டும்.

திருமணம் நடக்கும் நேரம் நல்ல நேரமாக இருக்க வேண்டும்.

குழந்தைகளுக்கு நல்ல நேரத்தில் கல்வியைத் தொடங்க வேண்டும்.

கட்டுவிச்சி கூறும் குறி உண்மையாக இருக்கும்.

வேப்பங்குச்சியை இழைத்துக் காப்புக் கட்டினால் நோய்கள் நீங்கும்.

வில்வித்தையைப் பயில்வோர்க்கும், அவர்கள் பிடிக்கும் வில்லுக்கும் காப்பு இட்டால் நன்முறையில் தேர்ச்சி பெறுவர்.

அந்திப் பொழுதில் நாற்சந்தியில் உலவக் கூடாது.

சிலருடைய பார்வை தீமை விளைவிக்கும்.

மாலைப்பொழுதில் கடுகின் புகை ஊட்டினால் தீய சக்திகள் அகலும்.

அறச்சாலைகள் அமைத்தல், சோலைகள் அமைத்தல், குளங்கள் தோண்டுதல்

ஆகிய செயல்களால் நன்மைகள் விளையும்.

மன்மதன் நோன்பிருந்தால் பிரிந்தவர்கள் கூடுவர்

என்பன போன்ற நம்பிக்கைகள் மக்களிடையே நிலவியமையை அறிய முடிகிறது.

### உருவப் பண்பாட்டுக் கூறுகள்

பண்பாட்டின் வகைகளில் ஒன்றாகிய உருவப் பண்பாட்டின் கூறுகளையும் திருமுறைகள் மூலம் அறியமுடிகின்றது.

### அணிகலன்கள்

இறைவன், இறைவி, மன்னன், மக்கள் ஆகியோருடைய அணிகலன்கள் பற்றிய குறிப்புகள் கிடைக்கின்றன. அவை அகரவரிசையில் தரப்பெறுகின்றன.

ஆணி

இரும்புக் காப்பு

இரும்புமணிச் சதங்கை

உச்சி மணிச்சுட்டி

ஐம்படைத் தாலி

ஒட்டியாணம்

ஒற்றைவடம்

கங்கணம்

கடிம்பு

கலைமான் கொம்பாலான குழை வடிவ அணி

கழல்

கனகவளை

காளை

கிண்கிணி

கிறி

குதம்பை

குழை

கைச்செறி

மணிவடம்

சதங்கை

சிலம்பு

சுட்டி

சுழியம்

சூடகம்

சூளாமணி

செவிப்பூ

தட்டையாக வடிவமைத்த மாலை

தோடு

தோள்வளை

நவமணிப்பட்டம்

பாடகம்

புலி நகச்சுட்டி

புலிப்பல் தாலி

பொற்சுரிகை

பொன்வடம்

மணி ஆரம்

மலை வேப்பங்கொட்டையை இடையிடையே கோத்த மணிக்கோவை

முஞ்சிப் புல்லாலான அரை நாண்

முத்தாலான அணி

முள்ளம்பன்றியின் முள்ளை இடையிடையே கோத்த புலிப்பல் மாலை

மேகலை

மோதிரம்

யானைக் கொம்பாலான தண்டை முதலியன.

கருவிகள்

இறைவன் கைகளிலுள்ள கருவிகள் பற்றியும், மக்கள் பயன்படுத்தும் கருவிகள் பற்றியும் அறிய முடிகிறது. அவை அகர வரிசையில் தரப்பெறுகின்றன.

| | |
|---|---|
| உடுக்கை | வேய்குழல் போன்ற இசைக்கருவிகள் |
| ஊதுகொம்பு | அரிவாள் |
| கண்டை | இரும்பு உலக்கை |
| கல்லவட்டம் | ஒளிவட்டம் |

காளம்
குழல்
கொக்கரை
கொட்டு
கொடுகொட்டி
சச்சரி
சிறுபறை
சின்னம்
தன்னுமை
தாளம்
திமிலை
துடி
துந்துபி
படகம்
பம்பை
பறை
முரசு
முழவு
மொந்தை
யாழ்
வீணை
வெண்சங்கு

குற்றுடைவாள்
தூலம்
தண்டு
பலகை
பாலம்
பிண்டி
வாள்
வில்
வேல் போன்ற கருவிகள்

## மணப்பொருள்களும் அழகுப் பொருட்களும்

மக்கள் தம்மை அலங்கரிக்கும் பலவகையான மணப்பொருட்களையும் அழகுப் பொருட்களையும் பயன்படுத்தியுள்ளனர். அவை அகரவரிசையில் தரப்பெறுகின்றன.

அகில்
குங்குமக் குழம்பு
சந்தனம்

அஞ்சனம்
அரிதாரப்பொட்டு
இலைத்தளிர்

| | |
|---|---|
| சாந்து | பூமாலை |
| சிந்துாரப்பொடி | மயிற்பீலி போன்ற அழகுப் பொருட்கள் |
| செம்பஞ்சிக்குழம்பு | |
| நானப்பொடி | |
| பச்சைக் கருப்பூரம் | |
| பனிநீர் | |
| புனுகு போன்ற மணப்பொருட்கள் | |

உணவுப்பொருட்கள்

மக்கள் தம் இருப்பிடங்களுக்கேற்றவாறும் தொழில்களுக்கேற்ற வாறும் கால நிலைகளுக்கேற்றவாறும் பலவகை உணவுகளை உண்டனர். அவை வருமாறு:

| | |
|---|---|
| அடகுக் கீரை | சிறுகதலிக்காய் |
| அவல் | செங்கீரை |
| இளநீர் | செந்நெல் அரிசி |
| ஈசல் உணவு | தயிர் |
| ஊன் | திணைச்சோறு |
| ஐவன அரிசி | நெய் |
| கனி | நெய்ச்சோறு |
| கார்நெல் | புல்லரிசிச் சோறு |
| கிழங்கு | மலைத்தேன் |
| மாவடு | |
| மூங்கிற்சோறு | |
| விளாம்பழம் | |

காய்கள், கனிகள், கிழங்குகள், திடப்பொருட்கள் போன்றவற்றை உணவாகப் பயன்படுத்தியுள்ளனர்.

மேலும் உணவின் தன்மைக்கேற்ப உணவை உண்பன, தின்பன, நக்குவன, பருகுவன எனப் பகுத்துள்ளமையையும் இளையான்குடி மாறநாயனார் பாடல் மூலம் அறியலாம்.

> கொண்டு வந்து மனைப்புகுந்து குலாவு பாதம் விளக்கியே
> மண்டு காதலின் ஆசனத் திடைவைத் தருச்சனை செய்தபின்

உண்டி நாலுவிதத்தி லாறு சுவைதி றத்தினில் ஒப்பிலா
அண்டர் நாயகர் தொண்டர் இச்சையில் அமுதுசெய்ய அளித்துள்ளார்

என்ற பாடல் இதனைக் காட்டுகிறது.

## உடைகள்

அக்காலத்தில் ஆடவர்களும், பெண்டிரும், துறவியரும் அணிந்த ஆடைகள் பற்றியும் அறிய முடிகிறது. அவை:

| | |
|---|---|
| கச்சு | நூலாலான சிற்றாடை |
| கந்தை | பட்டு |
| (நாலைந்து ஆடைகளை ஒன்றன்மேல் ஒன்றாக வைத்து நூலிழைகள் ஒட்டப்பட்ட போர்வை) | |
| காம்புத்துகில் | பள்ளிக்குப்பாயம் |
| குப்பாயம் | பொன்னாலாகிய நூல் கலந்த ஆடை |
| கீழ் | மரவுரி முதலியன. |
| கூறையாடை | |
| தோலாலான ஆடை | |
| நால்விரல் கோவண ஆடை | |

## பிற பொருட்கள்

முற்கூறியன தவிர,

வாயானது சிறுத்துப் பக்கம் பெருத்த மண்ணால் ஆகிய குடம்

மட்கலம்

இலைச் சருகாலான உண்கலம்

கிண்ணம்

தடா

குடம் போன்ற பாத்திர வகைகள்

கண்ணி

கோவை

தளிர்மாலை

தொடையல்

பச்சிலைமாலை

பிணையல்

முடிமாலை போன்ற மாலை வகைகள்

பூம்படுக்கைகள்

யானைத் தந்தத்தாலான கால்களையுடைய கட்டில்

பொன்

வெள்ளி

பல உலோகங்கள் கலந்த புணர்ச்சி உலோகங்கள்

பொற்காசுகள்

நிறைகோல்கள் போன்ற பொருட்கள் பற்றியும் அறிய முடிகின்றது.

இவ்வாறு, திருமுறைகள் இறைவன் பெருமைகள், இறையனுபவங்கள், அடியார் பண்புகள், இறைவனை அடையும் வழிகள் முதலியவற்றைக் கூறும் சமய இலக்கியமாக மட்டுமன்றி மக்களின் பண்பாட்டைப் பறைசாற்றும் பண்பாட்டு இலக்கியமாகவும் சமுதாய இலக்கியமாகவும் திகழக் காணலாம்.

## மேற்கோள் சான்றுகள்


1. சோ. ந. கந்தசாமி, தமிழும் தத்துவமும், ப. 340
2. P.C. Dep. **Rural Sociology.** p. 10
3. James B. Mckee. Sociology. **A Study of Society.** p. 128
4. Ronald W. Smith. Frederic W. Preston, **Sociology An Introduction,** p. 169
5. George Ritzer,. **Sociology.** p. 449
6. Reinanch S. Orphen. **A History of Religion,** p. 3
7. க. வெள்ளைவாரணனார், "சங்க இலக்கியத்தில் சமய நோக்கு", சங்க இலக்கியக் கருத்தரங்கம், ப. 2
8. வை. இரத்தினசபாபதி, "அணிந்துரை" சமய இலக்கியங்கள், ப. 7
9. குன்றக்குடி அடிகளார், நமது நிலையில் சமயம் சமுதாயம், ப. 2

10. George Ritzer, Op. cit. p. 449
11. Jon. M. Shepered. **Sociology.** p. 349
    Ronald W. Smith. Op. cit. P. 220. 223. 228
    Kingsley Davil. Human **Sociology.** p. 529
12. Ronald W. Smith. Op.cit. p. 223
    Jon M. Shepared, op. cit. pp. 354-355
    Ambrore Bierece. The England Devil's Dictionary. p. 241
13. Ronald. W. Smith. Op. cit. p 19
14. David Dresselter, **Sociology, The Study of Human Interaction.** p. 33
15. **கா. சிவத்தம்பி, தமிழ் இலக்கியத்தில் மதமும் மானுடமும்,** ப. 14
16. **அ. தட்சிணாமூர்த்தி, தமிழர் நாகரிகமும் பண்பாடும்,** ப. 23
17. Theodore Caplow, Sociology. p. 55
18. Paul B. Hurton, Chester L. Hunt. Sociology. p. 60
19. Malvin De Fleur. Willam V.D. Antonio, Lois D. Fleur, **Sociology,** pp.99-100
20. Bernard Phillips. **Sociology.** pp. 30-225
21. **Dictionary of Sociology,** p. 90
22. Paul B. Hurton,. op. cit. p. 82
23. Theodore caplow. op. cit. pp. 113-114
24. Malvin De Fleur. op. cit. pp. 113-114
25. Donald Light, Jr. Suzane Keller. **Sociology.** p. 83
26. Malvin De Fleur. op. cit. p. 114
27. Theodore caplow. op. cit. p 13
28. George Ritzer, op. cit. p. 451
29. **Dictionary of Sociology.** p. 84

## பயன்பட்ட நூல்கள்

### இலக்கியம்

திருஞானசம்பந்த சுவாமிகள் அருளிச்செய்த தேவாரப் பதிகங்கள் (தலமுறை)
திருப்பனந்தாள் ஸ்ரீகாசிமடம்

பன்னிருதிருமுறைப் பதிப்பு வெளியீடு
1980

திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம் (தலமுறை)
ஸ்ரீஆதிகுமர குருபரசுவாமிகள் 304ஆம்ஆண்டு மாகேசுவர பூஜைத் திருநாள் வெளியீடு
1992

திருமந்திரம்
திருவாவடுதுறை ஆதினம்
திருவாவடுதுறை
1987

திருவாசகம்
ஸ்ரீராமகிருஷ்ண தபோவனம்
திருச்சி
1970

திருவிசைப்பா, திருப்பல்லாண்டு
திருலோக்கி ஸ்ரீகைலாசநாதர் திருக்கோயில்
குடமுழுக்கு விழா வெளியீடு
1994

பெரியபுராணம்
திருவாவடுதுறை ஆதீனம்
1988


## நூல்கள்

### தமிழ்


| | |
|---|---|
| கந்தசாமி, சோ. ந. | தமிழும் தத்துவமும்<br>மணிவாசகர் நூலகம்<br>சிதம்பரம்<br>1976 |
| குன்றக்குடி அடிகள் | நமது நிலையில் சமயம் சமுதாயம்<br>சென்னைப் பல்கலைக்கழகம்<br>சென்னை<br>1975 |
| குன்றக்குடி அடிகள் | சமய இலக்கியங்கள்<br>இந்தியா புக் ஹவுஸ்<br>சென்னை<br>1981 |

வெள்ளைவாரணன், க.
"சங்க இலக்கியத்தில் சமய நோக்கு",
சங்க இலக்கியக் கட்டுரைகள்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்
1984

**ஆங்கிலம்**

Deb. P.C
**Rural Sociology-An Introduction**
Kalyani Publishers
New Delhi
1981

George Ritzer
Kenneth C.W. Kammeyer
Norman R. Yetman
**Sociology- Experiencing A Changing Sociology**
Allyn and Bacon Inc
Boston
1979

Jon M. Shepered
**Sociology**
West Publishing Company
Newyork
1981

Melrwit De Fleur
William V.D Antonio
Loie, D. DeFleur
**Sociology-The Study of Society**
Wordsworth Publishing Company Inc
California
1970

Paul B. Hurton
Chester L. Hunt
**Sociology**
Mc. Grow Hill
Tokyo
1980

Ronald W. Smith
Frederick W. Preston
**Sociology – An Introduction**
St. Martin's Press
Newyork
1976

# உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
## சென்னை - 600 113

## அண்மை வெளியீடுகள்

| | ரூ.பை. |
|---|---|
| உலகத் தமிழிலக்கிய வரலாறு கி.பி. 901 - கி.பி. 1300 | 100.00 |
| பண்டிதமணி மு. கதிரேசன் செட்டியார் | 40.00 |
| தொல். பொருள். (அகம்-புறம்)-ஆங்கில மொழிபெயர்ப்பு | 50.00 |
| தமிழ் ஆய்வு இதழ்கள் | 50.00 |
| வேதாத்திரியத்தில் சமூகவியல் இறையியல் சிந்தனைகள் | 130.00 |
| தமிழிலக்கிய வகைமையியல் தொகுதி - 3 | 150.00 |
| தமிழிலக்கிய வகைமையியல் தொகுதி - 2 | 115.00 |
| தமிழிலக்கிய வகைமையியல் தொகுதி - 1 | 130.00 |
| மௌனத்தின் அதிர்வுகளும் மொழியும் - பெண் | 40.00 |
| உலகத் தமிழிலக்கிய வரலாறு கி.பி. 1851 - 2000 | 180.00 |
| இதழாளர் பெரியார் | 160.00 |
| காஞ்சிபுரம் கி.பி. 6-ஆம் நூற்றாண்டுக்கு முன் | 65.00 |
| திருவாவடுதுறைப் புராணம் | 250.00 |
| மகாவித்துவான் ரா. ராகவையங்கார் | 30.00 |
| திருக்குறளில் பொதுநிலை உத்திகள் | 30.00 |
| தமிழ்க்கடல் இராய சொக்கலிங்கம் | 30.00 |
| தமிழ் இதழ்கள் - விடுதலைக்குப் பின் | 40.00 |
| பாவாணரின் ஞாலமுதன்மொழிக் கொள்கை | 45.00 |
| பெண்ணியப் படைப்பிலக்கியம் | 75.00 |
| தமிழக வானவியல் சிந்தனைகள் | 35.00 |
| பள்ளு இலக்கியம் மறுவாசிப்பு பிரதிக்கு வெளியே | 75.00 |
| இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்க் கவிதை | 80.00 |
| தமிழியல் ஆய்வுச் சிந்தனைகள்-நாட்டுப்புறவியல்,கலை,பண்பாடு | 90.00 |
| தொல்காப்பியம்-எழுத்ததிகாரம் மூலமும் நச்சினார்க்கினியர் உரையும் | 150.00 |
| வாழிய செந்தமிழ் | 140.00 |
| பேராசிரியர் அ.மு.பரமசிவானந்தம் | 40.00 |
| தமிழக எல்லைப் போராட்டங்கள் | 60.00 |
| திருப்புகழ் ஒளிநெறி பகுதி - I | 90.00 |
| திருப்புகழ் ஒளிநெறி பகுதி - II | 90.00 |
| திருப்புகழ் ஒளிநெறி பகுதி - III | 80.00 |
| தொல்காப்பியம்-பொருளதிகார மூலமும் நச்சினார்க்கினியர் உரையும் | 275.00 |
| தொல்காப்பியம் - பொருளதிகார மூலமும் பேராசிரியர் உரையும் | 250.00 |

Pub.No. 600 பண்பாட்டு நோக்கில் திருமுறைகள் 30.00